கல்கி



KALKI ஜுலை 8, 1956 **4** அணா



கமலா ஒரு பாடம் கற்றுக் கொள்கிறாள்...
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
இந்தியாவில் தயாரித்தது
துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது.
S. 238-50 TM

மலர் 15 இதழ் 49

ஸ்ரீ கல்கி

துன்முகி ௵ ஆனி 25

ஜூலை 8, 1956

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

மார்க்கண்டேயருக்கு அபயம்.



உலகில் தர்மம் உள்ளளவும் தமிழ் மொழியும் சிரஞ்சீவியாக இருக்கும்.



மலர் 15 | இதழ் 49

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ஆனி 25

இலங்கையில் மொழிப் பிரச்னை

இலங்கையில் தோட்ட வேலைகளிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டு வசித்து வரும் இந்தியர்களின் பிரச்னை வேறு; இலங்கையிலேயே குடியிருப்பதாகத் தீர்மானித்து அந்நாட்டு மக்களுடன் ஒன்றுபட்டு இலங்கைவாசிகளாக வாழும் இந்தியர்களின் பிரச்னை வேறு.

இலங்கையிலேயே பல நூற்றுண்டுகளாக யாழ்ப்பாணத்திலும் மற்றப் பாகங்களிலும் பரம்பரையாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் இலங்கைக்குடிகளின் பிரச்னை இவ்விரண்டினின்றும் வேறு.

இந்த மூன்றுவது பிரச்னைதான் தற்போது. இலங்கையில் பூசலுக்கும் உயிர்ச் சேதத்துக்கும் பெருந் துயரத்துக்கும் காரணமாகி வருகிறது.

தற்போது பதவிக்கு வந்திருக்கும் திரு பண்டாரநாயகரின் யோசனைகளும் அவருடைய மந்திரி சபையின் போக்கும் இலங்கைத் தீவை இரண்டு பாகமாகப் பிரித்து வருகின்றன. உலக சாந்தியை விரும்பும் மக்கள் அனைவருக்கும் முக்கியமாகத் தமிழ் பேசும் மக்களுக்குக் கவலையும் துயரமும் உண்டாக்கி வருகின்றன.

சுதந்திரம்பெற்ற தேசங்கள் குடியரசு நீதியைச் சரியான முறையில் காப்பாற்ற வேண்டியது ராஜ நீதியாகும். அந்நிய ஆட்சியில் சிறுபான்மை மக்கள் பெற்றிருந்த உரிமைகளைக் குறைத்தோ அழித்தோ விட்டால் அந்த மக்கள் சுதந்திரத்தையும் குடியரசையும் வெறுப்பார்கள். இது நாட்டின் பலத்தைக் குறைத்துச் செல்வாக்கையும் அழிக்கும். சுதந்திரக் குடியரசில் சிறுபான்மையோருடைய உரிமைகளையும் வாழ்க்கைச் சௌகரியங்களையும் மிக ஜாக்கிரதையாகக் கவனித்துக் காப்பாற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான் புதிதாகச் சுதந்திரம் அடைந்த ராஜ்யங்களின் செல்வாக்கும் புகழும் உலகத்தில் பெருகும்.

குடியரசில் பெரும்பாலோரின் அபிப்பிராயத்தின்படி அரசாட்சி நடைபெற வேண்டும் என்பது உண்மை. ஆனால், அதே சமயம் பெரும்பாலோருக்குக் கடமையும் உண்டு. சிறுபான்மையோரின் உள்ளம் புண்படாதபடி ஆட்சி நடத்துதல் பெரும்பாலோரின் கடமையாகும்.

ஒரு கூட்டத்தாரை அந்நியர்களாகக் கருத ஆரம்பித்து அவர்களைத் தள்ளி வைக்கும் முறையில் காரியங்கள் நடத்தினால் அரசாட்சி நிலைகெட்டுப் போகும்.

இலங்கைத் தீவு மிகச் சிறிய தேசம். அது சுதந்திரம் அடைந்திருக்கிறது. அநீதியின்றி ஆட்சி நடந்தால்தான் புதிதாக அடைந்த சுதந்திரம் உலகத்தின் ஆசியைப் பெறும். இதற்கு மாறாக லக்ஷக்கணக்கான பழங் குடிகளின் உள்ளங்களைத் துன்புறுத்தும் முறையில் தற்போது பண்டாரநாயகரின் அரசாங்கம் நடைபெற்று வருகிறது. வெளிநாட்டு விஷயங்களில் இந்தியப் பிரதமர் நேரு அவர்களுடைய கொள்கைகளை அனுசரித்து வரும் இலங்கைப் பிரதமர், தம்முடைய நாட்டில பழங் குடிகளாக இருந்துவரும் தமிழர்களை உள்ளம் நோகச் செய்வது மூடி வைக்கும் விஷயம் ஆகாது.

சிறு நாடுகளில் ஒற்றுமையும் நீதிமுறையும் மிக அவசியம். பெரிய தேசங்களிலாவது ஓரளவு ஒற்றுமையின்றிச் சமாளிக்கலாம். சின்ன நாட்டில் அது முடியாது. பெரிய பாத்திரத்தில் ஓட்டை யிருந்தாலும் சமாளிக்கலாம்; சின்னப் பாத்திரம் ஓட்டையா யிருந்தால் ஒன்றுக்கும் உதவாது.

இலங்கையில் மொழிச் சண்டை வளர்ந்தால் உடலின் உறுப்புகள் சண்டை போட்டுக் கொண்ட கதையாகும். குடியரசும் சுதந்திரமும் ஒரு உயிர்கொண்ட அமைப்பாகும். பாகம் போடும் விஷயமல்ல.

தேர்தல் காலத்தில் எதையாவது சொல்லி வெற்றி பெறலாம். ஆனால் ராஜ்ய பரிபாலனத்தில் அடிப்படை நீதிமுறைகளைப் புறக்கணிக்கக் கூடாது. இலங்கைத் தீவில் பழைய குடிகள் பேசிவரும் இரண்டு பாஷைகளும் சம உரிமையோடு கௌரவிக்கப்படவேண்டும். இலங்கையிலுள்ள பழைய தமிழ்க் குடிகள் முன்காலத்தில் செய்த தேசப் பணியை மறத்தல் அகம்பாவமாகும். அந்த அகம்பாவம் நாட்டைப் பள்ளத்தில் தள்ளிவிடும்!

நாட்கள் செல்லச் செல்ல இலங்கையிலுள்ள அனைவருமே சுதந்திர ஆட்சியில் இரண்டு பாஷைகளையும் படிப்பார்கள், பேசுவார்கள். வெறுப்பும் பூசலுமின்றி இரு மொழிகளுக்கும் சம உரிமை உடனே தந்து விட்டால் இலங்கையின் புகழ் ஓங்கும்.

கனடா என்கிற அமெரிக்க ராஜ்யத்திலும், தென் ஆப்பிரிக்காவிலும் இரு மொழிகள் சம உரிமையும் சம அந்தஸ்தும் பெற்றிருக்கின்றன. அந்த நாடுகளில் யுத்தத்தில் தோற்றவர்களுடைய தாய்மொழியையும் சம மதிப்புடன் போற்றி வருகிறார்கள். இலங்கையில் சிங்களம் பேசுபவர்கள், தமிழர்களோடு போர் புரிந்து வெற்றி பெறவில்லை. இரு பாலாரும் சேர்ந்து உழைத்துச் சுதந்திரம் பெற்றார்கள். கனடாவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் செலாவணியிலிருக்கும் நீதி முறையையும் மொழி முறையையும் இலங்கையிலும் ஒப்புக் கொண்டுதான் தீர வேண்டும்.

அரசாட்சி மொழிகளாகத் தமிழும் சிங்களமும் இரண்டுமே ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். இரு பாலாரும் இதுவரையில் மிக ஊக்கமாகப் படித்துப் பயிற்சி பெற்றிருக்கும் ஆங்கில பாஷையைத் தள்ளிவிட வேண்டிய அவசியமும் இல்லை. ஆங்கிலம் என்பது ஒரு உலக மொழி. சர்வதேச ராஷ்டிராந்திர பாஷையாக வழங்கி வருகிறது. அதை நாம் வெறுக்க வேண்டிய அவசியமில்லை. ஆங்கிலம் நாம் சம்பாதித்த பொருள். அதைக் கடலில் போட்டு விட்டு வறுமையைச் சம்பாதித்துக் கொண்டு இரு கூட்டமாகப் பிரிந்து சண்டை போட்டுக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகாது.

* * *

சிங்களம் பேசுகிறவர்கள் தாங்கள்தான் இலங்கையின் ஆதி குடிகள் என்று தவறாக எண்ணக் கூடாது. சிங்கள பாஷையானது, வங்காளி, உரியா முதலிய மொழிகளோடு ஒட்டிய பாஷை. தெற்கே உள்ள தீவில் தனிச் சொந்தம் அது பாராட்ட முடியாது. பல நூற்றாண்டுகளாக இலங்கையில் வாழ்ந்து வந்திருக்கும் மக்களில் யார் முந்தியவர், யார் பிந்தியவர் என்று வேறுபடுத்திக் கொள்வது மடமையாகும்.

பெரும்பாலோரின் உரிமை உண்டு; அதனுடன் கடமையும் உண்டு. கடமையைப் புறக்கணித்தால் உரிமையே அழிந்து போகும்.

இலங்கையில் வாழும் பழங்குடிகள், உடல் பொருள் ஆவி அனைத்தையும் துறக்கத் தயாராக நின்று தங்கள் தர்ம யுத்தத்தை நடத்துவார்களாக. வெளியிலிருந்து உதவி எதிர்பார்க்காமல் தைரியமாகத் தன்னம்பிக்கையுடன் அகிம்சாமுறையில் வெற்றிபெற வேண்டும். முயற்சி வீண் போகாது; வெற்றி தரும்.

நாணயக் குழப்பம்

நாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்கிற பிரகிருதிகள் உண்டு அல்லவா?

புது நாணய முறை இப்போது ஆரம்பிப்பது அவசியம் என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். மிகத் துரிதமாக அதைப் பற்றி வேலை செய்து வருகிறார்கள். பன்னிரண்டு, பதினாறு என்றெல்லாம் வாய்பாடு நெட்டுருச் செய்வது கஷ்டம் என்றும், எல்லாம் பத்து பத்தாக இருந்தால் கணக்குகள் கூட்டவும் பெருக்கவும் மிகச் சௌகரியமாகப் போகும் என்கிற கொள்கைக்குப் பெயர் தசாம்ச முறை. இந்த முறைப்படி வடக்கே பைசா என்று சொல்லப்படும் காலணாவுக்குப் பதில் புது பைசா ஒன்று ஏற்படுத்துகிறார்கள். நூறு புதுப் பைசா கொண்டது ஒரு ரூபாய் என்பது அவர்கள் போட்டிருக்கும் திட்டம். ஒரு ரூபாயை நூறு பங்காகச் செய்து புதுப் பைசா ஏற்படப் போகிறது. புதுப் பைசாவினுடைய மதிப்பு ரூபாயில் நூறில் ஒரு பங்காகும். அதாவது இரண்டு தம்பிடிக்குக் கொஞ்சம் குறைவு.

'புதுப் பைசா'வுடன் பழைய காலணாவும் கொஞ்சநாள் வரையில் கூடவே செலாவணியிலிருக்கும். இதனால் கிராமாந்திரங்களில், சந்தைகளிலும், பட்டிக்காட்டுக் கடைகளிலும் குழப்பமும் மோசடியும் சச்சரவும் ஏராளமாக உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்காக ஒரு யோசனை சொல்லப்பட்டது. 'புதுப் பைசா' ஒன்றும் வேண்டியதில்லை. இப்போது செலாவணியிலிருக்கும் காலணா, அதாவது மூன்று தம்பிடி பெறுமான நாணயம் இருந்தபடியே இருக்கலாம்; தசாம்ச முறைக்காக அதை அடிப்படையாக வைத்து, நூறு காலணா காசு கொண்டது ஒரு ரூபாயாகச் செய்து ரூபாயினுடைய மதிப்பை உயர்த்தி விடலாம் என்று ஆலோசனை சொல்லப்பட்டது. அதாவது தற்போது வழங்கும் ரூபாய்க்குப் பதிலாக ஒரு ரூபாய் ஒன்பது அணா பெறுமான பெரிய ரூபாய் செலாவணியில் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் கிராமாந்திரங்களில் ஏழைகளுடைய வியாபாரங்களில் குழப்பமோ மாறுதலோ இருக்காது. இருபத்தைந்து ரூபாய்க்குப் பதில் 16 புது ரூபாய் செலாவணியாகும். ஒரு புது ரூபாயின் மதிப்பு

பழைய ஒரு ரூபாய் ஒன்பதணாவின் மதிப்பாகும். 64 புது ரூபாய்கள் பழைய நூறு ரூபாயின் மதிப்பாகும். கிராமாந்திரங்களில் ஏழைகளின் விற்பனை முறையில் மாறுபாடில்லாமல் ரூபாய் கணக்கில் மாத்திரம் மாற்ற வேண்டியதாகும். இந்த யோசனையை இப்போது வேலையை விட்டு நீங்கப் போகும் தில்லி நிதிமந்திரி ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார். சர்க்கார் கணக்குகளிலும் பாங்கிகளிலும் கணக்கு சிக்கலாகப் போகும் என்று காரணம் சொல்லுகிறார். கணக்கு நன்றாகத் தெரிந்த குமாஸ்தாக்கள் ஒரு கஷ்டமுமின்றிச் சமாளித்துக் கொள்ள முடியும். ஆனபோதிலும், பிடிவாதம் செய்து விட்டார். குழப்பங்களையும் கஷ்டங்களையும் ஏழைகளின் பேரில் தள்ளி விட்டார். பழைய காலணாவையும் புதுப் பைசாவையும் ஒன்றாக்குவது இரண்டு தம்பிடிக்குக் குறைவானதை மூன்று தம்பிடிக்குச் சமமாக்குவதாகும். இதை எந்தப் பாலும் மோரும் விற்பவராவது வாங்குபவராவது ஒப்புக்கொள்ள முடியுமா?

வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து விட்டுக் குப்பையைத் தெருவில் வீசி எறியும் பழைய கிராம வழக்கம் எல்லாருக்கும் தெரியும். அதைப் போல் சர்க்கார் ஆபீஸுகளும் பாங்கிகளும் தசாம்ச முறை ஏற்படுத்திக் கொண்டு அதனால் உண்டாகும் குழப்பங்களை "எப்படியாவது நீங்கள் சமாளித்துக் கொள்ளுங்கள்" என்று ஏழைச் சமுதாயத்தின் பேரில் வீசி எறிந்து விடும் திட்டம் இது.

புதுக் காசுக்குப் பதில் புது ரூபாய் அமைத்து விட்டால் ஒரு கஷ்டமும் இராது.

அடிப்படை உத்தியோகஸ்தர்கள்

அஸ்திவாரம் அசைந்தால் கட்டடமே பொல பொலத்து விழுந்து விடும் என்பது யாருக்குத்தான் தெரியாது? நல்லவேளை; அஸ்திவாரத்தின் அசைவைத் தக்க சமயத்தில் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அந்த அளவுக்குச் சென்னை சர்க்காரைப் பாராட்டுகிறோம்.

ஆனால் இது வெறும் வாசா கைங்கரியமாக இராமல், எல்லோருக்கும் சொல்லும் 'பார்க்கலாம்' ஆக இராமல் இருக்க வேண்டும். உண்மையிலேயே அடிப்படை உத்தியோகஸ்தர்களின் (என். ஜி. ஓ) குறைகளைப் பார்த்துச் சென்னை சர்க்கார் ஏதாகிலும் பரிகாரம் செய்தே ஆகவேண்டும்.

ஒரே கல்வி யறிவு, ஒரே வேலை செய்யும் மத்திய சர்க்கார் அடிப்படை உத்தியோகஸ்தருக்கு ஒரு சம்பளமும், சென்னை ராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு வேறொரு விதக் குறைந்த சம்பளமும் கிடைப்பது எந்த விதத்தில் நியாயம்? காஷ்மீர் முதல் கன்யா குமரி வரை ஒரே அரசாங்கம் நிலவுகிறது என்று சொல்லிக் கொண்டு, சர்க்கார் சிப்பந்திகளின் சம்பள விகிதத்தில் தாரதம்யம் நிலவவிடுவது பாரதத்தின் ஐக்கியத்துக்கே ஊறு விளைவிப்பதாகும். அதனால் சென்னை சர்க்கார் சிப்பந்திகள் பல ஆண்டுகளாக நியாயம் வழங்குங்கள் என்று கேட்டு வந்திருக்கின்றனர். நேரிய முறையில் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். சென்னை சர்க்காரினால் மத்திய சர்க்கார் கொடுக்கும் அளவுக்குச் சம்பளம் பஞ்சப்படி, மற்றச் சலுகைகள் கொடுக்க இயலா விட்டாலும், 'பஞ்சப்படியாகிலும் சற்று உயர்த்துங்கள்' என்று கேட்கிறார்கள். பண்டங்களின் விலைவாசிகள் விஷம்போல் ஏறி வரும்போது யாருக்குமே அடிப்படை உத்தியோகஸ்தர்களின் கோரிக்கை நியாயமானது என்றே படும். அதனால் அவர்களுக்குப் பொதுஜன ஆதரவு நிறைய இருக்கிறது. ஆகவே, இம்முறை சென்னை சர்க்கார் தங்கள் அடிப்படை உத்தியோகஸ்தர்களுக்குத் தக்க சலுகைகளும் பஞ்சப்படி உயர்வும் அளிப்பார்கள் என்றே நம்புகிறோம்.

இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவது பெரும் பகுதி மேற்படி உத்தியோகஸ்தர்களின் வசமே இருக்கிறது. சென்னை ராஜ்ய அடிப்படை உத்தியோகஸ்தர்கள் மற்ற ராஜ்யங்களில் உள்ளவர்களைவிட நன்றாகவே பணி செய்பவர்கள் என்ற நற்பெயர் எடுத்திருக்கின்றனர். அவர்களது ராஜ பக்தியிலும் தேச பக்தியிலும் குறையில்லை. அவர்கள் வறுமைப் பிணியினின்று விடுபட்டு, பூசல்களை மறந்து மறுபடியும் உற்சாகமாகத் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபடுவார்களாக.

அட்டைப்படம்

வர்ண ஜாலங்கள்

சின்னஞ் சிறு குழந்தையினிடம் ஒரு கையில் தின்பண்டத்தையும் மற்றொரு கையில் வர்ண பொம்மையும் கொண்டு செல்லுங்கள். குழந்தை தின்பண்டத்தை விட்டு வர்ண பொம்மையைத்தான் வாங்கிக் கொள்ளும். குழந்தையின் கண்ணையும் கருத்தையும் கவர்வது பொம்மையின் வர்ணமேயாகும்.

வண்டுகளின் ரீங்காரம் முழங்கும் நந்த வனத்துக்குச் சென்றால் சிவப்பு, மஞ்சள் நீலம் ஆகிய விதம் விதமான வண்ண மலர்களைச் சுற்றி வண்டுகள் ரீங்காரமிட்டுப் பாடிக் கூத்தாடுவதைக் காண்கிறோம். மலர் நங்கைகள் தாம் பெற்றுவிட்ட வர்ண இதழ்களைக் கொண்டு தம் வண்டுக் காதலர்களைப் படுத்தி வைக்கும் பாடு தான், அப்பப்பா, சொல்லி முடியாது!

ஏன் காலைக் கதிரவன் கிழக்குத் திசையிலும் மாலைக் கதிரவன் மேற்றிசையிலும் தினம் தினம் எத்தனை எத்தனை வர்ண ஜாலங்கள் செய்து வையகத்தை மகிழ்விக்கிறான்! இப்

படிப் பார்த்தால் புல் பூண்டு முதல் இறைவன் வரையில் எல்லோருக்குமே வர்ணங்களில் தனி ஈடுபாடு உண்டு என்பது தெரியும்.

உலகில் எத்தனை நிறங்கள் இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் அடிப்படையானவை மூன்று என்பதும் யாவரும் அறிந்த விஷயம். அந்த மூன்று சிவப்பு, மஞ்சள், நீலம்.

இந்த மூன்று நிறங்களைப் பார்த்த மாத்திரத்தில் மக்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று தத்துவங்கள் நினைவு வருமாறு நம் முன்னோர்கள் அந்த வர்ணங்களுடன் மூன்று தத்துவங்களை இணைத்து விட்டார்கள்.

ஒருவன் தன் வாழ்வில் உண்மையை முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டும். உண்மையினால் ஹரிச்சந்திரன், ஸ்ரீ ராமன், காந்தி மகான் பட்ட கஷ்டங்கள் எவ்வளவோ! எனினும் அவர்களை எல்லாம் ''தெய்வப் பிறவி'' என்று உலகம் போற்றும்படி செய்து விட்டது அவர்கள் கடைப்பிடித்த ஸத்யம்! ஆகவே, உண்மையை விடக் கூடாது என்பதைச் சிவப்பு நிறத்தைக் கண்டவுடன் நினைவு கூர்வோமாக என்கின்றனர் நம் முன்னோர்கள்.

உண்மையில் நிற்கிறேன் என்று பிறருக்கு இடையூறும் துன்பமும் விளைவித்துக் கொண்டிருத்தலும் தகாது. உண்மையோடு நன்மையை வளர்க்கும் எண்ணமும் வேண்டும். இந்த மங்களமான எண்ணத்தை மஞ்சள் நிறம் நினைவூட்டுகிறது.

அடுத்தாற்போல் அழகு. அழகு உள்ளத்திலின்று வெளிப்படுவது. உள்ளத்தில் உண்மை ஒளி பெற்றவர்கள் பேச்சில், பாட்டில், எழுத்தில் எல்லாம் அழகு பிரதிபலிக்கும். இந்த உன்னதமான அழகை நினைவூட்டுவது நீலம்!

நம் முன்னோர்கள் கடைப்பிடித்த உண்மை, நன்மை, அழகு — ஸத்யம் — சிவம் — சுந்தரம் ஆகிய லட்சியங்களை இம் மூன்று நிறங்களும் சதா நமக்கு நினைவூட்டி வருகின்றன! இந்த மூன்று தத்துவங்களுக்கும் நமது ஓவியர் கனுதேசாய் மூன்று மங்கையரின் வடிவம் நல்கி அழகிய வண்ண ஓவியமாகத் தருகிறார். பெரிய விஷயத்தை வண்ண ஓவியத்தில் தீட்ட முயன்ற தைரியத்தையே பாராட்ட வேண்டும். ஆனால் சித்திரமும் அழகாக அமைந்து விட்டால், அதை நமது நேயர்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக வழங்குவதைவிட வேறு என்ன பாராட்டுரை இருக்க முடியும்?

பனித்துளி

''இன்னும் கொஞ்ச தினங்களுக்குள் செவ்வாய்க் கிரகத்தைப் பற்றின சில உண்மைகள் தெரிய வரும்.'' —செய்தி

அடுத்த செவ்வாய்க்குள் தெரிந்து விடுமா என்று அறிய விரும்புகிறோம்.

★

''மலைப்பிரதேசத்தில் ஒரு பெண் புல் கட்டுடன் வந்து கொண்டிருந்தபோது புலி ஒன்று அவள் அருகில் வந்து விட்டது. உடனே அவள் தலையிலிருந்த புல் கட்டைத் தரையில் வைத்துத்



தன்னை மறைத்துக் கொண்டு புலியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் புல் கட்டால் பின்னால் தள்ளி ஆழமான பள்ளத்தில் உருட்டி விட்டாள்.'' —ஒரு செய்தி

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதுடன் இனி வல்லவளுக்கும் புல்லும் ஆயுதம் என்று சேர்த்துக் கொள்ளலாம்!

''செருப்புத் தொழிலாளி ஒருவர் மூன்றே **தோலா** கனமுள்ள ஒரு ஜோடி பாதரட்சைகளைச் செய்து ராஜன்பாபுவுக்கு அளித்தார். அவர் திறமையை ராஜன்பாபு பாராட்டினார்.''

— செய்தி

மூன்றே தோலா கனத்தில் செய்யப்பட்ட அந்த அதிசயப் பாதரட்சையை அவர் எதனால் செய்தார்? 'ரப்பரா அல்லது தோலா?' என்று அறிய விரும்புகிறோம்.

★

''எல்லாப் பெட்டிகளையும் இணைக்கும் நீண்ட தாழ்வார வழி கொண்ட புது ஜனதா ரயில்கள் பொது மக்களுக்குப் பெரிதும் சௌகரியமாக அமைந்துள்ளன.'' —பத்திரிகைச் செய்தி

ஓடும் ரயிலில் தொத்தித் தொத்திப் பெட்டி மாறும் பிச்சைக்காரர்களுக்கு இது ரொம்ப ரொம்பச் சௌகரியமான ரயில என்பதில் சந்தேகமில்லை.

★

''சணலால் ஆன சாக்குகளுக்குப் பல முனை விற்பனை வரி கூடாது என்று சணல் வியாபாரிகள் சர்க்காரைக் கேட்டுக் கொண்டனர்.'' —செய்தி

சர்க்கார் இதற்கு ஏதாவது சாக்குச் சொல்லித் தட்டிக் கழித்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

என்ன சேதி?

ம. பொ. சி. பாராட்டு விழா

ம. பொ. சி. அவர்களின் சுயநலமற்ற சேவை அனைவருக்கும் தெரிந்த விஷயம். எந்தப் பதவிக்கும் ஆசைப் படாமல் வாலிபப் பருவத்திலிருந்து இதுவரையில் இடைவிடாமலும் தளராமலும் தேசத்துக்குத் தொண்டு புரிந்து வந்திருக்கிறார். நுண்ணிய அறிவும், படிப்பும், பக்தியும் மூன்றும் கொண்டு பணி செய்து வருகிறார். எந்தவிதமான விளம்பரத் தூண்டுதலுமின்றி எல்லாக் கட்சியினரும், அரசியலில் சேர்ந்தவர்களும் சேராதவர்களும் ஒன்று கூடிச் சென்ற வாரத்தில் நடத்திய பாராட்டு விழா வெற்றிகரமாக நிகழ்ந்தது.

ஒரு கூட்டத்தைக்கண்டு ஒரு கூட்டம் பயப்படும் இந்த நாளில் மண்டபம் கொள்ளாத கூட்டம் கூடி ம. பொ. சி. அவர்களுக்குப் பாராட்டுக்களைச் செலுத்தியது தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி தந்தது. 'கிராமணி' என்ற சொல்லுக்கே சமுதாயத்தில் முதல்வர் என்பது பொருள். தமிழ் நாட்டு பக்திமான்களிலும் அறிவாளிகளிலும் "அக்ர ஸ்தானம்" பெற்று விட்டார் கிராமணியார் என்பதையே இந்தப் பாராட்டு விழா காட்டுகிறது. எந்தப் பதவியின் உதவியும் இன்றிக் கிராமணியார் அவர்கள் இந்த முதலிடம் பெற்றது அவர் பெயருக்கு ஏற்ற நிகழ்ச்சி.

அறிவும் ஆற்றலும் யாரிடத்தில் இருப்பினும் போற்றிப் புகழும் தன்மை பெற்றவர்கள் தமிழ் மக்கள். தமிழ் மக்களின் இந்த நுண்ணறிவுக்கு இவ்விழா ஒரு சான்றாகும்.

சுதந்திர எகிப்து

எகிப்து நாட்டில் பறந்து கொண்டிருந்த கடைசி பிரிட்டிஷ் கொடியும் சென்ற வாரம் கீழே இறக்கப்பட்டு விட்டது. அதையடுத்து அங்கு நடந்த தேர்தலில் கர்னல் நாஸர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவ்விதமாக, எகிப்து மன்னர் பருக் முடி துறந்ததிலிருந்து, அதாவது சென்ற நான்கு ஆண்டுகளாக அந்த நாட்டில் அமுலில் இருந்து வந்த இராணுவ ஆட்சி முடிந்து, குடியரசு ஆட்சி ஆரம்பமாகியிருக்கிறது. அங்கு புதிய அரசியல் திட்டமும் உருவாகி விட்டதால், உலகில் பூரண சுதந்திரத்துடன் விளங்கும் நாடுகளின் குழுவில் இன்று எகிப்தும் இடம் பெற்றிருக்கிறது. குடியரசு எகிப்தின் புதிய அரசியல் திட்டப்படி ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்காத சட்டத்தைக் கூட, எகிப்து பார்லிமெண்டில் உள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரு மடங்கு பேர் தங்கள் இஷ்டப்படி விவாதித்து முடிவு செய்யலாம். அதாவது ஜனாதிபதியைக் காட்டிலும் ஜனப் பிரதிநிதிச் சபைக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக ஒரு புறம் அன்னியர் ஆதிக்கத்துக்கும், மற்றொரு புறம் உள்நாட்டு நெருக்கடிகளுக்கும் துன்பங்களுக்கும் இலக்காகி வந்த மிகப் புராதனமான எகிப்து இன்று சுதந்திர வாழ்வு பெற்று ஜனநாயக நாடுகளின் அணியில் முக்கிய இடம் வகிக்க முற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

'டைம்ஸ்' விஷமம்

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டு வரும் பிரச்னைகள் பற்றி லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை விமர்சனம் செய்கையில், காஷ்மீர் விஷயத்தில் இந்தியாவின் நிலை பற்றிப் பின்வருமாறு எழுதுகிறது:

"காஷ்மீரைப் பாகிஸ்தானிடம் இந்தியா ஒப்படைக்க மறுப்பதன் காரணம் என்ன தெரியுமா? காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேர்ந்தால்தான் அந்நாடு சிதைவுறாமலிருக்கும் என்பதை இந்தியா அறிந்துள்ளது. ஆனால் அது சிதறுண்டு போக வேண்டும் என்றே இந்தியா காஷ்மீரைப் பிடிவாதமாகப் பற்றிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம் மக்களிடையே வலுப் பெற்று வருகிறது" என்று அப்பத்திரிகை எழுதியுள்ளது.

இதைக் காட்டிலும் விஷமத்தனம் வேறு இருக்க முடியாது. காஷ்மீர் மீது படையெடுத்து அதை யார் முதலில் ஆக்கிரமித்துக் கொண்டார்கள்? பாகிஸ்தான் வசமுள்ள ஆஸாத் காஷ்மீ

ஜூன் மாதச் சிறுகதைப் போட்டி
நூறு ரூபாய் பரிசு பெற்ற
கல்யாண மண்டபம்
என்னும் கதை
அடுத்த இதழில் வெளியாகிறது
பரிசு பெற்றவர் விலாசம்:
திரு எஸ். சங்கரமூர்த்தி
"சங்கர்"
69-B, மார்சக்பெட் ரோடு.
கண்டோன்மெண்டு, திருச்சி.



தமிழ் நாட்டில் உள்ள பல காங்கிரஸ் கமிட்டிகளின் முக்கியஸ்தர்களும், காங்கிரஸ் ஊழியர்களும் சேர்ந்து மதுரை தட்சிணப் பிரதேசக் கமிட்டி ஒன்றை அமைத்துத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செய்யத் தவறிய காரியத்தைச் செய்து வருகிறார்கள் அல்லவா? அவர்கள் எல்லாரும் ஜூன் 28உ யன்று சென்னை மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் உள்ள பிரத்தியேக மண்டபத்தில் கூடித் 'தட்சிணப் பிரதேசம் ஏன் வேண்டும்?' என்பதின் காரண காரியங்களை அலசி விவாதித்தார்கள். இந்தக் கூட்டத்துக்குப் பாரத முத்துத் தேவர் எம். எல். ஏ. தலைமை வகித்தார். சென்னை நகரசபை மேயர் ஸ்ரீ வி. ஆர். ராமநாதய்யர், மதுரை ஜில்லா (ரூரல்) காங்கிரஸ் கமிட்டி உப தலைவர் ஸ்ரீ வீரபத்திர தேவர், ஸ்ரீ எஸ். எஸ். மாரிசாமி, ஸ்ரீ டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ பி. ராமச்சந்திரன், மதுரை ஜில்லா (அர்பன்) காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ நரசிங்கராவ், ஸ்ரீ செல்லையா ஆகியவர்கள் பேசிய பிறகு தட்சிணப்பிரதேசம் உருவாவதற்கு உழைத்தவர்களுக்கு நன்றி தெரிவித்தும், அதற்கு வேண்டிய வேலைத் திட்டங்களை வகுத்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். மேயர் அளித்த விருந்துக்குப் பின் நடந்த கூட்டத்தில் ராஜாஜி அவர்கள் தட்சிணப் பிரதேசம் வந்தால்தான் தென்னாடும், தென்னாட்டு மொழிகளும் ஓங்கி வளர முடியும் என்பதைப் பல உதாரண உபமேயங்களுடன் விளக்கினார். மேலே: ராஜாஜி அவர்கள் பேசுவதையும், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பிரமுகர்களையும் காணலாம்.

ரில் நீதியான ஆட்சி நடக்கிறதா? பாகிஸ்தானுக் குள்ளேயே ஆட்சியினரிடத்தில் மக்கள் விசுவாசமாயிருக்கின்றனரா? இவற்றையெல்லாம் 'டைம்ஸ்' பத்திரிகை சிறிதாவது சிந்தித்துப் பார்த்திருக்குமானால், காமன்வெல்த் மகாநாடு நடைபெறும் இச் சந்தர்ப்பத்தில் உண்மையை மறைத்து இப்படிப் பட்ட பொய்க் கூற்றை அது வெளியிட்டிருக்காது.


'டிரிப்யூன்' 'மாஞ்செஸ்டர் கார்டியன்' போன்ற பிரபல பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்தியாவைப் பாராட்டி வருகையில், 'டைம்ஸ்' பத்திரிகை மட்டும் பாகிஸ்தானுக்குப் பரிந்து பேசிக் கொண்டு, இந்தியா மீது அபாண்டமான பழியைச் சுமத்த முன் வருவது பத்திரிகை தர்மத்துக்கே முரணான செய்கையாகும்.

குந்தா மின்சாரத் திட்டம்

குந்தா மின்சார உற்பத்தித் திட்ட வேலைகளைத் துவக்கி வைத்து நிதிமந்திரி தேஷ்முக் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்களைக் கவனிப்போர் மின்சாரத் துறையில் இந்தியாவின் பிற்போக்கான நிலையை அறிந்து கொள்ளலாம்.

நார்வேயில் சராசரி ஒவ்வொருவரும் வருஷத்துக்கு 5,743 யூனிட்டுகளும், ஸ்வீடனில் 3,094 யூனிட்டுகளும், ஸ்விட்ஸர்லாந்தில் 2,556 யூனிட்டுகளும், அமெரிக்காவில் 2,500 யூனிட்டுகளும், பிரிட்டனில் 1,259 யூனிட்டுகளும், ஜப்பானில் 579 யூனிட்டுகளும் மின்சார சக்தியை உபயோகிக்கிறார்கள். ஆனால், நமது நாட்டில் 1955-56ல் தலா 25 யூனிட்தான் உபயோகிக்க முடிந்தது. இதிலிருந்து குந்தா மின்சாரத் திட்டத்தின் முக்கியத்தை ஓரளவு புரிந்து கொள்ளலாம். நமது இஞ்சினீயர்களின் திறமையை தேஷ்முக் பாராட்டிவிட்டு, இந்தத் திட்டம் குறிப்பிட்ட காலத்தில் வகுக்கப்பட்ட செலவு திட்டத்தை மிஞ்சாமல் நிறைவேறும் என நம்புவதாகக் கூறியுள்ளார். தமிழ் நாட்டினரின் அறிவாற்றலையும் உழைப்புத் திறமையையும் அவர் பாராட்டியதற்கேற்ப இந்தத் திட்டம் பூர்த்தியாகித் தமிழ்நாட்டின் மின்சாரப் பற்றுக்குறையைப் போக்கிச் சுபிட்ச நிலைக்கு வழி வகுக்கும் என எதிர்பார்க்கலாம்.

உங்கள் அழகை அதிகரிக்கிறது பாதுகாக்கவும் செய்கிறது!



அற்புத நறுமணமூட்டப்பட்ட சார்மிஸ் ஸ்னோ உங்கள் சருமத்தை அழகுறச் செய்கிறது, பாதுகாக்கிறது. எல்லா பருவ காலங்களிலும் சருமத்தை மிருதுவாகவும், வெல்வெட் போல வழவழப்பாகவும் வைக்கிறது. பவுடருக்கு ஆதாரமானது. எண்ணைப் பசையில்லாதது. சார்மிஸ் ஸ்னோ சொற சொறப்பும், வரிகளும், கோடுகளும், புண்களும் ஏற்படாமல் சிறந்த முறையில் தடுக்கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்புகளினின்றும் பாதுகாக்கிறது.




ஒரு கால்கேட்
உயர்தர சரக்கு

சார்மிஸ் ஸ்னோ

CSG/3

சார்மிஸ் பலகாரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?





அவனைப் பொறுத்த மட்டிலும்
கவலையே வேண்டாம்.
ஏனெனில் அவன்

லாக்டோஜனில் வளருகிறான்.

"லாக்டோஜன்" ஹிந்தி புரோகிராமைக் கேளுங்கள்
ரேடியோ ஸிலோன் 41 மீடர் பாண்டு

பிரதி ஞாயிறுதோறும் இரவு 7-45 மணியிலிருந்து 8 வரை
பிரதி வியாழன்தோறும் இரவு 8.30 மணியிலிருந்து 8-45 வரை

விவரங்களுக்கு எழுதவும்:-

நெஸில்ஸ் பிராடக்ட்ஸ் (இந்தியா) லிமிடெட்,

த. பெட்டி நெ. 396 கல்கத்தா | த. பெட்டி நெ. 315 பம்பாய் | த. பெட்டி நெ. 180 மதறாஸ்

கடல் கண்ட கனவு

பதின்மூன்றாம் அத்தியாயம்

எதிரொலி!

கொடும்பாளூர்க் கானகத்தில் இரகசிய மண்டபத்தில் சூழ்ச்சிகள் பலமாக நடந்தபோது, விடுதித் தலைவனோடு கூடிப் பேசிய மற்ற ஐந்து மனிதர்களில் ஒரே ஒரு மனிதர் மட்டும் முகத்தைச் சுளித்துக் கொண்டே எழுந்தார் அல்லவா? அவர் இப்பொழுது பேச ஆரம்பித்தார் :

"சகோதரர்களே! இதுவரை நமது தலைவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு நாம் அனைவரும் ஒற்றுமையோடு மௌனமாக இருந்தது சரி. ஆனால் இனி நம்முடைய கருத்தைத் தெரிவித்து அதன் பேரில் தக்கபடி ஆலோசனைகள் செய்து, பிறகுதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஏனென்றால் நாம் எடுத்துக் கொண்டுள்ள காரியம் அத்தனை முக்கியம் நிரம்பியது. அந்தக் காரியத்தை எளிதாக நினைப்பதற்கில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தையே பாதிக்கக் கூடிய அத்தனை பெரிய திட்டம் அது. எனவே நாம் ஆறு பேரும் இந்த மண்டபத்திலிருந்து பிரிந்து செல்வதற்கு முன்பு, ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டியது மிக மிக அவசியம்!"

இப்படி அவர் பேச ஆரம்பித்ததும், அவரோடு இருந்த மற்ற நான்கு மனிதர்களும் அவரை மேலே பேசவிடாமல் அப்படியே கீழே அமர்த்துவதற்காக எழுந்து நின்றார்கள். அவர்களுடைய முகத்தில் கோபம் தீவட்டியாக எரிந்து கொண்டிருந்தது. இரண்டு கண்களும் இரண்டு தீப் பந்தங்களைப் போல அந்த நான்கு மனிதர்களுக்கும் சுவாலை விட்டு எரிந்தன! ஆனால் விடுதித் தலைவன் அவர்களைத் தடுத்தான்.

"நண்பர்களே! பொறுமையை இழக்காதீர்கள்! எந்த விஷயமானாலும் நண்பருடைய மனத்தில் உள்ள கருத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். ஆகையால் அவர் சொல்ல வந்த விஷயத்தைப் பொறுமையாகக் கேட்போமாக!"



இப்படி விடுதித் தலைவன் சொன்னதும் அந்தச் சபையில் நிம்மதி உண்டாயிற்று. அந்த மனிதர் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

"நண்பர்களே! நான் பேசக் கருதுவதைக் கேட்பதற்குக்கூட உங்களுக்குப் பொறுமையில்லாதிருப்பதைப் பார்த்தால், எனக்கு மனம் வேதனைப் படுகிறது. நாம் அனைவரும் நம்முடைய நகரங்களிலிருந்து இங்கே புறப்பட்டபோது நீங்கள் நான்கு பேரும் எனக்குக் கொடுத்த நம்பிக்கை மொழியை மறந்து விட்டீர்களா? என்னோடு துணைக்குக்கூட எவ்விதமான காவலும் இல்லாமல், உங்களை மனப்பூர்வமாக நம்பி இங்கே தன்னந் தனியாக வந்திருக்கிறேன் என்று நினைத்துத் தானே என்னை இப்படி அச்சப்படுத்துகிறீர்கள்; இது நியாயமா என்று கேட்கிறேன். எந்தத் தமிழ் நாட்டின் வீர பரம்பரைக்காகப் போரிடுவதாகச் சொல்கிறீர்களோ, அந்த வீர பரம்பரையின் மரபுக்கே இழுக்கான முறையில் அல்லவா என்னை வஞ்சமாகப் பயமுறுத்துகிறீர்கள்—"

இந்த இடத்தில் விடுதித் தலைவன் எழுந்தான்.

"பெரியவரே! அவசியம் இல்லாத பேச்செல்லாம் எதற்கு? உங்களை அப்படியெல்லாம் பயமுறுத்தும்படி நான் விட்டு விடுவேனா? ஏன் இந்தப் பதற்றம்? நீங்கள் சொல்ல வந்த விஷயத்தைத் தாராளமாகச் சொல்லுங்கள். அதைக் கேட்பதற்காகத் தானே நான் ஆவலோடு காத்திருக்கிறேன்! இவர்களை ஏன் கோபிக்கிறீர்கள்? பாருங்கள், இவர்கள் இப்பொழுது எத்தனை பொறுமையாக இருக்கிறார்கள்! ஆகையால் பேசுங்கள், நண்பரே, பேசுங்கள். விஷயத்தைச் சொல்லுங்கள்!"

தலைவனுடைய இந்த வார்த்தைகளைச் செவியிலே வாங்கியும் வாங்காமலுமாக, ஓர் அலட்சிய பாவனையில் அந்த ஐந்தாவது மனிதர் தம்முடைய கருத்தைத் தொடர்ந்து பேசினார்:—

"சகோதரர்களே! நீங்கள் அச்சம் உண்டாக்கினாலும் சரி, அரவணைத்தாலும் சரி. எனக்குக் கவலையில்லை. நான் சொல்ல வந்ததைச் சொல்லாமல் அமரப் போவதில்லை. அது என்னவென்றால், ஆதிரையன் என்ற வேளிர் தலைவரைப் பற்றி நமது விடுதித் தலைவர் சொன்ன வார்த்தைகள் என்னைத் துன்பப் படுத்தின. அதே சமயம், நந்தி வர்ம பல்லவரையும் இரணிய வர்மரையும் பற்றி நான் நினைத்திருந்த தவறான கருத்து மாறும் படியாக இருக்கிறது. இப்பொழுது இங்கே கேள்விப்பட்ட விவரம்! நான் புறப்படும்





போது இந்த நான்கு நண்பர்களும் என்னிடம் சொன்ன செய்தி வேறு. சித்திரமாயன் என்ற இந்த இளைஞர்—"

"இளவரசர் என்று சொல்லும், ஐயா!" என்று குறுக்கிட்டார் சபையிலே இருந்த நான்கு பேரில் ஒருவர்.


"அவருடைய பேச்சில் குறுக்கிடாதீர்கள்!" என்று அதட்டினான் விடுதித் தலைவன்.

"சபையோர்களே! சித்திரமாயன் என்ற இந்த இளைஞர், காலஞ் சென்ற பரமேசுவர வர்மருக்கு உண்மையில் நேரான சந்ததியென்றும், அவருக்குப் போட்டியாக இரணிய வர்மர் இளம்பி, சித்திரமாயனுடைய அரச உரிமையைப் பறித்துக் கொண்டார் என்றும், நீங்கள் நான்கு பேரும் என்னிடம் கூறினீர்கள். ஆனால் விடுதித் தலைவர் இப்பொழுது சொன்ன வரலாறு வேறு விதமாக இருக்கிறது. அவர் சொன்ன விஷயங்களைக் கொண்டு பார்த்தால், இரணிய வர்மருடைய சூழ்ச்சி எதுவும் இந்த விஷயத்தில் எப்பொழுதுமே இருந்ததாகத் தெரியவில்லை. தவிரவும், அரச பதவி வேண்டவே வேண்டாம் என்று தான் அவர் வாதாடியிருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, இப்பொழுது விடுதித் தலைவர் சொன்ன இன்னொரு விஷயம் எனக்குத் திகைப்பைத் தருகிறது. சித்திரமாயன் என்ற இளைஞர் அரச உரிமைக்கு உரிய நேரான சந்ததியில்லையென்றும், அவரும் நந்தி வர்மரைப் போல ஒரு தாயாதிதான் என்றும் தெரிந்து வியப்புக் கொள்கிறேன். ஐயா! விடுதித் தலைவர் அவர்களே! தாங்கள் சொன்ன விவரங்களேதான் நானும் ஏற்கனவே கேள்விப்பட்டது! ஆனால் இந்த நான்கு மனிதர்களும் என்னை என்னுடைய நகரத்திலிருந்து அழைக்க வந்தபோது, ஏதேதோ தவறான செய்திகளைத் தெரிவித்தார்கள். தெரிவித்து என்னை வஞ்சகமாக ஏமாற்றினார்கள். அவசியமில்லாத முறையில் நந்திவர்மரிடம் எனக்கு வெறுப்பு ஏற்படும்படி பேசினார்கள். இரணிய வர்மரிடம் ஒரு துவேஷமே உண்டாகும்படி அவரைப் பற்றி என்னிடம் கூறினார்கள். அதைப் பற்றி நான் இப்பொழுது கவலைப்படவில்லை. தலைவரே! உண்மையான செய்திகளை உங்கள் மூலம் அறிந்து கொண்டதில் எனக்கு மகிழ்ச்சி. அது குறித்து உங்களுக்கு நன்றி! ஆனாலும் ஆதிரையனைப் பற்றியும் உதய சந்திரனைப் பற்றியும் நீங்கள் சொன்ன கருத்துக்களில் எனக்கு உடன்பாடு இல்லை. உதய சந்திரனைப் போன்ற உத்தமமான ராஜதந்திரி, இந்தத் தமிழ் நாட்டிலே ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அவதரிக்கிறார் என்று நான் கருதுகிறேன். சீலமும் சாமர்த்தியமும் ஒருங்கே இணைந்து சேர்ந்த ஓர் அதிசய புருஷர் அவர். அவருடைய தீர்க்க தரிசனமும், அரசியல் மேதையும் எதிர்காலத்தில் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் கல்வெட்டுக்களாகவும், பொன்னேடுகளாகவும், பட்டயங்களாகவும் நின்று நிலவப் போகின்றன என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. வில்லிவள நாட்டின் அதிபதியாகிய உதய சந்திரர், பல்லவ சாம்ராஜ்யம் ஒரு பெரிய சிக்கலில் அகப்பட்டுத் தவித்தபோது, இந்தச் சாம்ராஜ்யத்தையும், தமிழ் நாட்டின் அரசியலையும் பெருந் துன்பத்திலிருந்து மீட்டி, மகத்தானதோர் உன்னத ஸ்தானத்திலே நிலைநிறுத்தினார் என்று, நமது சந்ததியார்கள் எல்லாம் எதிர்காலத்தில் அவரைப் பற்றிப் பெருமையோடு பேசி மகிழப் போகிறார்கள். அப்படிப்பட்ட உதய சந்திரருக்குத் துரோகமான செயல்களைச் செய்யும்படி நாம் முனைந்து நிற்பதே தவறாகும். ஆரம்பத்தில் இத்தனை செய்திகளும் எனக்குத் தெரிந்திருந்தால், நான் இத்தகைய ஒரு சதிகாரக் கூட்டத்துக்கு வந்திருக்கவே மாட்டேன். இது ராஜத் துரோகம் என்பது மட்டுமில்லை. வஞ்சகமான சூழ்ச்சி. கேவலம், என்னை ஏமாற்றுவதற்கு இந்த நான்கு மனிதர்களும் என்னிடம் எத்தனை பொய்யும் வஞ்சக மொழிகளும் சொல்லி என்னை அழைத்து வந்தார்கள்! இப்படிப்பட்டவர்கள், ராஜத் துரோகமான ஒரு பெருங் காரியத்தில் ஈடுபட்டு இறங்கினால் இன்னும் எத்தனை எத்தனை சூழ்ச்சிகள், நய வஞ்சகச் செயல்கள் செய்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே எனக்குப்......"

தலைவனுடைய கண்களிலே எரிந்த தீப் பந்தத்திலிருந்து இப்பொழுது பொறிகள் தெறித்தன.

"ஆருயிர் நண்பர்களே! என்ன பேசாமல் இருக்கிறீர்கள்! இத்தனை

பரிமள வாசனையை முகர்ந்திருக்கிறீர்களா!



ஸ்வஸ்திக் வாசனை கேஸ்டர் ஆயிலின் பரிமள வாசனையை நீங்கள் நிச்சயமாக முகர்ந்து பார்த்திருப்பீர்கள். கிளர்ச்சியூட்டும் அதன் வாசனையிலிருந்து மார்க்கெட்டில் கிடைக்கும் கூந்தல் தைலக் கூட்டங்களில், அதை சுலபமாகத் தேர்ந்தெடுக்க முடியும். தவிர, கூந்தலில் அழுத்தித் தேய்க்காமலேயே, உங்கள் கேசத்தை ஒழுங்காகப் படிய வைக்கிறது.

ஸ்வஸ்திக் வாசனை கேஸ்டர் ஆயில்

தி ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட், பம்பாய்

மென்மையான சோப்புகளையும் மற்றும்
கூந்தல் தைலங்களையும் தயாரிப்பவர்கள்

SHILPI S.O.M. 328 TAM

துஷ்டத்தனமான மொழிகளை அவர் பேசக்கேட்டும், வாயடைத்து மௌனமாக இருக்கிறீர்களா?"

"தலைவரே! அவர் பேசும்போது குறுக்கிடக் கூடாது என்று சொன்னீர்கள் அல்லவா? அதனால்தான் நாங்கள்......"

"இத்தனை நீசத்தனமான வார்த்தைகளுக்குப் பிறகுமா?"

அவ்வளவுதான். நான்கு மனிதர்களும் ஓங்கிய வாளோடு ஏக காலத்தில் அந்த மனிதரின்பேரில் பாய்ந்தார்கள். ஆனால் என்ன ஆச்சரியம்! மறுகணம் தமது உடையில் எங்கோ மறைத்து வைத்திருந்த உடைவாளை உருவிக் கொண்டு நின்றார், அந்தத் தன்னந் தனியான மனிதர்.

வாள் உறையிலிருந்து எடுக்கப்பட்ட சத்தம் கேட்டதோ இல்லையோ, தலைவன் ஏதோ ஓர் அடையாள ஓசையை எழுப்பினான். மறுவினாடி பத்துப் பதினைந்து தீவட்டித் தடியர்கள் உருவிய வாளோடு உள்ளே பாய்ந்தார்கள்!

"அவனைக் கொன்று விடாதீர்கள். இந்தத் துரோகியிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் இன்னும் சில இருக்கின்றன. அது வரை அவனுடைய உயிர் போய்விடக் கூடாது!"

இவ்வாறு அவர்களுக்குக் கட்டளையிட்டான் தலைவன்.

வாள்கள் ஒன்றோடொன்று மோதிய சத்தம் கேட்டது. 'சட சட' 'மட மட' என்று கைக் குத்துகளும், அடிகளுமாகக் கேட்டன. வாள் முறிந்தது. அடுத்த வினாடி "ஐயோ!" என்று அலறல். அந்த மனிதரை மயக்கம் போட்டு விழுகிற அளவுக்கு ஒரு முரடன் தனது கையினால் ஓங்கிக் குத்தி விட்டான்.

"தூக்கு!" என்று கர்ஜனை செய்தான் தலைவன்.

பிறகு சம்பவங்கள் 'வாயு வேகம் மனோ வேகம்' என்று சொல்வார்களே, அப்படி 'விறு விறு' என்று நடந்தன. ஐந்தாறு முரடர்கள் அந்த மனிதரின் உடம்பைச் செங்குத்தாகத் தூக்கினார்கள். வெறும் மயக்கம் தானா, அல்லது உயிரே பிரிந்துபோய் விட்டதா என்று சோதிப்பதுபோலத் தலைவன் தனது விரல்களை அந்த மனிதரின் நாசிக்குக் கீழே வைத்து, மூச்சு இழைகிறதா என்று பார்த்தான்.

"வீரர்களே! மெச்சுகிறேன் உங்கள் திறமையை! மூச்சு வருகிறது. உயிர் இருக்கிறது. அது போய் விட்டால் நம்முடைய திட்டமும் தொலைந்து விடுமே! உயிர் நன்றாக இருக்கிறது. நினைவுதான் மயங்கி யிருக்கிறது. இப்பொழுது இத்தனை போதும். மயங்கிய நினைவை மீண்டும் எப்படித் திரும்பக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் நமக்குத் தெரியுமே! இந்தத் துரோகியைக் கொண்டு போங்கள், வெளியே உள்ள கோவிலுக்கு!"

இந்த உத்தரவு வந்ததும் முரடர்கள் ஒன்று சேர்ந்து, பிரக்ஞை இழந்த அந்த மனிதரின் உடம்பைத் தூக்கிக் கொண்டு சுரங்கப் பாதையின் வழியாக நடந்தார்கள். அங்கே நின்று கொண்டிருந்த மற்றத் தீவட்டித் தடியர்களும் இப்பொழுது கும்பலாகச் சேர்ந்து கொண்டார்கள். அனைவருமாக மயங்கி விழுந்த அந்த மனிதரை, மிக்க கவனமாகத் தூக்கிக் கொண்டு வெளியே யிருந்த கானகக் கோவிலுக்குச் சென்றார்கள்.

தலைவனும் மற்ற நான்கு நண்பர்களும் கொஞ்சம் பின் தங்கினார்கள்.

"அசடுகளே!" என்றான் தலைவன், அந்த நான்கு பேரையும் பார்த்து.

"அசடர்களே! இப்படியா நடந்து கொள்வது! அந்த மனிதனை அவனுடைய நகரத்திலிருந்து எந்த விதத்திலும் இந்த இரகசிய மண்டபத்துக்கு அழைத்து வாருங்கள் என்று நான் உங்களிடம் சொன்னது உண்மைதான். ஆனாலும் அவனிடம் பொய்யையும் தவறான செய்திகளையும் சொல்லலாமா? இப்பொழுது எத்தனை பெரிய விபரீதத்தில் கொண்டு வந்து விட்டு விட்டது! இனி உதயசந்திரனைப் பற்றிய எண்ணங்களை மறந்து விட்டு, முதன்முதலாக இந்த மனிதனையல்லவா நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இவனல்லவா நமது முதலாவது பகைக் குறியாக மாறி விட்டான்!" என்றான் தலைவன்.

நான்கு பேர்களில் ஒரு மனிதர் இப்பொழுது மற்றவர்களின் சார்பாகப் பேசினார்.

"தலைவரே! சாம, தான, பேத, தண்டம் என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்கள் அல்லவா? அந்த

முறையில் அவரிடம் முதலில் சாத்துவிகமாகப் பேசலாம் என்று நினைத்து அப்படிப் பேசினோம். தவிரவும், அவரிடம் அப்படியெல்லாம் பேசவில்லையென்றால் அவர் மசிந்திருக்க மாட்டார். தஞ்சையிலும் வல்லத்திலும் அவருக்கு எத்தனையோ உறவுகள் இருப்பதாகக் கேள்விப்பட்டோம்! அதனால் தான்......"

இந்த வார்த்தைகள் வந்ததும் தலைவன் சீறினான்.

"என்ன! தஞ்சை முத்தரையர்களோடு இவனுக்குத் தொடர்பு இருக்கிறதா? நண்பர்களே, முட்டாள்களே, இந்த விவரத்தை ஏன் நீங்கள் முதலிலேயே என்னிடம் சொல்லவில்லை? தெற்குப் பிரதேசத்தில் யாராவது முக்கியமான ஒரு தலைவன் நம்முடைய கட்சியில் இருக்க வேண்டும் என்றுதானே சொன்னேன். இவன் ஒருவன் தானா அகப்பட்டான் உங்களுக்கு? இவன் இல்லையென்றால் வேறு தலைவர்களே இல்லையா?"

"பிரபு! மன்னிக்க வேண்டும். தெற்கு வட்டங்களில் இவனைப் போன்ற செல்வாக்கு நிரம்பிய தலைவர் வேறு யாருமில்லை! அதனால் தான் இவனை அழைத்து வந்தோம். இவனிடம் உள்ள படைபலம் அத்தனை வலிமையானது. அது மட்டுமில்லை; உறையூரில் இவன் கட்டளைக்கு இருக்கிற மதிப்பை எப்படிச் சொல்வது! இவன் நினைத்தால் நமக்கு வேண்டிய படை முழுதும் இவன் ஒருவனே திரட்டித் தர முடியும், பிரபு! அத்தோடு, உறையூரில் விளைந்து கிடக்கும் தானியங்கள் அத்தனையும் நம்முடைய படைகளுக்கு உணவளிக்க வேண்டும் என்று கேட்டாலும், இவனால் உடனே வழங்க முடியும்!"

"போதும்! அவனுடைய பெருமையைப் பேசாதீர்கள்! முத்தரையர்கள் இப்பொழுது எந்த நோக்கத்தோடு இருக்கிறார்கள் என்பது முட்டாள்களாகிய உங்களுக்குத் தெரியாது. அதனால்தான் இவனை அழைத்து வந்தீர்கள். இவன் முத்தரையர்களோடு தொடர்பு உள்ளவன் என்று எனக்கு மட்டும் தெரிந்திருந்தால், நான் இவனை இந்த மண்டபத்துக்கு உள்ளேயே அனுமதித்திருக்க மாட்டேன்!"

இந்தப் பேச்சைக் கேட்டதும் அந்த நான்கு பேரும் திகைத்துக் கல்லாக நின்றார்கள்.

"சரி. நடந்தது நடந்து விட்டது. கவலை வேண்டாம். இந்த இக்கட்டான நிலைமையையும் வெற்றிகரமாகச் சமாளிக்க என்னால் முடியும்! புறப்படுங்கள்" என்றான் தலைவன்.

கோவிலிலிருந்து அவர்கள் புறப்படுவதற்கு முன்னெச்சரிக்கையாகத் தீவட்டிகள் அணைக்கப் பட்டன. கொடும்பாளூர்க் கானகத்தின் கோவிலுக்குள்ளே மீண்டும் இருள் கவிந்தது. அந்த வீரர்கள் அங்கிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமானார்கள். ஆனால் அந்த நேரத்தில் எங்கிருந்தோ குதிரைகளின் குளம்பொலி கேட்டது.


பதினான்காம் அத்தியாயம்

சந்திப்பு

கொடும்பாளூர்க் கானகத்தின் கோவிலானது ஒரு பெரிய சூழ்ச்சிக் களமாக மாறி, பயங்கரமான சம்பவங்கள் எல்லாம் அங்கே நடந்து கொண்டிருந்தன. மாமல்லபுரத்து விடுதித் தலைவன் தான் பின்னிய சூழ்ச்சியின் வலையிலே தானே சிக்குண்டு இனி இந்த ஐந்தாவது மனிதரை என்ன செய்வது என்ற யோசனையிலே மனத்தைச் செலுத்தினான்.

ஆமாம், எதிர்பாராமல் நேர்ந்த இந்த விளைவுகளினால் விடுதித் தலைவன் கொடும்பாளூருக்குச் செல்ல முடியவில்லை. இந்த நிலைமையில் அங்கே என்ன நடந்தது?

சித்திராங்கபூபதி உணவுக்காக மாளிகையின் படிகளிலே இறங்கு முன்பு, தங்கப் பேடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சித்தம் கலங்கியது. அவனுடைய தலை 'கிர்' என்று சுற்றுவது போல் இருந்தது. அவனுடைய கண்ணுக்கு முன்னால் இருந்த தங்கப் பேடகத்தின் சித்திர மடலில், மூன்று வண்ண ஓவியங்கள் காட்சி தந்த இடத்தில், இப்பொழுது சித்திர உருவங்கள் சுழல ஆரம்பித்தன. மூன்று சித்திரங்களும் ரதத்



பாங்க் ஆப் மைசூர் லிமிடெட், டெபுடி ஜெனரல் மானேஜர் ஸ்ரீ ஏ. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குமாரி சௌ. ஜானகிக்கும், இம்பீரியல் டுபாகோ கம்பெனியைச் சார்ந்த ஸ்ரீ எஸ். நாராயணன் அவர்களுக்கும் பெங்களூரில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

தின் சக்கரங்களைப் போல் விரைவாகச் சுற்றிச் சுழன்று நின்றன. மூன்று சித்திரங்களிலே தெரிந்த உருவங்களும் சுழற்சி ஓய்ந்து, அப்படியே அசைவற்று நின்றன!

ஆமாம்: இப்பொழுது சித்திரங்கள் சுழலவில்லை. அசையாமல் நின்றன. ஆனால் ஒரு பெரிய மாறுதல். அந்த மூன்று சித்திரங்களிலும் பழைய உருவங்களுக்குப் பதிலாக இப்பொழுது வேறு உருவங்கள் தெரிந்தன. 'காமம்' என்று எழுதியிருந்த சித்திரத்தில், ஒரு பெண் ஓர் இளைஞனுடைய கரத்தைப் பிடித்து வானத்திலே மிதக்கும் சந்திர பிம்பத்தைக் காட்டி நிற்பதுபோல் வரையப்பட்டிருந்தது அல்லவா? இப்பொழுது அதில் எத்தகைய விசித்திரமான மாறுதல் ஏற்பட்டிருந்தது! அந்தச் சித்திர நங்கை நின்ற இடத்திலே யாழ்நங்கை நின்றாள். அந்த இளைஞன் நின்ற இடத்தில் சித்திராங்க பூபதி தன்னுடைய உருவத்தின் பிரதிபிம்பத்தையே கண்டான்! 'நிலவு நங்கை' என்று தான் வியந்து பாராட்டிய அந்த அழகிய யாழ் நங்கை, பூபதியின் கைகளையே பிடித்துக் கொண்டு வானத்திலே மிதக்கும் நிலவைக் காட்டுகிறாள். என்ன ஆச்சரியம்! அடுத்த சித்திரத்தில் மூங்கிரிக் கொடிக்கு ஊடாகத் தெரிகிற கரம் யாருடைய கரம்! யாழை ஏந்தி அந்த யாழின்மேல் விரல்களை விளையாட விட்டதே அதே மென்மையான கரந்தான்! அந்தப் பூங்கரந்தான் இப்பொழுது யாழுக்குப் பதிலாகத் தாமரை வடிவத்திலே மதுக்கிண்ணத்தைத் தாங்கி நிற்கிறது. எல்லாம் மன வேகத்தின் கற்பனைத் தோற்றங்கள்தான்! சித்திராங்க பூபதி இந்த மனப் பிரமையின் மதி மயக்கத்தில் 'வெகுளி' என்று எழுதியிருந்த மூன்றாவது சித்திரத்தைப் பார்த்தான். யார் யாரோ இனந் தெரிந்தும் தெரியாமல், மயக்க நிலையிலே காணுகிற மனித உருவங்களைப் போல் யுத்தகளத்தில், எதிரும் எதிருமாக அணிவகுத்து நிற்கிறார்கள். ஆனைகளும், குதிரைகளும், தேர்களுமாக நிற்கின்றன. இவற்றின் மத்தியிலே சித்திராங்க பூபதி நிற்கிறான்! என்ன வியப்பு! மாமல்லபுரத்து விடுதித் தலைவனும் அந்தப் படையிலே காணப்படுகிறான்!

பூபதியின் கண்முன் இப்படி ஒரு சித்தப் பிரமை! அது மறைந்ததும் மீண்டும் மூன்று சித்திரங்களும் ரதத்தின் சக்கரத்தைப் போல் 'விறு விறு' என்று சுற்ற ஆரம்பித்தன! பூபதிக்கு அதற்குமேல் அந்தச் சித்திரமடலையே பார்க்கப் பயமாக இருந்தது! தன்னுடைய கற்பனைச் சக்கரம் சுழலுவதைக் கண்டு தனக்கே பயம் உண்டாகி விட்டது. தந்தப் பேடகத்தில் மாயமான சக்தி எதுவும் கிடையாது என்பது பூபதிக்குத் தெரியும். ஆனால் அந்தப் பேடகத்திலே சத்தியம் இருந்தது. நிரந்தரமான உண்மை இருந்தது. மெய்யான உபதேசம் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தாயின் இதயம் அந்தப் பேடகத்திலே இருந்து துடித்துக் கொண்டிருந்தது. அந்தத் துடிப்புத்தான் பூபதியின் மனசாட்சியை என்னென்னவோ செய்தது. ஏதேதோ கற்பனைகளையும் எச்சரிக்கைகளையும் எழுப்பியது. பூபதி நினைத்தான்:—தாயினிடத்தில் உள்ள அளவற்ற பாசத்தினால் ஏதேதோ வீண் கற்பனைகளைச் செய்கிறோம். யாழோடு வலம்புரித் தீவுக்குச் செல்ல வேண்டும் என்பது

தானே இலட்சியம். அந்த இலட்சியத்துக்கு இந்த யாழ் நங்கையை விட வேறு யார் நமக்குத் துணை செய்ய முடியும்? அப்படியிருக்கும் போது, அந்த நங்கையைப் பற்றியே ஏன் இத்தனை வீணை கற்பனைகள் எல்லாம் செய்து குழம்ப வேண்டும்! யாழை மட்டும் எடுத்துக் கொண்டு செல்வதால் வலம்புரித் தீவுக்கு என்ன பயன்? அதை வாசிக்கக் கூடிய கரங்கள் இல்லாமல் யாழ் மட்டும் அங்கே போய்ச் சேர்ந்து என்ன பிரயோசனம்? இந்த விஷயத்தைப் பற்றியே நாம் யோசிக்கவில்லையே. புதிதாக நான் யாழ் வாசிக்கக் கற்றுக் கொண்டு, தீவுக்குப் போவது என்பது நடக்கிற காரியமா? அப்படியே நான் யாழ் வித்தை கற்றுக் கொள்ள வேண்டும் என்று முனைந்தாலும், எனக்கு யார் பயிற்சி அளிப்பார்கள்? அதற்கும் இந்த யாழ் நங்கைதானே துணை செய்யவேண்டும்? இவளைப் போய்த் தவறாக எண்ணுவது எத்தனை பைத்தியக்காரக் கற்பனை! ஐயோ! அவளுடைய அழகும், அந்தப் பால் போன்ற பரிசுத்தமான முகத்திலே தவழ்கிற சீலமும், சங்கீதத்திலே மூழ்கி மூழ்கிய கலையும்— ஆகா! இதையெல்லாம் தவறாக நினைப்பது எத்தனை பெரிய பேதைமை! பார்க்கப் போனால் அப்படித் தவறாக நினைப்பது பாபம் என்று கூடச் சொல்ல வேண்டும்!

இப்படி எண்ணியதும் பூபதிக்கு அந்தத் தந்தப் பேடகத்தைப் பார்க்கவே எப்படியோ இருந்தது. உபதேசத்தைக் கடைப் பிடிக்க வேண்டியது அவசியந்தான் என்றாலும், அந்தப் பேடகத்தைக் கையிலே வைத்துக் கொண்டு வீண் அச்சத்தினால் பொருளற்ற சந்தேகங்களை எழுப்பிக் கொண்டு மனத்தைச் சஞ்சலப்படுத்துவது பிசகு என்று ஒரு சிந்தனை! அப்படியே தந்தப் பேடகத்தை மூடி வைத்து விட்டுத் தயங்கி நின்றான். 'உண்ணுவதற்கு வாருங்கள்' என்று கிழவர் மறுபடியும் வந்து தன்னைக் கூப்பிடுவதற்கு முன்னால் கீழே இறங்கிப் போய்விட வேண்டும் என்று கருதியவனாக, மாடியின் படிகளிலே வெகு வேகமாக இறங்கினான் பூபதி.

சித்திராங்க பூபதிக்கு அன்று இரவு நடந்த உணவு மரியாதைகள் மூச்சுத் திணறும்படி இருந்தன! சங்கீதம் என்ற கலையைப் போலவே, விருந்துபசரிப்பு என்ற கலையும் மனத்தை மயக்கும்படியாக இருந்தது, அந்தக் குங்கும மாளிகையிலே! ஆனாலும் இத்தனை மயக்கங்களுக்கும் மத்தியிலே, இடையிடையே பூபதிக்கு அந்த மனப் பிரமையின் காட்சியும் அடிக்கடி வந்து தோன்றிக் கொண்டிருந்தது! காமம், மயக்கம், வெகுளி என்ற அந்த மூன்று வார்த்தைகளும் அவனுடைய கண்ணுக்கு முன்னால் திடீர் திடீரென்று தோன்றி அவனை என்னவோ செய்தன!

இதன் பிறகு நாலைந்து நாட்கள் குங்கும மாளிகையில் எவ்விதமான விசேஷ சம்பவங்களுமின்றிக் கழிந்தன. இசை விருந்துகளோ அல்லது பெரிய பிரதானிகளின் கூட்டங்களோ ஏதும் காணோம்! அந்த விசாலமான குங்கும மாளிகை எவ்விதமான பரபரப்பும் இன்றி அமைதியாக விளங்கியது. பூபதிக்குப் படிமவிலாசம் என்ற அறையிலே பொழுதை எப்படிக் கழிப்பது என்ற கவலைக்கு இடமில்லாமல், உண்ணுவதும் உறங்குவதுமாகக் கழிந்தன நாலைந்து நாட்கள். வலம்புரித் தீவை விட்டுப் புறப்பட்ட பிறகு ஏற்பட்ட பிரயாண அலுப்பும், செந்தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்த வினாடியிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக நேரிட்ட அதிர்ச்சிகளுமாகச் சேர்ந்து பூபதியின் நரம்புகளை யெல்லாம் தளர்த்தியிருந்தன. அத்தனை தளர்ச்சியும் இந்த ஐந்து நாட்களில் உறக்கமாகக் கழிந்தது. ஆனால் இத்தனை களைப்புக்கும், அலுப்புக்கும், உறக்கத்துக்கும் மத்தியில், ஒரே ஒரு விஷயம் மட்டும் கலக்கத்தைக் கொடுத்து வந்தது. எப்பொழுதாவது நடு ஜாமத்தில் கண் விழித்தால், பூபதியின் செவியில் யாரோ விம்முவது போல் கேட்கும். சில சமயங்களில் அந்த விம்மல் அதிகமாகி, ஏக்கப் பெருமூச்சாகவும், சோகத்தோடு உள்ளத்தையே உருக்கும்படியான அழுகுரலாகவும் கூடக் கேட்கும். விசாலமான குங்கும மாளிகையின் அறைகளில் எங்கிருந்தோ வந்தது அந்தக் குரல்! கானகத்திலே மான் அழுதால் எப்படியிருக்கும்? கார்காலத்திலே அருவியின் கரையில்

நின்று தோகைவிரித்து ஆடவேண்டிய மயில், தோகையையெல்லாம் சோரப் போட்டு மனமே ஒடிந்து போய்ப் பாறையிலே உடலை ஒடுக்கி அமர்ந்து கொண்டு பிரலாபித்தால் எப்படி யிருக்கும்? வசந்த காலத்தில் இனிய கீதம் இசைக்கும் குயில், 'குவா குவா' என்று அழ ஆரம்பித்துவிட்டால் அது உள்ளத்தை என்ன செய்யும்? அப்படியிருந்தது இரவு நடு ஜாமத்திலே கேட்ட அந்த விம்மலும் அழுகையும்! இன்னும் சில சமயங்களில் அந்த அழுகைக்கு மத்தியிலே இன்னொரு கோபமான குரலும் கேட்கும். அந்தக் கோபக் குரலின் சீற்றம் அதிகரிக்கும் போதெல்லாம் மென்மையான விம்மல்களும் அதிகரிக்கும். ஒரே ஒரு நாள் மட்டும் அந்த விம்மல் அழுகையாகிப் பிறகு இதயத்திலே சம்மட்டி கொண்டு அடிப்பது போல வேதனையைத் தருகிற கதறலாகக் கூடக் கேட்டது. அப்பொழுது பூபதிக்குக் கட்டிலை விட்டு எழுந்து சென்று, அந்த அழுகையின் புதிர் என்ன என்று அறிந்து வரலாமா என்று தோன்றியது. ஆனாலும் பயமும், சித்திரமடல் உண்டாக்கியிருந்த குழப்பமும் சேர்ந்து அவனுடைய ஆவலைக் கட்டுப்படுத்தின!

ஆறும் நாள் காலை சித்திராங்கன் படுக்கையிலிருந்து எழுந்த போது அவனை ஒரு புதிய யோசனை ஆட்கொண்டிருந்தது. அவன் நினைத்தான்:— இந்த ஐந்து நாட்களும் தன்னந் தனியாக, எவ்விதமான பயனுள்ள காரியமும் இல்லாமல் உண்ணுவதும் உறங்குவதுமாகக் குங்கும மாளிகையிலே பொழுதைக் கழிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. தான் வந்த இலட்சியம் வேறு, சம்பவங்கள் நடந்து செல்கிற முறையோ வேறு. அந்தப் பயங்கரமான மனிதன், மாமல்லபுரத்து விடுதித் தலைவனோ, பேச்சு மூச்சில்லாமல், எவ்விதமான செய்தியும் இல்லாமல் எங்கேயோ மறைந்து விட்டான்! இந்த நிலைமையில் குங்கும மாளிகையிலே இப்படியே எத்தனை நாட்களைக் கழிப்பது? இன்றைக்கு எவ்விதமான செய்தியும் இல்லை யென்றால், மாளிகையை விட்டு வெளியேறி விட வேண்டியதுதான். ஆதிரையனைப் போய்ப் பார்த்துவிட வேண்டும். அது முடியவில்லை யென்றால் காஞ்சிமா நகரத்துக்குச் சென்று அங்கே புலவரையாவின் இருக்கையைத் தெரிந்து கொண்டு அவரைப் பார்த்துவிட வேண்டும். மற்றப்படி இந்த இடத்தில் யாரையும் நம்பும்படியாக இல்லை.'

இப்படி நினைத்த சித்திராங்க பூபதிக்கு மறு விநாடியே யாழ் நங்கையின் நினைவும் வந்தது.

யாரையும் நம்பும்படியாக இல்லை என்பது உண்மைதான். ஆனால் அந்த யாழ் நங்கையின் முகத் தோற்றம் அப்படியில்லை. அந்த நிலவு நங்கை ஒரு களங்கமற்ற நிலவு! அந்த முகத்தைப் பார்த்தால் அதற்கு உரிய இதயம் பளிங்கு இதயமாகத்தான் இருக்க வேண்டும். ஆனாலும்?...அன்னையின் உபதேசமும், தந்தப் பேடகமும் மனத்துக்குள்ளே மீண்டும் தோன்றிப் பூபதியைக் கலக்கின.

பூபதி படுக்கையை விட்டு எழுந்து அமர்ந்ததும், எதிரே யிருந்த பெரிய சாய்மானத்தில் ஓலைச் சுருள் ஒன்று இருந்ததைக் கண்டான். சுருளைப் பார்த்ததுமே அது விடுதித் தலைவனிடமிருந்துதான் வந்திருந்தது என்பதைத் தீர்மானித்துக் கொண்டான்! ஏனென்றால், அந்த ஓலையைச் சுருளாகச் சுற்றியிருந்த முறையில் ஏதோ ஒரு குறிப்பிட்ட வகையான அடையாளப் பின்னல் இருந்தது. அதே பின்னலிலேதான் இதற்கு முன்பு தலைவன் கொடுத்த சுருள்களும் இருந்தன.

சித்திராங்கன் அந்த ஓலைச் சுருளை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் எழுதியிருந்தது:—

அன்பே வடிவான அறிவழகு நிரம்பிய சுந்தர குமாரராகிய வலம்புரித் தீவின் இளவரசருக்கு:

தங்களிடம் மீண்டும் குங்கும மாளிகைக்கு விரைவில் வருவதாக எழுதி யிருந்தேன். பிறகு சென்ற வாரம் வருவதாகச் செய்தி அனுப்பினேன். இத்தனைக்கும் பின்னும் நான் அங்கே இதுவரை வாராதது தங்களுக்கு வியப்பாக மட்டும் இருந்தால் குற்றமில்லை. ஆனால் தாங்களோ எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுகிறவர். அதனால்தான் இப்பொழுது இந்த நிருபம் எழுதுகிறேன்.

தயவு செய்து பொறுமையையும் நம்பிக்கையையும் இழந்து விடாமல், குங்கும மாளிகையிலேயே இன்னும் இரண்டு நாட்கள் இருக்கவும். அதற்குள் நான் வந்து தங்களைச் சந்திக்கிறேன். எல்லாம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

இளவரசராகிய தங்களைப் பார்த்ததிலிருந்து, என் மனம் ஏனோ தங்களிடம் கவரப்பட்டு நிற்கிறது. அதன் காரணம் என்ன என்று சொல்ல முடியாது. தங்களுடைய முகத்திலே உள்ள ராஜகளையும், தங்கள் பேச்சிலே உள்ள கண்ணியமும் எப்படி வர்ணித்துச் சொல்வது? காஞ்சிமா நகரத்துக் கடிகையிலே உள்ள

பண்டிதர்களிடம் கேட்டுள்ள ஒரு தொடர் தான் இங்கே நினைவுக்கு வருகிறது. அதாவது புருஷர்களை கண்டு மோகிக்கும்படியான உருவம் என்று பாரதக் கதையில் வருகிறதாம். இதைப் பற்றி மிக விரிவாகப் பண்டிதர்கள் விளக்கம் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்த விளக்கமும் எனக்கு அப்பொழுது சரியாகப் புரியவில்லை. உங்களைப் பார்த்த பிறகுதான் புரிந்தது. ஆடவர்களை காதலிக்கும்படியான அத்தனை அழகு நிரம்பிய தங்கள் உருவம் என் கண் முன்னே எப்பொழுதும் நிற்கிறது. தங்களுடைய தொடர்பைப் பெரிதும் மதிக்கிறேன். அதனால்தான் மீண்டும் மீண்டும் தங்களிடத்தில் இத்தனை சிரத்தையும், அபிமானமும் கொண்டு வற்புறுத்துகிறேன். இதையும் தவறாக எண்ணுகிற அளவுக்கு உங்களுடைய சந்தேக உணர்ச்சி செல்லாது என்று எதிர்பார்க்கிறேன். இங்ஙனம்,

அன்பன்.

இந்த ஓலைச் சுருளைப் படித்ததும், பூபதிக்குச் சந்தேகம் நிற்கவில்லை. அது அதிகமாகத்தான் வளர்ந்தது! 'நம்மிடத்தில் இவனுக்குக் காதலாமே! என்ன கயமை இது!' என்று நினைத்தான். 'எத்தனை புனிதமான அந்த மகாபாரத வர்ணனையை இவன் மேற்கோளாக எடுத்துச் சொல்கிறான்! இத்தனைக்கும் பிறகு எனக்குச் சந்தேகம் வளுக்கக்கூடாது என்று வேறு சொல்கிறானே! என்றும் இல்லாதபடி இப்பொழுது என்னுடைய அழகைப் பற்றி எதற்காகப் பிரமாதமாக வர்ணிக்க முனைகிறான்!'

இப்படி நினைத்துப் பார்த்த பூபதிக்கு மனம் மேலும் குழம்பியது. ஆனாலும் எத்தனை குழப்பத்துக்கு மத்தியிலும் ஆணவம் யாரைத்தான் விட்டது! தான் அழகாக இருப்பதாகப் பிறர் சொல்லக் கேட்கும் போது, அந்த ஆணவம் எத்தனை பெரிய புத்திசாலிகளையும் மயக்கி விடத்தான் செய்கிறது! ஓலைச் சுருளில் மற்ற இடங்களையெல்லாம் விட்டு விட்டு, பூபதி அந்தப் பாரத வர்ணனை வருகிற இடத்தை மட்டும் மீண்டும் ஒரு முறை படித்தான். மாமல்லபுரத்து விடுதித் தலைவனைப் பற்றிய அத்தனை சந்தேகத்துக்குள்ளும், அந்த வாசகங்கள் உள்ளத்துக்கு ஒரு விநோதமான திருப்தியைத் தந்தன. அந்தத் திருப்தியோடு சித்திராங்க பூபதி அன்றையப் பகல் முழுதும் தனது காரியங்களில் அதாவது, உணவிலும் உறக்கத்திலும் கழித்து விட்டான்.


அன்றிரவுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது! அப்பொழுது தீபம் ஏற்றுகிற நேரம்!

சித்திராங்கன் தன் அறையிலே கட்டிலில் அமர்ந்து யோசித்துக் கொண்டேயிருந்த போது, கீழேயிருந்து விம்மலும் அழுகையும் அதிகமாகக் கேட்டன. பிறகு அவற்றைத் தொடர்ந்து ஏதோ தர்க்கப் பேச்சு கேட்டது. மறுபடியும் அழுகையும் விம்மலும்!

சித்திராங்கன் ஓரளவு ஏற்கனவே யூகித்திருந்தான். யாழ் நங்கைக்கும் அவளுடைய அன்னைக்கும் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துத் தர்க்கம் நடக்கிறது என்று நன்றாகத் தெரிந்திருந்தது. இன்று அந்தத் தர்க்கம் பலமாக இருக்கிறது என்று கண்டு கொண்டான் அவன். 'தலைவன் வரும் வரை நாம் ஏன் இந்த வம்புகளுக்குள் எல்லாம் போய் மாட்டிக் கொள்ள வேண்டும்!' என்று நினைத்தவனாக அறையிலேயே இருந்தான் அவன்.

ஒரு நாழிகைப் பொழுது ஆகியிருக்கும். திடீரென்று பாதச் சிலம்புகளின் ஒலி கேட்டுத் திடுக்கிட்டான் பூபதி. இந்த ஒலியைத் தொடர்ந்து படிம விலாசத்தின் சுவரே திறந்து கொண்டது போல் இருந்தது. ஆமாம்; சித்திர சாலைக்குள்ளே செல்லும் அந்த இரகசிய வாசலின் தாமரைத் தகடு திறந்தது. அதைத் தொடர்ந்து அன்னப் பறவை தண்ணீரிலே மிதந்து வருவது போல, யாழ் நங்கை படிம விலாசத்துக்குள்ளே நுழைந்தாள்.

சித்திராங்கன் பதறிப் போனவனாக எழுந்து நின்றான். அவனுக்குக் கையும் காலும் 'வெட வெட' என்று நடுங்கின. வாலிபப் பருவத்தின் எழிலெல்லாம் மேனியிலே பொங்கி ஓடுகிற ஓர் இளம் நங்கையைப் பூபதி தனியாகச் சந்திப்பது, வாழ்க்கையில் இதுதான் முதலாவது அநுபவம்! ஆனால் அந்த அநுபவத்தின் விளைவாக அவன் அத்தனை பெரிய தீர்மானத்துக்கு வருவான் என்றும், அத்தனை விரைவில் அத்தனை உறுதியோடு ஒரு மகத்தான முடிவைச் செய்வான் என்றும் யாரும் எதிர்பார்க்கவில்லை. பூபதியுமே அதைப் பற்றி அதுவரை முழுமனத்தோடு நினைத்துப் பார்க்கவில்லை. அன்பும், பேரியாழின் பாசமும் சித்திராங்க பூபதியை அத்தனை தூரம் ஆட்கொண்டிருந்தன! (தொடரும்)



கல்லிடைக்குறிச்சி கல்யாணம்

கல்லிடைக்குறிச்சி அன்று திருமண கோலாகலத்தில் மூழ்கித் திளைத்தது. சென்னை இண்டோ கமர்ஷியல் பாங்கின் டிபுடி சேர்மனும், இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்டின் மானேஜிங் டைரக்டருமான பிரபல தொழிலதிபர் ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்கஐயர் தமது புதல்வி சௌபாக்கியவதி கோமதியின் திருமணத்தை ஜூன் மாதம் 11-ந் தேதி வெகு விமரிசையாக நடத்தி வைத்தார். சென்னை ஸ்டேட் பாங்க் ஸ்ரீ வி. எஸ். சுப்பிரமணிய அய்யரின் குமாரர் சிரஞ்சீவி எஸ். தண்டபாணி சௌபாக்கியவதி கோமதியை மணம் புரிந்து கொண்டார். அந்தத் திருமண வைபவத்தில் பிரமுகர்களும், நண்பர்களும் உறவினர்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பிரமுகர்களிடமிருந்தும் மற்றும் நண்பர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்து குவிந்தன. திருமணம் நடந்த ஐந்து தினங்களிலும் நிகழ்ந்த இன்னிசைக் கச்சேரிகளும், நடன விருந்தும், நாடகமும் வந்திருந்தவர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தின. புது மணம் புரிந்து கொண்ட தம்பதிகளுக்கு நம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, கோமதி—தண்டபாணி!

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

34

அன்பின் சக்தி, அஹிம்சையின் சக்தியும் மிகப் பெரிது. வேறு எதற்கும் அந்த அளவு சக்தி இல்லை. ஆனால் இந்தச் சக்திக்குப் படாடோபம் உதவாது. ஆரவாரம், வேஷம், விளம்பரம் இவற்றுக்கு இதில் இடமில்லை. தன்னம்பிக்கைதான் இதன் அடிப்படை. உள்ளத்தில் தன்னம்பிக்கை உண்டாவதற்கு உள்ளத்தில் பரிசுத்தம் இருக்க வேண்டும். உள்ளத்தை ஒருவன் களங்கமறக் காப்பாற்றிக் கொண்டால், அவனுடைய சுத்தமும் தைரியமும் பிறருடைய உள்ளத்தையும் சுத்தப்படுத்தும். அவனிடம் சேரும் மக்கள் அனைவரும் உள்ளத் தூய்மையடைவார்கள். சூழ்நிலை முழுதுமே துப்புரவடையும்.

[யங் இந்தியா 6-4-28]

தன்னுயிரும் பிற உயிரும் ஒன்றே என்கிற உணர்ச்சியை அடைவதற்கு முதலில் மனத்தில் தூய்மை வேண்டும். உள்ளம் துப்புரவாக இல்லாமற் போனால் அஹிம்சை என்பது வெறும் கனவேயாகும். உள்ளத்தில் மாசு வைத்திருப்பவன் ஆண்டவனைக் காண மாட்டான். எல்லாக் காரியங்களிலும் தூய்மையிருக்க வேண்டும். தன் உள்ளத்தைத் தான் சுத்தப் படுத்திக் கொண்டால் சூழ்நிலை தானாகவே சுத்தப்படும்.


எப்படிச் சுத்தத்தை அடைவது? எளிதல்ல. கஷ்டமான காரியமே. மனம், வாக்கு, செயல் மூன்றிலும் ஆசையாவது துவேஷமாவது இருக்கக் கூடாது. விருப்பு வெறுப்பு என்கிற இரண்டு வேகங்களையும் எதிர்த்துச் செல்ல வேண்டும். கருத்து, பேச்சு, செயல், இம்மூன்றும் பூரண பரிசுத்தத்தை அடைவதற்காக நான் இடைவிடா முயற்சி செய்து வருகிறேன். என் முயற்சி இன்னும் பூரண வெற்றி அடையவில்லை. இந்த நிலையில் எல்லாரும் என்னைப் புகழ்ந்து பேசுகிறார்கள். அது எனக்கு மகிழ்ச்சி தரவில்லை; கஷ்டம்தான் தருகிறது. படையெடுத்து விரோதிகளை வென்று, ராஜ்யம் சம்பாதிப்பதைக் காட்டிலும் நம்மைத் தாக்கும் விருப்பு வெறுப்புகளை வென்று சாந்தி நிலையடைவது அதிக கஷ்டமான காரியம்.

[1948-பதிப்பு. சுயசரிதம்-615-620]

முயற்சியை விட்டு விடக் கூடாது. தோல்வி என்று எண்ணி இந்த யுத்தத்தில் பின் வாங்கக் கூடாது. ஒரு தோல்வி ஏற்பட்டால் 'இனி மேல் உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வேன்' என்று சங்கற்பம் செய்து கொண்டு, 'உன் கட்டளைப் படி' என்று ஆண்டவனுக்கு விட்டு விட வேண்டும். அகங்காரம் கொண்டவனுடைய பிரார்த்தனையை பகவான் ஏற்றுக் கொள்ள மாட்டான். அவனிடம் வியாபாரம் செல்லாது. எந்தவிதமான வியாபாரமும் செல்லாது. பயமின்றி, சந்தேகமின்றி அவனை அணுக வேண்டும். தீனனாக அணுக வேண்டும். 'நான் நீசன், என்னைக் கைவிடாதே' என்று தைரியத்துடன் அணுக வேண்டும். அவனுக்கு அனைவரும் சமம். லட்சக் கணக்கான பக்தர்களுக்கு அவன் அருள் காட்டியிருக்கிறான். உனக்கும் அருள்வான். பெரும் பாபம் செய்தவனுக்கும் "நீயே கதி" என்று பிரார்த்தித்தால் அருள்வான். என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து இதைச் சொல்லுகிறேன். நரக வேதனையில் நான் அவன் அருளை அடைந்திருக்கிறேன். அவனுடைய அருளைப் பெற்றால் அனைத்தும் பெறுவோம்.

[யங் இந்தியா 4-4-29]


ஜூன் 29 முதல்
சென்னையில் .....
காஸினோ
கிரௌன்
சயானி மற்றும்
தமிழ் நாடெங்கும் ....
வீனஸ் பிக்சர்ஸ்
அமரதீபம்
டைரக்ஷன்
T.பிரகாஷ்ராவ்
கதை, வசனம்
....ஸ்ரீதர்.....
...தயாரிப்பு : S.கிருஷ்ணமூர்த்தி ....



இதுவன்றோ

தருமத்தை இந்தக் காலத்தில் எத்தனையோ வகைகளில் செய்கிறார்கள். அவரவர்களும் அவரவர் சக்திக்கு மேல் ஒரு காரியத்தைச் செய்யும்போது தருமம் என்று சொல்லிக் கொள்வதில் அவர்களுக்கு உரிமை உண்டு. அதை யாரும் குறை கூற முடியாதுதான்.

ஆனாலும் சென்ற மாதம் கோயமுத்தூரிலிருந்து அவினாசி செல்லும் சாலையில் இருக்கும் பீளமேடு (பீர்மேடு அல்ல!) என்னும் ஊரில் பி. எஸ். ஜி. குடும்பத்தார் செய்தது போன்ற சிறப்பான தருமத்தை நான் சமீபத்தில் வேறு எங்கும் கண்டதில்லை.

** ** **

கோயமுத்தூரைச் சேர்ந்த பீளமேட்டில் இந்தக் காலத்துக்கு வேண்டிய பொருத்தமான கல்வித் திருப்பணியைச் செய்ய முன் வந்த பி. எஸ். ஜி. குடும்பத்தார் நீண்ட காலமாகவே ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்தும், கோயில்கள் கட்டியும், குளங்கள் வெட்டியும், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியும் மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்வதில் முன்னணியில் நின்று வந்திருக்கிறார்கள்.

பீளமேட்டில் 'பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்' என்ற ஒரு தொழில் கலாசாலையை ஆரம்பித்து நடத்தி வருவோர் கோயமுத்தூரில் பிரபலம் வாய்ந்த பி.எஸ்.ஜி. குடும்பத்தினர் என்பதைத் தமிழ் நாட்டைச் சேர்ந்த பலரும் அறிவோம். இந்த அறநிலைய ஸ்தாபகர் திவான் பகதூர் பி.எஸ்.ஜி. ரங்கசாமி நாயுடு அவர்கள் யார் என்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஸ்ரீ பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு பிறக்கும்போதே செல்வம் கொழிக்கும் குடும்பத்தில் பிறக்கவில்லை; பெரிய பட்டப் படிப்பும் பெறவில்லை. அவர் தமது உழைப்பின் சக்தியினால் ஏராளமான பொருள் திரட்டினார். சேவையின் சிறப்பினால் திவான்பகதூர் என்ற பட்டத்தைப் பெற்றார். ஸ்ரீ ரங்கசாமி நாயுடு தமது சகோதரர்களின் உற்சா

வாய்ந்த பி.எஸ்.ஜி. குடும்பத்தினர் வசதி செய்து தர

உதவியுடன் செய்வதைக் காட்டிலும் சொந்தமாகச் செய்வது பெரிய சாதனை என்று சொல்வது மிகையல்ல. நம் நாட்டில் தருமக் காரியங்களுக்குக் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒத்து வேலை செய்வது குறைவு. அதிலும் இது போன்ற கல்வித் திருப்பணிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆதலின் பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடுவின் சாதனை அபாரமானது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

மக்களுக்குக் கல்வி தருமம் செய்ய வேண்டும் என்னும் உத்தம முயற்சியை முப்பது ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்தார். அப்பொழுது இருந்த வெள்ளைக்கார சர்க்காரிடம் சென்று, ''நான் கொஞ்சம் பணம் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு தாங்கள் கொஞ்சம் பணம் போட்டு எங்கள் பீளமேடு கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கி நடத்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ''இந்தச் சின்ன கிராமத்தில் பள்ளிக்கூடம் நடத்துவது பணத்துக்குத்தான் வீண் நஷ்டம்'' என்று சொல்லி விட்டது ஆங்கிலேய சர்க்கார்.

இதைக் கேட்டதும் ஸ்ரீ நாயுடுவுக்கு 'ஷாக்' ஏற்பட்டு விட்டது. வெள்ளைக்கார சர்க்கார் நம்முடைய ஏழை எளிய மக்களுக்குக் கல்வி வசதி செய்து தரமாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டார். சர்க்காரை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தார். எனவே தமது சகோதரர்களுடன் சேர்ந்து ஆலோசனை செய்தார். தாமே தம்முடைய செல்வத்தில் இருந்தே ஒரு அறநிலையம் ஸ்தாபித்து அதன் மூலம் கல்வித் தொண்டு செய்து வருவது என்று தீர்மானித்து விட்டார்.

இப்பொழுது வினோபாஜி அவர்கள் ஆறில் ஒரு பங்கு தருமம் செய்ய வேண்டும் என்று சொல்லி வருகிறார் அல்லவா? குடும்பத்தில் தம்மையும் ஓர் அங்கத்தினராக நினைக்க வேண்டும் என்று கூறித் தாம் மேற்கொண்

மக்களை எண்ணினார். அந்த ஏழை எளிய மக்களுக்குத் தொண்டாற்றுவதே கடவுள்தொண்டு என்று கருதினார். ஐந்தில் ஒரு பங்குத் தொகையான இரண்டு லட்ச ரூபாய் மூலதனத்துடன் தான் பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் அற நிலையம் தோன்றியது. இந்த அறநிலையப் பரிபாலனத்தில் இப்பொழுது எத்தனையோ பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும், கல்லூரிகளும் ஆஸ்பத்திரிகளும் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன.



அற நிலையம் இப்பொழுது கோடிக் கணக்கில் மூலதனம் உடையதாகப் பரவித் தழைத்து நூற்றுக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்றுக் கொடுப்பதுடன், இணையற்ற தொழிற் கல்வியையும் அளித்துவருகிறது.

இந்த அறநிலையக் கல்வி ஸ்தாபனங்களை மிகுந்த சிரத்தையோடும் அக்கறையோடும் பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு அவர்களின் .குமாரர்கள் கவனித்து வருகிறார்கள். மூத்த புதல்வர் திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் பி. எஸ். ஜி. தொழிற் கல்லூரியின் பிரின்ஸிபாலாகத் தொண்டாற்றி வருகிறார். அடுத்த புதல்வரான ஸ்ரீ ஜி.ஆர்.

தர்மம்!



கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் இந்தக் கல்விஸ்தாபனங்களின் மானேஜிங் டிரஸ்டியாகவும், கரஸ்பாண்டெண்டாகவும் இருந்து மிகச்சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். இவ்விருவரும் பி. எஸ். ஜி. அற நிலையத் திருப்பணிகளை எவ்வளவு உற்சாகமாகவும் திறமையாகவும் நிர்வகிக்கலாமோ அவ்வளவு திறமையாக நிர்வகித்து வருகிறார்கள். பி. எஸ். ஜி. அற நிலையக் கல்வி ஸ்தாபனத்தின் மூலம் 'பீளமேடு' தமிழ் கூறும்; நல்லுலகம் எங்கும் புகழ்பெற்றுத் திகழ்ந்து! வருகிறது என்றால் அது மிகைபடக் கூறுதல் ஆகாது. 'பி. எஸ். ஜி. தொழில் கல்லூரி' பி. எஸ். ஜி. அற நிலையத் தொண்டுகளில் சிகரம் போன்றது. இப்போது அந்தச் சிகரத்தின் மீது ஒரு பொன் விளக்கை ஏற்றி வைத்தது போலக் கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஆரம்பித்து அதன் திறப்பு விழாவையும் சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள். ஸ்ரீ ஜி. ஆர். கோவிந்தராஜுலு நாயுடுவின் பெரு முயற்சியினாலும் தாராள சிந்தையாலும்தான் இந்தப் பெண்பாடசாலை தோன்றியது. தம்முடைய தாயாரின் பெயரில் ஒரு பெண்கள் பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே கனவு கண்டார். அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்கள் வெறும் ஏட்டுக் கல்வி பயிலும் பெண்களாக இல்லாமல் தமிழ் நாட்டின் சிறப்பு மிக்க தாய்மைப் பண்புக்கு எடுத்துக் காட்டாகவும், குடும்பத்தில் ஒளி வீசும் திரு விளக்காக விளங்கும் பெண் தெய்வங்களாகவும் திகழவேண்டும் என்று விரும்பினார். அந்த விருப்பம் நிறைவேறும் வகையில் அவர் கனவு நனவாகும் காலம் வந்தது. அதாவது ஏற்கனவே பி. எஸ். ஜி. அற நிலையத்தைச் சேர்ந்த சர்வ ஜன உயர்நிலைப் பள்ளியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வந்தனர். அதில் பெண்கள் மட்டும் இருநூற்று முப்பது பேர் இருந்தனர். இதற்கு மேல் அதிகமாக அந்தப் பள்ளியில் பெண்கள் சேர முடியாமல் இருந்தது. அதிலும் வசதி படைத்த' குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தான் அதில் சேர்ந்து படிக்கும்படியான சூழ்நிலை இருந்தது. கிராமங்களில் உள்ள பெண்கள் அந்தப் பள்ளியில் சேர்ந்து படிக்கத் தைரியமாக முன் வரவில்லை. கிராமத்



பிரபல திருமணம்



காஞ்சீபுரம் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி ரெஸிடெண்ட் மெடிகல் ஆபீஸர் டாக்டர் L. A. முத்து M.B.B.S., D.L.O.க்கும் திருச்செங்கோடு ஸ்ரீ ஆர். ஏ. குமரேச முதலியார் குமாரத்தி செல்வி சகுந்தலாவுக்கும் 11-6-56ம் தேதி திருச்செங்கோட்டில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க. முத்து – சகுந்தலா!

துப் பெண்கள் உற்சாகமாக வந்து சேர்ந்து படிப்பதற்காகவே பெண்களுக்கென்று தனிப் பள்ளியை ஆரம்பித்தார். அதற்குத் தமது தாயாரின் திருநாமத்தைச் சூட்டினார். அவருடைய உற்சாகம் எல்லை கடந்ததாயிற்று. பள்ளிக்கூடத் திறப்பு விழாவை அமோகமாக நடத்துவதென்று தீர்மானித்தார்.

சென்னையிலிருந்தும், இன்னும் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பிரமுகர்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்தார். ஒவ்வொருவரையும் தனித்தனியே பார்த்து எப்படிப் பேசி ஏற்பாடு செய்தார் என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

விழாவை முதன் மந்திரி காமராஜர் ஆரம்பித்து வைத்தார். முழுப் பள்ளிக்கூடத்தையும் கல்வி மந்திரி சுப்பிரமணியம் திறந்து வைத்தார். சுவாமி சித்பவானந்தா அடிகள் பள்ளிக்கு ஆசி கூறினார். காந்தி கிராமத் தலைவி ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் எம். எல். ஏ. பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றிப் பேசித் தொடக்க உரை நிகழ்த்தினார். இந்தத் திறப்பு விழாவுக்கு ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு எம். எல். ஏ., தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

** ** **

ஸ்ரீ ஜி. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு ஜப்பான் முதலிய வெளி நாடுகளுக்குச் சென்று அந்நாட்டு மக்கள் கல்வியையும் தொழிலையும் எப்படி ஒன்று சேர்த்துப் பயின்று வருகிறார்கள் என்பதை நேரில் பார்த்து வந்தவர். நவீன மேனாட்டுக் கல்வியிலும் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் தமிழ் நூல்களிடத்திலும் அவர் பற்றுடையவர்.

கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர் நிலைப் பள்ளி திறப்புவிழாவில் வரவேற்புரை நிகழ்த்தும் போது சில உண்மைகளைக் கூறினார்.

"அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியாரின் பாடலைப் படித்தாராம். அப்போதிலிருந்தே கல்வி நிலையம் கட்டுவதிலும், தமது தந்தையார் ஆரம்பித்த கல்வி நிலையத்தைப் பேணி வளர்ப்பதிலும் ஊக்கம் எடுத்துக் கொண்டாராம். எதிர்காலத்தில் இந்த நாட்டில் எல்லாப் பிள்ளைகளும் எந்த விதமான கல்வியும் பயிலுவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து விட வேண்டும் என்று தீர்மானித்தாராம். அந்தத் தீர்மானத்தின் ஆரம்பமாகத்தான் இந்தக் கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஆரம்பித்தாராம். இதற்காகச் சுமார் ஐந்து ஏக்கர் நிலம், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய கட்டடம் தவிர அவர்கள் குடும்ப நிர்வாகத்தில் உள்ள பஞ்சு ஆலைக் கம்பெனிகளின் அறுபத்தையாயிரம் ரூபாய் மதிப்புள்ள பங்குகளையும் எழுதி வைத்திருக்கிறார். இதற்கு எண்டோமெண்டாக முப்பத்தையாயிரம் ரூபாயையும் ஒதுக்கி யிருக்கிறார். இந்த முதலுக்குள்ள வருமானத்தைக் கொண்டும், வசதி உள்ள போது மேலும் நிதியைக் கொடுத்தும், சுமார் ஐந்து ஆண்டுகளில் இந்தப் பள்ளியை ஒரு கல்லூரியாக உயர்த்தப் போவதாகக்கூறினார்.

ஸ்ரீ கோவிந்தராஜுலு நாயுடுவின் மனோரதம் நிறைவேறுவது அப்படி ஒன்றும் பிரமாதமான காரியமில்லை. விரைவிலேயே நிறைவேறி விடும் என்று நம்புகிறேன்.

புதிய பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதில் ஸ்ரீ கோவிந்தராஜுலுவுக்கு இவ்வளவு மோகம். அவருடைய தமையனார் ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்குப் புதிய பள்ளிகளை ஆரம்பிப்பதில் மோகம் என்பது மட்டுமல்ல, அது நல்ல முறையில் நடைபெறுவதற்கு இடையூறு செய்பவர்கள் மீது கோபம். பள்ளிக்கூடத்தில் நன்றாகப் படிக்காத பிள்ளைகளை மேல் வகுப்புக்கு மாற்ற வேண்டும் என்று சிபாரிசு செய்ய வருகிறவர்கள் மீது கோபம். எதிர்பார்த்த அளவு அவருடன் ஒத்துழைத்துப் பள்ளிகளின் வளர்ச்சியில் பணி செய்யாத ஆசிரியர்கள், பள்ளிக்கூடச் சிப்பந்திகள் மீது கோபம். இவை எல்லாவற்றையும் விடத் தொழில் கல்வியின் அருமை தெரியாத பெற்றோர்கள் மீதும், பிள்ளைகள் மீதும் அவருக்கு அளவுகடந்த கோபம்.

இப்படிப்பட்ட குணம் உள்ளவர்கள்தான் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரன் அவர்களிடம் இந்தப் பண்புகள் இருக்கின்றன. அதோடு நிர்வாகத் திறமையும் இருக்கிறது. இந்தத் திறப்புவிழாவைத் தம்சகோதரருடன்சேர்ந்து

இவ்வளவு சிறப்பாக நடத்தியதே இதற்குச் சான்றாகும். தமிழ் நாட்டில் தொழிற்கல்வி வளராது என்று யாராவது கனவு கண்டால் அது இனி ஒருகாலும் பலிக்கப் போவதில்லை. ஏனெனில் தொழிற் கல்விக்குப் பீளமேட்டில் நிலையான கல்லூரியை நிறுவி அதன் தலைவராகவும் இருந்து அற்புதமான முறையில் பணியாற்றி வருகிறார் ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரன்.

கடைசியில் விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்களை வரவேற்று உபசரித்து மாலை சூட்டிய ஸ்ரீ பி. எஸ். ஜி. வெங்கிடசாமி நாயுடு அவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறியே தீர வேண்டும். தலையிலே தலைப்பாகை அணிந்து நெற்றி நிறைய நாமத்தைச் சூட்டிக்கொண்டு தித்திக்கும் திருப்பாவை பாடல்களைப் பக்தியுடன் பாடி மந்திரிகளுக்கும், விழாத் தலைவர்களுக்கும் மாலைகள் அணிவித்த பண்பு மறக்க முடியாது. பி. எஸ். ஜி. குடும்பத்தின் பழைய தலைமுறையைச் சேர்ந்த முதியவர்; எல்லாருக்கும் மூத்தவர். மிகவும் கொடுத்து வைத்த பாக்கியசாலி. தமது குடும்பத்தின் புகழ் சிறக்கத் தமது சந்ததிகள் செய்து வரும் அறப் பணிகளைப் பார்த்து மகிழும் பாக்கியம் பெற்றவர். அவர் தமிழன்பையும், அவரிடம் நிறைந்துள்ள தமிழனுக்குரிய பண்பையும் என்னவென்று சொல்வது?

பீளமேடு சென்றதில் இன்னும் சில மகிழ்ச்சிகரமான அனுபவங்கள் ஏற்பட்டன.

பி. எஸ். ஜி. குடும்பத்தினர் நடத்தும் அற நிலையங்கள் அத்தனையும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் சம்பந்தப்பட்ட பன்னிரண்டு ஸ்தாபனங்களைப் பற்றியும் சொல்லுவது என்றால் அது மகா பாரதமாக முடியும். ஆனாலும் ஒரே ஒரு ஸ்தாபனத்தைப் பற்றி மட்டும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அற நிலையமான பி.எஸ்.ஜி. தொழில் கல்லூரியையும், அதன் தொழிற்சாலையையும் பார்த்தபோது ''இதுவன்றோ தருமம்!'' ''இதுவன்றோ தருமம்!'' என்று அடிக்கடி சொல்ல வேண்டி வந்தது.

தமிழ் மக்கள் இத் தொழில் ஸ்தாபனத்தை நேரில் பார்த்துப் பயனடைய வேண்டியது மிக மிக அவசியம். வாருங்கள், பி. எஸ். ஜி. தொழிற் சாலைக்குள் செல்வோம். இந்த நாட்டில் நல்ல முறையில் நவீன இயந்திரங்களை உருவாக்க முடியாது என்று இன்னும் சிலர் சொல்லிக் கொண்டு திரிகிறார்களே, அப்படிப்பட்ட புண்ணியவான்கள் எல்லாம் சற்று அகலக் கண்களைத் திறந்து கொண்டு வாருங்கள். பி. எஸ். ஜி. தொழிற்சாலைக்குள் நடக்கும் இணையற்ற அதிசயங்களை நேரில் காணலாம். (அடுத்த இதழில் முடியும்)

வட்டமேஜை

கிராம வைத்திய உதவி

வைத்தியப் பட்டதாரிகளுக்குக் கிராமங்களில் நிரந்தரமாக இருக்கும் உத்தேசம் கிடையாது. அத்துடன் அங்கு அவர்களுக்கு வாழ்க்கை வசதி, தக்க சூழ்நிலை முதலிய சௌகரியங்கள் இல்லை என்ற காரணங்களினால் கிராம ஆஸ்பத்திரிகள் அதிகம் ஏற்படுத்த முடியவில்லை. சில மூடியும் கிடக்கின்றன.

வைத்தியத் துறையில் அனுபவம்தான் முக்கியம். ஆனால் அனுபவத்துக்குத் தக்க ஆதரவு இன்மையும் சர்க்கார் அங்கீகாரம் பெற்றவர்கள்தான் வைத்திய இலாகாவின் கீழ் வேலை பார்க்கவும், வைத்தியத் தொழில் புரியவும் உகந்தவர்கள் என்பதாலும், இன்று டாக்டர்கள் பற்றாக்குறை என்ற நிலையை உண்டாக்கி யிருக்கிறது.

நூற்றுக்கு சுமார் 75 சத விகிதம் சாதாரண வியாதிகளே. அவற்றிலும், கிராம எளிய மக்களுக்கு எளிய வாழ்க்கையிலிருக்கும் வைத்தியர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்தான் இன்று ஏதோ உதவி வருகிறார்கள். ஆனாலும் சர்க்கார் தங்கள் கடமையாகக் கிராம ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி உதவி புரிந்தால் இன்னும் நலமா யிருக்கும். இது குறித்துச் சர்க்கார் ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரிகளில் மருந்து செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கம்பவுண்டர்களை நல்ல முறையில் உபயோகித்துக் கொள்ளலாம்.

கம்பவுண்டர் தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் ஆஸ்பத்திரியில் தங்கள் மருந்து கொடுக்கும் தொழில் மட்டுமின்றி இதர உதவிகளையும் டாக்டர்களுடன் இருந்து செய்து வருகிறார்கள். அவர்கள் ஆஸ்பத்திரி நிர்வாகம் உள்பட, நல்ல வைத்தியத் தொழில் அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் கிராம சேவா உணர்ச்சியோடு உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சி அளித்து, கிராம உதவி நிலையங்களில் நல்ல ஊதியம் கொடுத்து டாக்டர்களாக அமர்த்தினால் நல்ல பயன் உண்டு.

மேட்டூர்
25—6—56
என். கிருஷ்ண ராவ்

*


" தலைநகரிலே "

ஜூன் 10ம் தேதி கல்கி இதழில் 'தலைநகரிலே!' என்ற பகுதியில் '' தானம் கொடுத்த மாட்டை....'' என்பதைப் படித்தவுடன் அந்தப் பகுதியின் தலைப்பு 'தலைநகரிலே!' என்பதா அல்லது 'அமெரிக்காவிலே!' என்பதா என்று புரியவில்லை.

ராஜாஜி அவர்கள் 'அமெரிக்க உதவி வேண்டாம்' எனக் கூறி வருவது, உதவியெனக் கொடுக்கும் சாமான்களின் தராதரத்துக்காக அல்ல. பாரத மக்களின் தன்மானத்தையும், அமெரிக்க உதவியின் குறிக்கோளை முன்னிட்டும், உதவி வேண்டாம் என்கிறாரே ஒழிய, அவர்கள் கொடுக்கும் இன்ஜின்களுக்கு உதிரி பாகங்கள் கிடைக்காது என்பதற்கல்ல.

மாபெரும் சாதனைகளைக் குறுகிய காலத்தில் சாதித்த சித்தரஞ்சன் வல்லுநர்களுக்கு அந்த ரயில் இன்ஜின்களுக்கு உதிரிபாகங்களைத் தயார் செய்வது ஒரு பெரிய காரியமா?

காபூல் (ஆப்கானிஸ்தானம்)
21—6—56
ஞானகிரகம்



திருச்சி ஜில்லா திண்ணனூர் வாசியும், கொழும்பு பிரபல வர்த்தகருமாகிய திரு செ. மாரியா பிள்ளை அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி ஜானகிக்கும், கரிய மாணிக்கம் லேட் திரு ராம. பெரு. ரெங்கசுவாமி பிள்ளை அவர்களின் கனிஷ்ட புதல்வரும், கண்டி தலாத்தோயாவிலுள்ள கலிய பெருமாள் தோட்டச் சொந்தக்காரராகிய ரெ. கோவிந்தசுவாமி பிள்ளையவர்களின் இளைய சகோதரருமாகிய சிரஞ்சீவி பெருமாளுக்கும் (AGRICULTURIST) மணமகன் இல்லத்தில் 18-6-56-ல் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. 20-6-56-ல் கொழும்பு, பம்பலப்பிட்டிய திரு மாரியா பிள்ளை அவர்களின் இல்லத்தில் நடத்திய சிற்றுண்டி விருந்துபசார வைபவத்திற்கு ஏராளமான நண்பர்களும், பந்துக்களும், பிரமுகர்களும் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தினார்கள். வாழ்க, ஜானகி-பெருமாள்

முதல் மந்திரிக்கு ஜே!

சாவி

"சமீப காலமாக ரயில்களிலும் பஸ் நிற்குமிடங்களிலும் பிச்சைக்காரர்கள், தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்துப் புனையப்பட்ட பாடல்களைப் பாடிப் பிச்சை எடுத்துவருகின்றனர்."

— ஒரு செய்தி

காட்சி 1

இடம்: கோவைக்குச் செல்லும் ரயிலில் முதல் வகுப்பு வண்டி.

நேரம்: விடியற்காலம்.

[சென்னை ராஜ்ய முதல் மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி மேற்படி முதல் வகுப்பில் அரைகுறைத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார். ஒரு பிச்சைக்காரன் உள்ளே நுழைந்து "கா..கா..கா.." என்னும் சினிமாப் பாட்டு மெட்டில் பாடத் தொடங்குகிறான்.]

"தா...தா...தா...!

தட்சிணப் பிரதேசம் தா...தா...தா..."

[இந்தப் பாட்டைக் கேட்டு விட்டு அந்தரங்கக் காரியதரிசி அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்கிறார்.]

அந்தரங்கக் காரியதரிசி (கோபத்துடன் தமது சட்டைப் பையிலிருந்து இரண்டணாவை எடுத்து அவனிடம் நீட்டிக் கொண்டே):-இந்தா! தொலைந்து போ. இனி இந்தப் பாட்டைப் பாடாதே!

பிச்சைக்காரன் (செவிடன்):— சந்தோஷமாகத் தலையசைத்து விட்டு மீண்டும் "தா..தா..தா..!" என்று பாடிக்கொண்டே அடுத்த வண்டிக்குச் செல்கிறான்.

காட்சி 2

இடம்: முதல் மந்திரி ஜாகை.

நேரம்: அந்தி நேரம்.

அ. காரியதரிசி: போச்சு! குடிமுழுகிப் போச்சு!

முதல் மந்திரி:-என்ன? என்ன? என்ன? என் மந்திரிப் பதவிக்கு ஏதாவது ஆபத்தா?

அ. காரியதரிசி:-ஆமாம்; எங்கே போனாலும் 'தா..தா..தா' என்கிறார்கள்.

முதல் மந்திரி:- என்னத்தை? முதல் மந்திரிப் பதவியையா? கிடக்கிறார்கள் உதவாக்கரைகள்!

அந்தரங்கக் காரியதரிசி:-இல்லை; உதவாக்கரைகள் இல்லை. பிச்சைக்காரர்கள்!

முதல் மந்திரி:- என்ன? பிச்சைக்காரர்களா? பிச்சைக்காரர்களா முதல் மந்திரிப் பதவி கேட்கிறார்கள்?

அ. கா:- ஊஹூம்; தட்சிணப் பிரதேசம் கேட்கிறார்கள்!

முதல் மந்திரி:- தட்சிணப் பிரதேசமா? இவர்கள் பிச்சை எடுப்பதற்குத் தமிழ் நாடு மட்டும் போதாதா? காரியதரிசி! இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது.

அ. கா:- ஆமாம்; தங்கள் மந்திரிப் பதவியைக் கவிழ்க்கவே யாரோ சதி செய்திருக்கிறார்கள். பிச்சைக்காரர்களுக்கெல்லாம் இந்தத் 'தா...தா' பாட்டைக் கற்றுக் கொடுத்து ஊருக்குள் தட்சிணப் பிரதேசத்துக்கு ஆதரவு தேடுகிறார்கள்.

முதல் மந்திரி:- ஆகையால் நாம் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்?

அ. கா:- உடனே இந்தப் பிச்சைக்காரர்களை அடியோடு தொலைத்துத் தலைமுழுக வேண்டும்.

முதல் மந்திரி:-அதற்கு வழி?...

அ. கா:- தட்சணமே அவர்களைப் பிடித்து உள்ளே தள்ள வேண்டியது தான்.

முதல் மந்திரி:- இங்கே பிச்சைக்காரர்கள் ஆயிரக் கணக்காக இருக்கிறார்களே! இவர்கள் அவ்வளவு பேரையும் பிடிப்பது கஷ்டமாயிற்றே! பிடித்தாலும் வைத்துக் காப்பாற்றுவது அதைவிடக் கஷ்டமாயிற்றே! இவர்களுக்கு யார் சாப்பாடு போடுவது? ஒரு குற்றமும் செய்யாத இவர்களை என்னமாய்ப் பிடிப்பது?


அ. காரியதரிசி:- இவர்களை வெளியே வைத்திருந்தால் நம் பதவிக்கே ஆபத்து வந்து விடும். ஆகவே இவர்களைப் பிடிப்பதற்கும் வழி கண்டு பிடித்து வைத்திருக்கிறேன்.

முதல் மந்திரி (ஆச்சரியத்துடன்):- என்ன அது?

அ. காரியதரிசி:- டிக்கட் இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்யும் பிச்சைக்காரர்களை டிக்கட் இல்லாத குற்றத்தைச் சுட்டிக் காட்டிக் கைது செய்து சிறையில் போட்டுவிடலாமல்லவா?

முதல் மந்திரி:- சபாஷ்! அருமையான யோசனை! சரி; மீதமுள்ள நடுத்தெருப் பிச்சைக்காரர்களை என்ன செய்வது?

அ. காரியதரிசி:- அவர்களையும் ஏதாவது ஒரு குற்றத்தின் கீழ் கைது செய்து விடும்படி போலீஸ் இலாகாவுக்கு உத்தரவு போட்டு விட்டால் போகிறது.



செல்வி : தெய்வஜோதி
செல்வன் : பவுன் ராஜன் B. A.

இவர்கள் திருமணம் 17 - 6 - 56ந் தேதி தூத்துக்குடி மணமகள் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. மணமகள் ஸ்ரீ ஏ. தியாகராஜ நாடார் புதல்வி. மணமகன் ஸ்ரீ அ. விநாயகமூர்த்தி நாடார் புதல்வன்.

அப்புறம் இந்த நாட்டில் பிச்சைக்காரர்களின் தொந்தரவே இருக்காது. தட்சிணப் பிரதேச ஆதரவும் அத்துடன் நசித்துப் போய்விடும்.

முதல் மந்திரி :- பலே! பலே! மிகவும் அபூர்வமான யோசனை. மெச்சினேன் உமது புத்தியை! அடுத்த பொதுத் தேர்தலில் நானே முதல் மந்திரியாக வந்தால், அப்போது மீண்டும் நீரே நமது அந்தரங்கக் காரியதரிசி! சரி; உடனே எல்லாப் பிச்சைக்காரர்களையும் உள்ளே பிடித்துப் போடுவதற்கு ஏற்பாடு செய்யும்.

[அந்தரங்கக் காரியதரிசி அப்பால் செல்கிறார். முதல் மந்திரி ஆனந்தக் குறட்டை விடுகிறார்.]

காட்சி 3

காலம் : பிச்சைக்காரர்களுக்கு நல்ல காலம்.

சென்னை ராஜ்யம் முழுதும் பிச்சைக்காரர்கள் வேட்டை நடக்கிறது. கோயில், குளம், பஸ் ஸ்டாண்டு, ரயிலடி முதலிய இடங்களிலிருந்து பிச்சைக்காரர்கள் பத்திரமாகப் போலீஸ் லாரிகளில் ஏற்றப்பட்டுச் சர்க்கார் விருந்தாளியாக்கப்படுகின்றனர். போலீஸ் லாரி வேகமாகச் செல்கிறது. லாரிக்குள் இருக்கும் அத்தனை பிச்சைக்காரர்களும் பின்வருமாறு கோஷ்டி சங்கீதமாகப் பாடுகின்றனர் :

ரகுபதி ராகவ ராஜாராம் — அவர்
தட்சிணப் பிரதேசம் கேட்டாராம்
முதல் மந்திரியார் காமராஜாராம் — அவர்
மூர்ச்சை போட்டு விழுந்தாராம்
ராமநாதபுரம் ராஜாவாம் — அவர்
காமராஜ் சபையில் மந்திரியாம்
தட்சிணப்பிரதேசம் கேட்டாராம்—பின்னால்
அதையே சொல்லப் பயந்தாராம்!

[போலீஸ் லாரி மறைகிறது. கோரஸ் குரலும் குறைகிறது.]

காட்சி 4

இடம் : தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம்.

காலம் : பொதுத்தேர்தல் காலம்.

பிரசாரகர் :- சபையோர்களே! அரசியலில் இது ஒரு நெருக்கடியான நேரம். நமது நாட்டின் எதிர்காலம் உங்களிடம் தான் இருக்கிறது. இந்தப் பொதுத் தேர்தலில், குறிப்பாக இந்தத் தொகுதியில், நீங்கள் உங்கள் வோட்டைக் காங்கிரஸுக்கே அளிக்க வேண்டும். காங்கிரஸின் சார்பில் இத் தொகுதியில் நமது முதல் மந்திரியே அபேட்சகராக நிற்பது நீங்கள் அனைவரும் அறிந்த விஷயம்.

சபையினரில் ஒருவர் :- ஆமாம்; அறிந்ததுதான். நமது முதல் மந்திரி இத்தனை வருஷ காலம் பதவியிலிருந்தாரே! மக்களுக்கு என்னத்தைச் சாதித்து விட்டார்?

பிரசாரகர் :- என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நமது தேசத்தில் வேறு எந்த ராஜ்யத்திலும் செய்யாத ஒரு மாபெரும் காரியத்தை நமது முதல் மந்திரி செய்து முடித்திருக்கிறாரே!

ஒருவர் : என்ன அது?

பிரசாரகர் : என்னவா? இதற்குள்ளாகவா அதை மறந்து விட்டீர்கள்? நமது ராஜ்யத்தில் பிச்சைக்காரர்களே இல்லாமல் செய்து விடவில்லையா?

சபையினர் (கரகோஷம்) :— ஆமாம், ஆமாம்! நமது முதல் மந்திரிக்கு ஜே! எங்கள் வோட்டு இந்தத் தடவையும் முதல் மந்திரிக்கேதான். வாழ்க முதல் மந்திரி! வாழ்க அவர் ஆட்சி!

[மீண்டும் முதல் மந்திரியே தேர்ந்தெடுக்கப்பட்டு மீண்டும் அவரே முதல் மந்திரி ஆகிறார். சிறையிலிருந்த பிச்சைக்காரர்கள் விடுதலையாகி மீண்டும் நமது சென்னை ராஜ்யம் பழைய களையுடன் காட்சி தருகிறது.]

"ரகுபதி ராகவ ராஜாராம்
மந்திரி காமராஜ் ஜெயித்தாராம்!"

[திரை]



பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1943)

தலைமை ஆபீஸ் : மதுரை

கிளைகள் :

புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர்

நீங்கள் எங்கள் பாங்கில் "சேவிங்ஸ் கணக்கு" திறப்பதினால் உண்டாகும் நான்கு பெரும் நன்மைகள்.

1. ரூ. 5/- முதல் மேற்படி கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
2. தினசரி இருப்புக்கு 3% வட்டி கிடைக்கிறது.
3. பாங்க் வழங்கும் "செக்குகள்" மூலம் பணம் திரும்பப் பெறலாம்.
4. முன் அறிவிப்பு எதுவுமின்றி வாரம் ஒன்றுக்கு அதிக பக்ஷம் ரூ. 1000/– கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

சுறுசுறுப்பும் மரியாதையும் நிறைந்த சேவை

பி. எஸ். விஸ்வநாதன்
காரியதரிசி

சிஸர்ஸ்

சிகரெட்டுகள்





குடும்ப விளக்கு

காந்தன்

புதிது புதிதாகச் சினிமாப் படங்கள் வெளி வந்து கொண்டேயிருக்கின்றன. இவைகளில் எந்தப் படத்தைப் பார்ப்பது என்று முடிவு செய்வதற்கு ஒரு சுலபமான வழி இருக்கிறது. ஒரு படத்தில் நடித்திருக்கும் நடிகர்களைக் கொண்டே அந்தப் படத்தைப் பார்ப்பதா வேண்டாமா என்பதைத் தீர்மானித்து விட லாம். திரைக்கதை எப்படியிருந்தாலும், சில நடிகர்கள் தங்கள் திறமையான நடிப்பினால் படத்துக்கு உயிர் கொடுத்து விடுகிறார்கள்.

அத்தகைய திறமை வாய்ந்த நடிகர்களுக்குள், நம் தமிழ்ப்பட உலகில் தங்கவேலுவுக்கு என்றும் தனியிடம் உண்டு.

தங்கவேலு நடிக்கும் தமிழ்ப் படத்துக்குப் போனால், நல்ல ஹாஸ்ய நடிப்பைக் கண்டும், ஹாஸ்யப் பேச்சைக் கேட்டும் வயிறாரச் சிரித்து விட்டு வரலாம். படத்தின் மற்ற அம்சங்கள் எப்படியிருந்தாலும் பாதகமில்லை.

சில நடிகர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்பார்கள். ஆனால் தங்கவேலுவைப் பொறுத்தவரையில், நிகழ்காலப் புகழே வருங் காலத்தையும் சேர்த்துக் கொண்டு விட்டது.



நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸ் தயாரித்துவெளியிட்டிருக்கும் "குடும்ப விளக்கு" படத்துக்குப் போகும் போது அந்தப் படத்தில் தங்கவேலு நடிக்கிறார் என்னும் தைரியத்தில்தான் போனேன். நல்ல வேளையாக அவர் கை விட்டு விடவில்லை. தம் சிறந்த ஹாஸ்ய நடிப்பினால் குடும்ப விளக்கை விளங்க வைத்திருக்கிறார்.

நம் பாரத தேசத்தில் ஜமீன்தார்களுக்கும் மகாராஜாக்களுக்கும் இடமில்லையென்றாலும், திரைப்பட உலகம் அவர்களை அரவணைத்து, தடுத்தாட்கொள்ளத் தயாராயிருக்கிறது.

குடும்ப விளக்கு ஜமீன்தாரின் வாழ்வைப் பற்றிய கதைதான். வழக்கமான நிகழ்ச்சிகளின் துணையைக் கொண்டுதான் திரைக்கதை தயாரிக்கப் பட்டிருக்கிறது. கதையில் விசேஷமாக எதுவும் இல்லையென்றாலும் விபரீதமாக எதுவும் இல்லாமலிருப்பதே நல்ல அம்சந்தான்.

ஒரு ஜமீன்தார். (சரிதான், கதையை நீங்களே ஊகித்து விடுவீர்கள்!) அவருக்கும் சாதாரணமாக எல்லா ஜமீன்தார்களையும் போலவே குழந்தையில்லை. எல்லா ஜமீன்தார்களையும் போலவே அவரும் மறுமணம் செய்து கொள்கிறார்; எல்லா இளைய மனைவிமார்களையும் போலவே புஷ்பாவும் சூழ்நிலைக் கோளாறினால் கொடியவளாக மாறி மூத்தாள் ராதாவைக் கொடுமைப்படுத்துகிறாள். ராதாவுக்குப் பிறந்த குழந்தையை அப்புறப் படுத்தி விட்டு அது இறந்துவிட்டதாக ராதாவிடம் சொல்லி விடுகிறாள்.

புஷ்பாவின் சதியால் குப்பைத் தொட்டியில் எறியப்பட்ட குழந்தை சாகவில்லை. (எப்படிச் சாக





முடியும்! அதுதான் கதாநாயகனாயிற்றே!) தோட்டி வேலை செய்யும் என். எஸ். கிருஷ்ண னிடம் அதிர்ஷ்டவசமாகச் சிக்குகிறது.

என். எஸ். கிருஷ்ணனும் டி. ஏ. மதுரமும் ஜமீன்தாரின் வாழ்க்கையை ஒட்டி வாழ்ந்து, சரிந்து போன அவரது வாழ்வுக்கு மறுமலர்ச்சி அளிக்கப் பெருதவியாயிருக்கிறார்கள். இலேசான ஹாஸ்யங்களை இயல்பான முறையில் அள்ளி வீசிப் படத்தைப் பரிமளிக்கச் செய்வது மல்லாமல், ஜமீன்தார் மனத்தில் ராதாவின் மேல் படிந்திருந்த களங்கத்தைப் போக்கி விடுகிறார்கள்.

திரைக் கதையில் எந்த உருவத்திலாவது சந்தேகம் உருவாகவில்லையென்றால், (சந்தேகத்துக்கு இடம் இல்லாமல்) அது தமிழ்ப் படமே இல்லையென்று கூறி விடலாம்!

ஜமீன்தார் பங்களாவின் பின்புறத்தில் தோட்டி வீட்டில் வளர்ந்து வரும் குழந்தை



யிடம் தன்னை மீறிய பாசம் வளருவதைக் கண்டு, ஜமீன்தார் மனைவி ராதா வியப்புறுகிறாள். அடிக்கடி குழந்தை மருதனுடன் கொஞ்சுகிறாள். ஜமீன்தார் ராதாவின் மேல் சந்தேகங் கொண்டு அவள் கழுத்தை நெரிக்கிறார். அவள் இறந்து விட்டதாகக் கருதிப் புஷ்பா அவளை இரகசியமாக அடக்கம் செய்ய ஏற்பாடு செய்கிறாள். ஆனால், மயக்கம் தெளிந்த ராதா தப்பியோடி விடுகிறாள்.

ராதாவாக நடிக்கும் எம். வி. ராஜம்மா பழைய நடிகை. "கண்ணின் மணிகள்" என்னும் படத்தில் வரும் சந்தேகப் பேயையே சமாளித்து விட்ட அவருக்கு, மற்றொரு சந்தேகப் பேயைச் சமாளிப்பதில் சிரமம் இருக்க நியாயமில்லை யல்லவா!

ஜமீன்தாருடன் இருந்த போதும், அவரை விட்டுப் பிரிந்து, கல் உடைத்து, மண் சுமந்து, கூலி வேலை செய்து, அநாதைப் பெண் கண்ணம்மாவை வளர்த்துக் கடைசியில் கட்டிய கணவனையும் பெற்ற மகனையும் சந்தித்துச் சந்தோஷம் அடையும்வரையில் ராஜம்மாவின் நடிப்பு நன்றாகவே இருக்கிறது. ஆனால், இத்தனை உருக்கமான கட்டங்கள் அடுக்கடுக்காக வந்தும் கூடப் படம் பார்ப்பவர்கள் உள்ளங்களை உணர்ச்சி வசப்படுத்த முடியாமற் போவது துரதிர்ஷ்டம்தான். ஏற்கனவே பல முறை பார்த்த காட்சிகளை மீண்டும் மீண்டும் பார்த்து ரஸிகர்கள் கண்ணீர் விட வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியில்லை தானே!

வட்டிக் கடை வஜ்ரவேலுவாக வருபவர் தங்கவேலு வாதலால், வட்டியும் முதலுமாக ஹாஸ்யங்களை வழங்கி யிருக்கிறார். பரம லோபியான வஜ்ரவேலு பணத்தாசை பிடித்து, வீட்டில் புதையல் இருப்பதாகக் கனவு கண்டு, கடப்பாரை இடித்ததில், பிள்ளையார், பூஜைக்குரிய மணி, பொங்கல் பிரசாதம், பாக்கு வெற்றிலை யாவும் கிடைத்துக் கடைசியில் ஒரு ஆளும் கிடைக்கிறார்! அவ்வளவும் புதையல் அல்ல. அடுத்த வீட்டுப் பூஜை சாமான்கள் என்பது அப்புறம்தான் புலனாகிறது. அதன் காரணமாக அடுத்த வீட்டாரின் பகையும் ஏற்படுகிறது! அந்தக் கட்டங்களில் தங்கவேலுவின் வேஷப் பொருத்தம் முகபாவம் யாவும் பொருத்தமா யிருக்கின்றன. ராதாவின் வளர்ப்புப் பெண் கண்ணம்மாவாக நடிக்கும் ஜமுனா முகவெட்டும் அகன்ற விழிகளும் கொஞ்சமொழிகளும் படத்தின் காதல் கட்டத்தை இட்டு நிரப்புகின்றன.

"கன்னிப் பொண்ணு நானுங்க என்னைக் கொஞ்சம் பாருங்க" என்று பாடி ஆடும் ராஜ சுலோசனாவின் நடனம் அவசியமில்லை. இம்மாதிரி நடனங்களால் நம் தமிழ்ப் படத்தைப் பார்க்கும் வேறு மொழிக்காரர்கள், நம் நடனக் கலையையே இழிவாக நினைப்பார்கள்.

"குடும்ப விளக்கு" நம் குடும்பத்தவர்கள் விரும்பிப் பார்க்கக் கூடிய படம்.

தெய்வ குற்றம்

அநுத்தமா

சில நாட்களுக்கு முன் எனக்கு அடிக்கடி வயிற்றுவலி வந்து உபத்திரவம் செய்தது. சில சமயம் பொறுக்க முடியாது. நானும் பலவித வைத்தியம் செய்து ெ··ண்டேன். ஒன்றும் வலியை அறவே போக்கவில்லை. சலிப்படைந்திருந்த சமயம் என் மனைவி சந்திராதான் எனக்கு ஞாபகம் மூட்டினாள். எங்கள் குல தெய்வம் வைத்தீசுவரப் பெருமான் ஆகையால் அன்று முதல் செவ்வாய்க் கிழமை விரதமிருந்து வந்தேன். பிறகு குடும்பத்தோடு வந்து தரிசிப்பதாக வேண்டிக் கொண்டேன். நாளடைவில் எனக்கு அந்த வயிற்றுவலியே இல்லாமற் போய் விட்டது.

ஒரு நாள் நான் பிரார்த்தனை செலுத்தக் குடும்பத்தோடு யாத்திரை கிளம்பினேன்.

வைத்தீசுவரன் கோவில் வாசற்படியின் உள்ள ஒரு கடையில் தேங்காய், பழம் வாங்கிக் கொண்டோம். கடைக்காரச் செட்டியார் என்னைப் பார்த்து, "சாமி, அம்மன், முருகர் மூன்று பேருக்குத்தானே?" என்று கேட்டார். அப்படிக் கேட்பது கடைக்காரர்களின் இயல்பு. நான் என் மனைவியின் முகத்தைப் பார்த்தேன்.

"இன்று செவ்வாய்க் கிழமையோ? வைத்தீசுவர சுவாமிக்கும், அம்பாளுக்கும், உகந்த தினம், முருகனுக்கும் ஒரு அர்ச்சனை செய்வோமா?" என்று கேட்டேன்.

"சுவாமிக்குத் தானே வேண்டுதல்? அம்பாளைப் பிரிக்க வேண்டாம். முருகனுக்கு வாங்கவேண்டும் என்பதில்லை" என்று நாங்கள் இருவரும் தீர்மானித்தோம்.

நாங்கள் உள்ளே சென்று கோவில் தடாகம் 'சிவகங்கை'யில் குளித்தோம். படித்துறை மிகவும் பாசி படிந்திருந்தது. நான் கடைக்குட்டிப் பயலைக் கையில் பிடித்துக் கொண்டு மெல்ல இறங்கினேன். என் மூத்த பெண் லதா இரண்டாவது தம்பியைத் தன் பாதுகாப்பில் வைத்துக் கொண்டாள். இவர்களையே கவனித்துக் கொண்டிருந்தேன் நான். என் மனைவி மூத்தவன் வெங்கிட்டுவைத் தன் பிடியில் வைத்துக் கொண்டிருந்தாள். 'ஐயோ!' என்று அவள் அலறுக்குற்றாள். அதைக் கேட்டு நான் திரும்பிப் பார்த்தேன். வெங்கிட்டு பாசியில் வழுக்கி விழுந்து விட்டான். நாங்கள் மெதுவாகப் பிடித்து அவனை எழுப்பி விட்டோம். அவன் ஆடையில் பாசி படிந்து விட்டது. பிறகு மிகவும் ஜாக்கிரதையாகக் குளித்து விட்டு மேலே வந்தோம்.

நாங்கள் கோவிலை வலம் செய்து கொண்டிருந்த சமயம் நடுப்பையன் குமார் பிராகாரத்தில் இருக்கும் கோவில் யானையைப் பார்த்து விட்டான்.

"அப்பா, யானை அப்பா!" என்றான் அவன்.

"அப்புறம் பார்க்கலாம் வா" என்று அழைத்தாள் என் மனைவி.

"இல்லையம்மா யானை பார்க்கப் போகிறேன். எவ்வளவு பெரிய காது!" என்று ஆச்சரியப்பட்டான் அவன்.

"பஸ்ஸுக்கு நேரமாகிவிடும். வா" என்று கடிந்தாள் என் மனைவி.


"நான் சாமி பார்க்க வரவில்லை. யானையைத் தான் பார்ப்பேன்" என்று அவன் அடம் பிடித்தான்.



"கூடாது. பெரியவர்கள் சொன்னால் கேட்க வேண்டும். மரியாதையாக என்னுடன் வா" என்றாள் என் மனைவி.

"கோவிலில் வந்து குழந்தையின் மனசைக் கசக்காதே" என்று நான் என் மனைவியிடம் கூறிவிட்டு, அவனை அங்கேயே யானையைப் பார்த்துக் கொண்டிருக்கச் சொல்லிவிட்டு நாங்கள் கோயிலுக்குள் போனோம். மிகவும் அற்புதமாகத் தரிசனம் கிடைத்தது. என் மனைவிமட்டும், குமாரைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள் போலும்! அவள் முகத்தில் அற்புத தரிசனம் கண்ட நிறைவு இருக்கவில்லை. கவலைதான் படர்ந்திருந்தது. அவள் வேதனையை அறிந்து, எல்லோருக்கும் முன்பாகச் சென்று யானை இருந்த இடத்தை நோக்கினேன். அங்கு குமார் இருக்கவில்லை. எங்களைத்

தேடிக் கொண்டு கோவிலுக்குப் போயிருப்பான் என்ற நிச்சயத்தில் நான் மீண்டும் என் குடும்பத்துடன் கலந்து கொண்டேன். பெண் லதாவும் அவள் தாயாரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். நான் சிறிதும் பொறுப்புணர்ச்சியின்றி யிருப்பதாக அவர்கள் எண்ணம். நான் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டேன். அர்ச்சகர் எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். எங்களை அனுப்பி விட்டால் அவர் வேறு யாத்திரிக கோஷ்டியுடன் சென்று இன்னும் நாலு காசு சம்பாதிப்பார். நம்மால் இடைஞ்சல் கூடாது என்று எண்ணினேன் நான்.



“உம், வாருங்கள். அவன் வருவான். புது ஊரில் எங்கே போய்விடப் போகிறான்?” என்று துரிதப்படுத்தினேன் நான்.

நாங்கள் முத்துக்குமாரஸ்வாமி சந்நிதியைத் தரிசிக்கச் சென்றோம். சிங்கார வடிவேலனின் தோற்றம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. என் மனைவி மட்டும் கடவுளையே பார்க்கவில்லை. அவள் பார்வை பக்த ஜனங்களின் நடுவே சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

பிரசாதம் வாங்கிய ஒவ்வொரு சிறு கையையும் தொடர்ந்து சென்ற அவள் பார்வை ஏமாற்றத்துடன் திரும்பியது. எனக்கு ஒரே நோக்கம், அர்ச்சகரைச் சீக்கிரமே விடுவித்து விட வேண்டும் என்று. ஆனால் அவளுக்கு ஒரே நோக்கம் குழந்தையைக் காண வேண்டும் என்று.

நாங்கள் வெளி மண்டபத்துக்கு வந்தோம். அர்ச்சகர் எங்களை ஓரிடத்தில் அமர்த்தி சம்பிரதாயமாகப் பிரசாதம் அளித்தார். அருகில் என் மனைவி இருந்தாள். அவள் மனம் எங்கோ மகனிடம் இருந்தது.

“அப்பா தான் பேசாமல் இருக்கிறார். நீயும் தேடாமல் இருக்கிறாயே? குழந்தை எங்கே போய் விட்டானோ?” என்று நெஞ்சடைக்கக் கேட்டாள் லதா.

“நீதான் போய்ப் பார்” என்று தன் பெண்ணை அனுப்பினாள் தாய். லதா ஓடினாள். எங்காவது ‘அம்மா’ என்ற குரல் கேட்டால் பித்துப் பிடித்தவள் போல அங்கு ஓடினாள் என் மனைவி சந்திரா.

எனக்கும் ஒரே குழப்பமாக இருந்தது. வேண்டாம் என்று தடுத்தவளையும் மறுத்துக் குழந்தையை எங்கோ தவறவிட்டு விட்டேனே என்று என் மனம் உதைத்துக் கொண்டது. நானும் வெங்கிட்டுவையும், சங்கரனையும் கையில் பிடித்துக் கொண்டு கூட்டம் இருந்த இடத்திலெல்லாம் தேடினேன். “குமார்! குமார்!” என்று உரக்கக் கூவும் சந்திராவின் குரல் என் செவிகளில் விழுந்து கொண்டே இருந்தது. நானும் வெங்கிட்டுவைக் கத்திப் பார்க்கச் சொன்னேன்.

“கும்பலில் குழந்தைகளைக் கையில் பிடித்துக் கொண்டு வர வேண்டும்” என்று ஒரு பாட்டி எனக்குப் புத்திமதி கூறினாள். நான் அவளுக்குச் சுடச் சுடப் பதில் சொல்லி இருப்பேன். ஆனால் நிற்க நேரமில்லை. பேசவும் தெம்பு இருக்கவில்லை. சுற்றிச் சுற்றி வந்தேன். சந்திரா எங்கு சென்றாளோ? லதா எங்கு சென்றதோ? அதன் கழுத்தில் வேறு ஐந்து பவுன் சங்கிலி போட்டிருந்தாள் சந்திரா. கோவில் கூட்டத்தில் வரும்போது நகையில்லாவிட்டால் என்ன? இந்தப் பெண் பிள்ளைகளே இப்படித்தான். “குமார்” என்ற குரலை விட்டு “லதா!” என்று கூவி அழைத்தேன் நான். கோவிலில் வந்தவர்கள் தன் போக்கில் போகிறார்களா? “பாவம்! மனிதன் குடும்பத்தை எங்கேயோ விட்டு விட்டு அலைகிறார்!” என்று ஒருவர் அனுதாபப் பட்டார். எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. சந்திரா குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு ஓரிடத்தில் இருக்கக் கூடாதா? நான் ஒரு ஆண்பிள்ளை இருக்கிறேனே? போய்த் தேடிக்கொண்டு வரமாட்டேனா?

பிள்ளைகள் இருவரையும் அழைத்துக் கொண்டு வெளி மண்டபத்துக்கு வந்து கொடி மரத்தருகில் குழந்தைகளை இருக்கச் செய்தேன். அதற்குள் லதா எங்கிருந்தோ அழுத முகத்துடன் ஓடி வந்து, “அப்பா! யாரோ ஏழு வயதுப் பையன் குளத்தில் விழுந்து விட்டானாம். எடுத்துக் கரையில் போட்டிருக்கிறார்களாம். அம்மா அங்கே ஓடியிருக்கிறாள்” என்றாள் லதா.

என் உடலெல்லாம் ஒரு முறை குப்பென்று வியர்த்து விட்டது. என்ன சோதனையோ

என்று எண்ணியது என் மனம். பிள்ளையார் தான் யானைபோல வந்து என்னைச் சோதிக்கிறாரோ? நான் பிரார்த்தித்தேன். "லதா, நீங்கள் மூன்று பேரும் என்ன ஆனாலும் இங்கிருந்து கிளம்பக் கூடாது" என்று எச்சரித்துவிட்டு நான் குளக்கரைக்குச் சென்றேன்.

அங்கே ஒரே நெருக்கடி. சந்திரா முன் வரிசையில் நின்று கொண்டிருந்தாள். தண்ணீரில் விழுந்து விட்ட குழந்தை ஆணா, பெண்ணா? அவன் நம் குமாரா, இல்லையா? உயிர் இருக்கிறதா, இல்லையா? ஒன்றும் அறிய முடியாத கூட்டம். யாரோ கூட்டத்தின் மத்தியில் தலைக்கு மேல் தூக்கிச் சுழற்றினார்களாம்.

யாரோ "பிழைத்து விட்டான், பயமில்லை" என்று சொல்லவும் நான் எட்டிப் பார்த்தேன். அதற்குள் எப்படித் தான் சந்திரா முண்டியடித்துக் கொண்டு போய் விட்டாளோ தெரியவில்லை. கூட்டத்துக்கு மத்தியில் குனிந்து கொண்டிருந்தாள். மறு கணம் எல்லோரையும் தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள் அவள்.

"சந்திரா!" என்று அழைத்தேன் நான்.

"நம் குமார் இல்லை. நம் குமார் இல்லை" என்று மூச்சு முட்ட முட்டப் பேசினாள் அவள்.

குமார் உயிருடன் இருக்கிறான் என்ற மட்டில் எனக்குத் திகில் குறைந்தது. ஆனால் எங்கே இருக்கிறானோ?



"காசாகாசத்தில் நான் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால் இப்படி மழையில் நனைய வேண்டிய அவசியம் இருந்திருக்காதே!"

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"கல்யாணத்தில் காரியத்திரைக்கு ஒரு குடை கொடுத்திருப்பார்களே!"

"யார் குழந்தையோ, எந்தத் தாயார் தவிக்கிறாளோ?" என்றாள் அவள். ஒரு தாய் தானே மற்றொரு தாயின் பாசத்தை நன்கு அறியவல்லவள்?

நான் சந்திராவை அழைத்துக் கொண்டு குழந்தைகள் இருந்த இடத்துக்கு வந்தேன். மூன்று பேரும் இருந்த இடத்தில் இருந்தபடியே 'குமார்' 'குமார்' என்று கூப்பிட்டபடி இருந்தார்கள். நாங்கள் அவர்களைச் சேர்ந்த பிறகு என்ன செய்வது என்று புரியாமல் சிறிது நேரம் தவித்தோம். பிறகு நான் தேவஸ்தான அலுவலகத்திலும், போலீஸ் தானாவிலும் தகவல் கொடுப்பதற்காகக் கிளம்பினேன். இதற்குள் நாங்கள் தேங்காய், பழம் வாங்கிய கடைக்காரச் செட்டியார் எதிர்ப்பட்டார். எங்கள் முகத்தைப் பார்த்தார்.

"உங்கள் குழந்தையைத் தேடுகிறீர்களா?" என்று விசாரித்தார்.

"ஆமாம்!"

"அவன் என் கடையில் இருக்கிறான். யாரோ ஒரு பையன் அழுது கொண்டே எங்கள் கடை வாயிலில் நின்றான். பார்த்த முகமாக இருந்தது. அவனைக் கடையில் இருத்திவிட்டு வந்தேன்" என்றார் செட்டியார்.

"குழந்தையை அழைத்து வாருங்கள்" என்றேன் நான்.

"உங்கள் பெயர் என்ன?" என்று காரணமின்றித் திடீரென்று கேட்டாள் சந்திரா.

"முத்துக்குமாரச் செட்டியார் என்பார்கள்" என்றார் அவர்.

சந்திரா வாடைக் காற்றில் அடிபட்டது போல ஒரு முறை உடலைச் சிலிர்த்துக் கொண்டாள்.

"நீங்கள் வரும்போது முருகனுக்கும் ஒரு அர்ச்சனைக்குக் கொண்டு வாருங்கள்" என்றாள் சந்திரா.

குமார் செட்டியாருடன் வந்தான். அவனை நாங்கள் ஒன்றும் கேட்கவில்லை. உடனே முருகன் சந்நிதிக்குச் சென்று அர்ச்சனை செய்து விட்டுத் தரிசனம் பண்ணிக் கொண்டு வந்தோம். பிறகு ஈச்வரனையும், அம்பிகையையும் கண்டு வணங்கி விட்டு வந்தோம். உள்ளத்தில் நிறைவு பொங்கியது. அமைதியும், திருப்தியும் கொண்ட மனத்தோடு கோவிலை விட்டு வெளியே வந்தோம். செட்டியாரிடம் மூங்கில் தட்டைத் திருப்பிக் கொடுத்து விட்டு, அர்ச்சனைப் பணமும் கொடுக்கப் போனோம். இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தேன். அர்ச்சனைக்கு எட்டணா போக இன்னமும் ஒரு ரூபாய் எனக்குப் பாக்கி இருந்தது. செட்டியார் கல்லாப் பெட்டியில் தேடினார். எட்டணா சில்லறைதான் இருந்தது. செட்டியார் கடைப் பையனை எங்கோ அனுப்பினார்.

"இருக்கட்டும் செட்டியாரே!" என்று கூறிவிட்டு அவசரமாக பஸ்ஸுக்குப் புறப்பட்டோம்.

"சந்திரா, முதலில் முருகன் அர்ச்சனைக்கு எட்டணா செலவழிக்க பிரமாதமாக யோசித்த நாம், ஒரு ரூபாயை அநாயாசமாகக் கடைக்

காரரிடம் இருமனித்து விட்டோமே?'' என்று சொன்னேன்.

நாங்கள் பஸ்ஸில் ஏறின பிறகு குமார் என்னைப் பார்த்து, ''போ, அப்பா யானை கிட்டேயே இருடான்னு சொல்லி விட்டு, எங்கேயோ போய் விட்டீர்களே?'' என்று குற்றம் சாட்டினான்.

''போடா, போக்கிரி! எங்கேயோ ஓடி விட்டு, நாங்கள் எப்படித் திண்டாடிப் போய்விட்டோம்? வீட்டுக்கு வா நன்றாக உதைக்கிறேன்!'' என்றேன் நான்.

''எங்கேயடா போனாய்?'' என்று கேட்டாள் சந்திரா.

''நான் யானையைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். யாரோ யானைக்குத் தேங்காய் கொடுத்தார்கள். வெல்லம் கொடுத்தார்கள். வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தேன். நான் திரும்பிப் பார்த்த போது, அங்கே யாருமே இருக்கவில்லை. எனக்குப் பயமாகி விட்டது. 'அம்மா!' 'அப்பா!' என்று உரக்கக் கத்திக் கத்திக் கூப்பிட்டேன். நீங்கள்தான் பதிலே சொல்ல வில்லையே? கோயிலில் தேடினேன். கோவிலைச் சுற்றித் தேடினேன். என்னை விட்டு விட்டு ஊருக்குப் போய்விட்டீர்களோ, என்று நினைத்தபோது, அழுகை அழுகையாக வந்தது. கடையெல்லாம் தாண்டி ரோட்டிலே போனேன். பயமாக இருந்தது. மறுபடியும் கோவில் பக்கம் ஓடினேன். 'அம்மா!' 'அப்பா!' என்று கத்திக் கொண்டே இருந்தேன். எனக்கு யாரைப் பார்த்தாலும் அப்பாவைப் போலவும், அம்மாவைப் போலவும் இருந்தது. ஆசையோடு போய் அவர்கள் கையைப் பிடித்தேன். அவர்கள் வேறு யாரோவாக இருந்தார்கள். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். உடனே எனக்கு அழுகை அழுகையாக வந்தது. மீண்டும் 'அப்பா!' 'அம்மா!' என்று கத்திக் கொண்டே இருந்தேன். நான் கத்திக் கொண்டு இருந்ததைப் பார்த்தவுடன் கடைக்காரர் என்னை அவர் கடையிலே உட்கார்த்தி வைத்துவிட்டு, உங்களைத் தேடி அழைத்து வருவதாக வந்தார்'' என்று கூறி முடித்தான் அவன்.

''ஏண்டா, தடியா? என்னோடு கூடவராமல் இருந்தாயே பார்த்தாயா? நாங்கள் உன்னை விட்டு விட்டு ஊருக்குப் போயிருந்தால் என்ன செய்வாய்?'' என்று அதட்டினாள் சந்திரா. பிறகு என்னைப் பார்த்து, ''அப்பொழுது கோவிலில் எனக்கு என்ன தோன்றியது தெரியுமா?'' என்று கேட்டாள்.

''என்ன?''

''நாம் முருகனுக்கு அர்ச்சனையைக் குறைத்துக் கொண்டு விட்டோமா? குழந்தை காணாமல் போனதும், அம்பாள் வந்து, 'என் குமாரனுக்குப் பூஜை வேண்டாம் என்று மிச்சம் பிடித்தாயே, உன் குமாரன் மட்டும் உயர்த்தியா?' என்று கேட்பதுபோல இருந்தது'' என்று கூறினாள்.

''அதனால்தான் செட்டியாரிடம் மீண்டும் அர்ச்சனைக்குச் சொன்னாயா?''

''ஆமாம். வேண்டுமென்றே அம்பாளும், பிள்ளையாரும் நம் குமாரை மறைத்துவைத்து வேடிக்கை பார்க்க, முத்துக் குமாரர் மனம் கேளாமல் கொண்டு விட்டார். செட்டியார் பேரும் வேலவன் பேராக இருக்க வேண்டுமா?''

''அதற்காகச் செட்டியாருக்கு ஒரு ரூபாய் இனும்! பெரிய மனிதர்கள் வர்க்கத்தில் சேர்த்து விட்டாய்!'' என்றேன் நான்.

அவன் மீண்டும் '' 'என் முத்துக் குமாரன் உனக்குக் குறைவாகி விட்டானா? உன் குமாரன் உனக்கு எப்படி இருக்கிறான்?' என்று அம்பாள் நேரே கேட்பது போல இருந்தது'' என்றாள்.



வீவர் பிரதர்ஸ் ஸ்தாபனத்தின் சென்னைக் கிளை மானேஜர் பதவியைச் சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாகத் திறம்பட வகித்துவந்த ஸ்ரீ ஆர். மாதவாச்சாரியார் உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவருடைய நீண்ட நாளைய சேவையைப் பாராட்டி வீவர் பிரதர்ஸ் ஸ்தாபனத்தின் சிப்பந்திகளும், அதன் துணைக் கம்பெனிகளின் நிர்வாகிகளும் சேர்ந்து ஸ்ரீ மாதவாச்சாரியாருக்கு ஜூன் 27உ உட்லண்ட்ஸ் பூங்காவில் ஒரு விருந்துபசாரம் நடத்தி அவருடைய சேவையைப் பாராட்டினார்கள். வீன்டாஸ் ஸ்தாபனத்தின் சென்னைப் பிரதிநிதி ஸ்ரீ எஸ். வி. வேணுகோபால் விருந்தினர்களை வரவேற்றார். தமக்களித்த பாராட்டுதலுக்கு ஸ்ரீ மாதவாச்சாரியார் நன்றி கூறுவதைப் படத்தில் காணலாம். அவருக்கு அருகில் அமர்ந்திருப்பவர்தான் வீவர் பிரதர்ஸ்''ம், அதைச் சேர்ந்த துணைக் கம்பெனிகளின் சேர்மனுமான ஸ்ரீ நாக்கின்ஸ் அப்ரஹாம்.

தேவியின் கடிதம்

பாத்திரங்களில் மோகம்

வசுமதி ராமசாமி

அன்புள்ள சுஜாதா,

பெண்கள் பாத்திரங்கள் நிறைய வாங்கி வைத்துக் கொள்ளுவது நல்லதா என்று கேட்டிருக்கிறாய்? கல்யாணமென்றால் உடனே வெள்ளிப்பாத்திரம், பித்தளைப் பாத்திரம், எவர்ஸில்வர் பாத்திரம் என்றுதான் பேசுகிறோம். குடித்தனத்துக்குப் பாத்திரங்கள் ஓரளவு தேவைதான். ஆனால் ஆசை எல்லை மீறக் கூடாது.

வனஜாவின் குடும்பம் என்றும் அமைதியாகத்தான் இருக்கும். நான் ஒரு நாள் அவர்கள் வீட்டுக்குப் போன சமயம் அவர்கள் சினிமாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். வனஜாவின் கணவர், "என் புதுக் கோட்டு எங்கே?" என்று அலைந்து கொண்டிருந்தார். அவள் சின்னப் பெண் வல்லி சமையல் அறையிலிருந்து ஒரு எவர்ஸில்வர் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு ஓடிவந்து, "அப்பா! உங்கள் புதுக் கோட்டைப் பாத்திரக்காரனுக்குப் போட்டுவிட்டு அம்மா இந்தக் கிண்ணத்தை வாங்கினாங்க" என்று உற்சாகமாகக் கத்தினாள். கோபமே வராத வனஜாவின் கணவர் ருத்திரமூர்த்தி ஆகிவிட்டார். சென்ற மாதம்தான் அந்தக் கோட்டை முப்பது ரூபாய் கொடுத்துத் தைத்ததாகக் கத்தினார்.



ஒரு குடும்பத்தில் இரண்டு மருமக்கள் இருந்தார்கள். வீட்டில் உள்ள பாத்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். கடைசியில் ஒரு வெண்கலப் பானை மிகுந்தது. அதை விடுவதற்கு இருவருக்குமே மனம் வரவில்லை. கடைசியில் அந்த வெண்கலப் பானையை உடைத்து ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொண்டார்கள். இது கதையில்லை. உண்மையாகவே நடந்ததுதான். பெண்களின் பாத்திர ஆசை அந்த அளவுக்குப் போய் விடுகிறதென்று தெரிகிறதல்லவா?

ஒரு சமயம் என் தூரத்து உறவினர் இருக்கும் ஊருக்குப் போயிருந்தோம். மலை அடிவாரத்தில் அந்த ஊர் இருந்தது. என் உறவினர் வீட்டில் ஒரு பெரிய அம்மாள் இருந்தார். அவர்களுக்குக் கண்ணாடி ஜாடி என்றால் உயிர். விதம் விதமாக வாங்கி அடுக்கி வைத்திருந்தார். இரவு எல்லோரும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கும் சமயம் 'அன்று இரவு பூகம்பத்தின் சின்னம் அந்தப் பிரதேசத்தில் இருக்கக் கூடும்' என்று ரேடியோ அறிவித்தது. இதைக் கேட்டதுதான் தாமதம், பெரிய அம்மாள் பதறி எழுந்து ஓடினார்.

அன்று மாலை கடையில் வாங்கிய அழகிய ஜாடியைத் தன் பக்கத்தில் அணைத்துக் கொண்டு படுத்துக் கொண்டார். பூகம்பச் சின்னம் ஒன்றுமில்லை. மறு நாள் அந்தப் பெரியம்மாளின் போக்கைப் பற்றிப் பேசிச் சிரித்து வீட்டை அதிரச் செய்து கொண்டிருந்தோம்.

என்னுடைய தோழி ஒருத்திக்கு நான்கு குழந்தைகள். நிறைய டம்ளர்களும், கிண்ணங்களும், வாங்கி விதம் விதமாக அடுக்கி இருப்பாள். ஆனால் அதை எடுத்து உபயோகப்படுத்த அவளுக்கு மனம் வராது. தோழியின் கணவர் எதையாவது தொட்டு விட்டால் தாவி ஓடிப் பிடுங்கி வைத்து விடுவாள். குழந்தைகளுக்குக் கூட அந்தப் பாத்திரங்களில் காப்பியோ தண்ணீரோ கொடுக்க மாட்டாள். டம்ளர்கள் அழுக்காய்ப் போய்விடுமென்பது அவள் எண்ணம். அதற்காக ஒரே டம்ளரில் ஒவ்வொருவராகக் காப்பியோ, தண்ணீரோ சாப்பிட வேண்டும். இவைகளினால் வேலை வளர்ந்து வேறு ஒன்றுக்கும் அவகாசம் இருப்பதில்லை. சாமான்களை அழகாக வைத்திருப்பது கவர்ச்சிகரமாக இருந்தாலும் அதை உபயோகப் படுத்தாமல் இருப்பதில் யாருக்குப் பிரயோசனம்? ஆகையால் பாத்திரங்களில் வீண் மோகமில்லாமல் இருக்க வேண்டும்.

—பூமாதேவி

இப்போது இந்தியாவில் உங்களுக்கு கிடைக்கிறது!



பாமாலிவ்
டால்கம் டீ-லக்ஸ்

நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த டால்கம் பவுடர்! உண்மையிலேயே நேர்த்தியான டால்கின்சகலகுணங்களுடன், ஒரு புதியரம்மிய வாசனையும்சேர்ந்தது! வெறியூட்டும் 17 ஸெண்டுகளின் அற்புதக்கலவைசேர்ந்த பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸின் நறுமணம் உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம் அடையச் செய்யும் ... மணிக் கணக்காக உங்களுக்குக் குளுமை யும் புத்துணர்ச்சியும் அளிக்கும்!



அள்ளையில் சுத்தமும் சௌகர்யமும்



குழந்தைக்கு இதம் அளிக்க அதைத் தாராளமாகப் பூசுங்கள்



எரிச்சலைத்தடுக்க மேலெங்கும் அதை உபயோகியுங்கள்



சோர்ந்த பாதங்களுக்கு இதமும் புத்துணர்ச் சியும் அளிக்க



பாமாலிவ்
டால்கம் டீ—லக்ஸ்


அபலை அஞ்சுகம்
சீ.ரா.கோபாலன்



அபலை அஞ்சுகம்

1. சரளாவின் உபதேசம்

சரளாதேவி எட்டு வருட காலமாகச் சந்திரகிரி பெண்கள் சிறையின் நிர்வாகியாக இருக்கிறாள். இந்த எட்டு வருட காலத்தில் அவள் பெற்ற அனுபவம் மகத்தானது. அவள் மிகவும் கடுமையானவள். அதே சமயத்தில் மிகவும் இளகிய உள்ளம் படைத்தவள். அவள் கைதிகளிடம் மிகவும் கண்டிப்பாகவும் கடுமையாகவும் நடந்து கொள்ளும் போது அவளுக்கு இருதயம் இருக்கிறதா, என்றுகூட நினைக்கத் தோன்றும். ஆனால் அவளுக்கு இருதயம் இருக்கிறது என்பதையும், அது எப்படிப்பட்டது என்பதையும், விதியின் காரணமாகச் சிறைவாசம் அனுபவிக்கும் சில பெண்கள் தெரிந்து கொண்டிருந்தனர். அவளும் ஒரு பெண்தானே? அந்தச் சிறை ஒரு சிறிய உலகம்போல் இருந்தது.

அந்தச் சிறையில்தான் எத்தனை வகையான பெண் கைதிகள்? மிகவும் வயதான கிழவிகள் பலர்; நடுத்தர வயதினர் பலர்; இளம் பெண்கள் பலர்; கல்யாணம் ஆனவர்கள்; கல்யாணம் ஆகாதவர்கள்—இப்படிப் பல ரகம். பலவிதமான குற்றங்கள் புரிந்து சிறைக்கு வந்திருக்கும் அந்த மாதர்களைப் பார்க்கும்போதும் நினைக்கும்போதும் பெண்களுக்காக ஒரு சிறை ஏற்பட்டிருப்பதும் அதற்கு நிர்வாகியாகத் தான் இருந்து வயிற்றுப் பிழைப்பை நடத்துவதுமே சரளாவுக்குப் பெரும் அவமானமாக இருக்கும். உலகத்தில் பெண்களும் துணிந்து கொலை செய்கிறார்கள்; திருடுகிறார்கள்; பிறரை வஞ்சிக்கிறார்கள்; நெறி தவறி நடக்கிறார்கள்; அவமானம்—இவற்றையெல்லாம் நினைக்கும் போது வெட்கத்தினால் அவள் மனம் குன்றி விடும். அவள் மனத்தில் பலவிதமான வேதனைகளும் வெறுப்பும்தான் ஏற்படும். 'இவர்கள் ஏன் பெண்களாகப் பிறக்கிறார்கள்? ஏன் இத்தகைய இழிவான செய்கைகளையெல்லாம் செய்து உயர்வான பெண் குலத்துக்கே களங்கத்தை உண்டாக்குகிறார்கள்?' என்றெல்லாம் நினைத்து மனம் வருந்துவாள்.

நூற்றுக் கணக்கான பெண் கைதிகளை அடைத்து வைத்திருக்கும் அந்தச் சிறையில்தான்

கி.ரா. கோபாலன்

எத்தனை எத்தனை விதமான முகங்கள்? ஒவ்வொரு நாளும் அந்த முகங்களில் விழிப்பது சரளாவுக்கு வெறுப்பாகத்தான் இருந்தது. சில முகங்களைப் பார்க்க அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது. சில இரக்கமற்ற கொடிய கடுமையான முகங்களைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு எரிச்சல்தான் ஏற்படும். ஒவ்வொரு நாளும் அந்த முகங்களைப் பார்க்க வேண்டிய விதி தனக்கு ஏற்பட்டுள்ளதை எண்ணி வெறுப்பும் எரிச்சலும்தான் அடைவாள். சில முகங்களைப் பார்க்கும்போது அவளுக்கு அனுதாபமும் பச்சாத்தாபமும் ஏற்படும். பேதைமை நிறைந்த சில பெண்களின் முகத்தைக் காணும்போது 'உண்மையாகவே அவர்கள் குற்றம் செய்திருப்பார்களா?' என்ற சந்தேகம்தான் அவளுக்கு ஏற்படும். சில பெண்கள் இரண்டாவது முறையாகவும், மூன்றாவது முறையாகவும் சிறைக்கு வந்தவர்களாக இருப்பார்கள். சிறைச்சாலை என்ன சொர்க்கமா? அவர்கள் ஏன் மறுபடியும், மறுபடியும் சிறைக்கு வருகிறார்கள்? ஏதேனும் குற்றம் செய்து விட்டுச் சிறையில் வந்து வாழ்வைக் கழிப்பது அவர்களுக்குப் பெருத்த அவமானமாக இல்லையா...? ஏன் அவர்கள் வாழ்க்கையில் சீர்திருந்தி இருக்கக் கூடாது? இந்த உலகத்தில் பெண்கள் குணத்தோடும் நல்ல தன்மையோடும் வாழ வசதியில்லையா? நியாயமான முறையில் பிழைக்க வழியில்லையா? இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கும் தருணங்களில் சரளாவின் மனசு பெரியவேதனைக்குள்ளாகித்தான் புழுங்கும்.



சரளாவுக்கு வயது நாற்பது இருக்கும். மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். அவள் பெண்ணாக இருந்தாலும் வாழ்க்கையில் எவ்வளவு சுக துக்கம் உண்டு என்பதைக் கண்டு அனுபவித்தவள். அவளுடைய தகப்பன் இறந்து விட்டான். அவளுடைய குழந்தைப் பருவத்திலேயே அவளுடைய தகப்பன் தேச சேவையில் ஈடுபட்டுப் பலவித தியாகங்கள் செய்தவன். அவனுடைய ஆசை தன் பெண் சரளா படித்து ஏதேனும் ஒரு துறையில் தேச மக்களுக்காகப் பாடுபட வேண்டுமென்பதுதான். தகப்பன் இறந்த பிறகு ஏழ்மை நிலையிலிருந்த அவளுடைய தாய் பலருடைய உதவியினால் அவளைப் படிக்க வைத்தாள். சிறு வயதிலேயே தகப்பன் செய்த உபதேசங்களினால் சரளாவின் இருதயமும் சேவை மனப்பான்மையிலேயே ஈடுபட்டிருந்தது. ஏழையாயிருந்தாலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் படித்துப் பெண்கள் சமூகத்துக்காகப் பணி செய்ய வேண்டுமென்ற நோக்கம்தான் அவளுக்கு. சிறைக்கு வந்த பெண்களை எவ்வளவு தூரம் சீர்திருத்தி அவர்களின் வாழ்க்கையைச் சீரானதாகச் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் அவர்களைச் சீர்திருத்தும் பணியையே லட்சியமாகக் கொண்டு உழைப்பவள். தகப்பனை இழந்து தாயாரால் வளர்க்கப்பட்ட அவள், உலகத்தில் ஒரு பெண் அனாதையாக விடப்பட்டால் அவள் கதி எப்படி எப்படியெல்லாம் போய் முடியும் என்பதைச் சிந்தித்து உணர்ந்திருந்தாள். உலகத்தில் காமக்குரோத ஆசைவெறிகளுக்கெல்லாம் படித்த பெண்களே பலியாகி இருக்கும்போது படிக்காத பெண்கள் எத்தகைய நிலையை அடைவார்கள் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். சிறைக்கு வந்திருக்கும் பெண்களில் முக்கால்வாசிப் பேர் அனாதையாக விடப்பட்டதன் காரணமாகவே பலவிதத் தீயச் செயல்களில் ஈடுபட்டுச் சிறைக்கு வந்தவர்கள் என்பதை அவள் அறிந்துள்ளாள். வயிற்றுப் பிழைப்புக்காக உத்தியோகம் பார்க்கிறோம் என்ற நோக்கமில்லாமல் சிறந்த சமூகப் பணி ஒன்று செய்கிறோம் என்ற ஆறுதலோடுதான் அவள் இருந்தாள்.

அவள் அனுதாபமும் பச்சாத்தாபமும் காட்டிய பெண் கைதிகளில் ஒருத்தி அஞ்சுகம். அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவளுக்கு எல்லையற்ற வாஞ்சையும் அனுதாபமும் தான் ஏற்படும். பேதைமை நிறைந்த அந்தப் பெண்ணின் முகம் அவள் மனத்தை உருக்கியது. அந்தப்பெண் எதற்காகச் சிறைச்சாலையில் காலடி எடுத்து வைக்கவேண்டும்? உண்மையாகவே இந்தப் பெண் குற்றம் செய்திருப்பாளா? இவள் எத்தகைய குற்றம் செய்திருக்க முடியும்? அபலையான இவளை வஞ்சக நெஞ்சம்

கொண்ட யாரோதான் ஏமாற்றி இருக்க வேண்டும். அவள் உண்மையாகக் குற்றம் செய்திருப்பாள் என்று சரளாவால் பூர்ணமாக நம்ப முடியவில்லை. என்ன செய்வது? சந்தர்ப்பமும், சாட்சியும் ஒத்துப் போனால் சட்டம் சிறைச்சாலையைத்தானே உத்தமமான இடமென்று காட்டுகிறது? ஆனால் மனித இருதயம்—பாவம்! இளம் பெண்—அவளுடைய பேதைமை நிறைந்த களங்கமற்ற முகத்தைப் பார்த்தாவது நீதிபதி அவளிடம் கருணை காட்டியிருக்கக் கூடாதா? ஒரு தடவை சிறைக்கு வந்து விட்டு வெளியேறிய பெண் உலகத்தில் கன்னியத்தோடு வாழ வழியுண்டா? வசதிதான் உண்டா?

அஞ்சகத்தின் சிறைவாசம் அன்றோடு பூர்த்தியாகிறது. அன்று அவள் விடுதலையாக வேண்டிய நாள். உண்மையாகவே அவள் ஒரு திருட்டுக் குற்றத்தைச் செய்திருந்தவளானாலும் இனிமேல் அவள் உலகத்தில் சீர்திருந்தி ஒழுங்காக வாழ வேண்டும். அனுபவமற்ற, பாதுகாப்பற்ற, அந்தப் பேதைப் பெண் தன்னுடைய புத்தி போனபடிதானே தன் வாழ்க்கையை நடத்தவேண்டியிருக்கிறது? திசை தெரியாத, செய்வழியறியாத குருடன், தானே கிணற்றில் விழுவது போல ஏதேனும் குற்றம் செய்து, மறுபடியும் சிறைக்கு வந்தால் யாரை நொந்து கொள்வது? அவளையா? உலகத்தையா...?



அன்று காலை அஞ்சகத்தைத் தன் அறைக்கு அழைத்தாள் சரளா. அஞ்சகம் தலை குனிந்தவண்ணம் அவள் எதிரில் வந்து நின்றாள். ஆறுமாதங்களாக அனுபவித்திருக்கும் சிறைவாசம் அவளுக்கு எத்தகைய மன வேதனையையும், அவமானத்தையும் அளித்திருக்கிறது என்பது ஒளி இழந்து தொங்கும் அவள் முகச் சாயலிலிருந்து நன்கு தெரிந்தது.

சரளா சிறிது நேரம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு அனுதாபம் மிகுந்த குரலில், "அஞ்சகம்! இன்று உனக்கு விடுதலை. மறுபடியும் இந்த ஜெயிலுக்கு வரும் துர்ப்பாக்கியம் உனக்கு ஏற்படாது என்று நான் நினைக்கிறேன்......" என்றாள்.

"மறுபடியும் அது ஏற்படக் கூடாது என்று தான் அம்மா நானும் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்" என்றாள் அஞ்சகம், துயரம் நிறைந்த குரலில்.

"ஜெயில் இன்பமான இடமல்ல; சொர்க்கமல்ல; இங்கு வருவதில் ஏதேனும் சந்தோஷமா? இங்கு வருவது அவமானம். அதுவும் பெண்களுக்கு...எனக்குச் சொல்லவே வெட்கமாக இருக்கிறது. நானும் ஒரு பெண்தானே? மிகவும் கேவலம்...... நாங்களெல்லாம் உங்களைப் போன்ற பெண்கள் சமூகத்தில் ஒழுங்கான வாழ்க்கை முறையில் வாழ வேண்டும் என்பதை உங்களுக்குக் கற்றுக் கொடுக்கத்தான் இங்கு இருக்கிறோம். இந்த ஆறுமாதச் சிறைவாசத்திலிருந்து நீ சரியான பாடம் கற்றுக் கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். உனக்கு அளித்த தண்டனை இனிமேல் உனக்கு நல்லபடியாக வாழும் புத்தியை ஏற்படுத்துவதற்காகத்தான் என்பதையும் நீ புரிந்து கொள்ள வேண்டும். சில பெண்களைப் போல் சிறைக்கு வருவதே வாழ்க்கையை நடத்தும் மார்க்கமாக நீயும் நினைத்து விடக் கூடாது. இது பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கே மிகவும் இழுக்கு..." என்றாள் உருக்கமாக.


இந்த வார்த்தையைக் கேட்டதும் அஞ்சகத்தின் மனத்தில் ஏற்பட்ட துயரம் அளவிடற்கரியதாக இருந்தது. கண்களில் நீர் ததும்பத் தழுதழுத்த குரலில், "நான் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை, அம்மா. நான் நிரபராதி; என்னைத் தண்டித்து விட்டார்கள். என் பக்கத்தில் நின்ற பெண் அந்தக் கடையிலிருந்து ஒரு வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து என் கையில் கொடுத்து விட்டுச் சமயம் பார்த்து ஓடி விட்டாள். நான் போலீஸ்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டேன். நான் குற்றமற்றவள் என்று நீதிபதியிடம் கதறிக் கதறிச் சொன்னேன். என் விதி—நான் என்ன செய்ய முடியும்? சிறைவாசம் அனுபவித்தேன். இனிமேலும் என் விதி எப்படியோ? உலகத்தில் ஒழுங்காகப் பிழைப்பை நடத்த எனக்கு வழி கிடைக்குமோ, கிடைக்காதோ? நான் அனாதை, திக்கற்றவள். எங்கே போவேன்? என்னை யார் காப்பாற்றுவார்கள்?"

டினோபால் வெண்மை என்றால்
வெண்மையிலும் வெண்மை என்று அர்த்தம்



சாதாரண சோப்பினால் சுத்தம் செய்த பின் உங்களுடைய வெண்மையான ஆடைகளுக்கு டினோபால் உபயோகிப்பதால், நீங்கள் எவ்வித தோற்றமளிக்கின்றீர்கள் எனப் பாருங்கள், வெண்மையான ஆடைகளைப் பிரகாசமாகவும், பளபளப்பான வெண்மையுடனும் வைக்கச் செய்யும் பிரத்தியேகமான தொருகுணம் டினோபாலிலடங்கியுள்ளது.





டினோபால்

''டினோபால்'' என்பது ஜே. ஆர். கேய்கி, எஸ். ஏ. பாஸ்ல், ஸ்விட்ஸர்லாந்த், அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்.

அமால்கமேடட் கெமிக்கல்ஸ் அண்ட் டைஸ்டப்ஸ கோ, பிரைவேட் லிட்.,
பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்.


என்று குழந்தையைப் போலச் சொல்லிக் கண் கலங்கினான்.

சரளா அங்ககத்தின் முகத்தைப் பரிவோடும் பச்சாத்தாபத்தோடும் பார்த்தான். துயரத்துக்கிடையே தடுமாறி வந்த அங்ககத்தின் வார்த்தைகள் சரளாவின் மனத்தை உருக்கின. அடக்கமான அந்தப் பெண்ணின் குரலில் உலகமறியாத ஒரு பேதைமை குடிகொண்டிருப்பதைத்தான் அவன் உணர்ந்தான். “சரி! உலகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இன்னும் உனக்குத் தெரியவில்லை. உலகத்தில் அனுபவமடைந்த பெண்களே ஏமாற்றப் படுகிறார்கள். இளம் பெண்ணாகிய உனக்கு என்ன தெரியப் போகிறது? நான் உனக்கு ஒரு எச்சரிக்கை செய்கிறேன். தகாதவர்கள் சிநேகம் உனக்கு இருந்தால் இனிமேல் அவைகளையெல்லாம் விட்டுவிடு. நீ எங்கேனும் தனித்துப் போய் இருந்து யாருக்கேனும் அடிமை வேலை செய்தேனும் உன் வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக் கொள். அதுதான் உனக்கு நல்லது...” என்றான்.

“நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் நான் எங்கே போவேன்? உற்றார் உறவினர் தாய் தகப்பன் ஒருவரும் எனக்கு இல்லை. எனக்குப் பழக்கமானவர்கள் சிலர் உண்டு. அங்கேதானே நான் போக முடியும்? எனக்குத் தெரியும், அவர்கள் நல்லவர்களல்ல என்று. ஆண்களும் சரி, பெண்களும் சரி; திருடர்கள், போக்கிரிகள், சூதாடிகள், வஞ்சனைக்காரர்கள். அவர்களிடம்தானே நான் போக வேண்டியிருக்கிறது.........? நான் போகா விட்டாலும் அவர்கள் என்னைப் பார்த்தால் விடவே மாட்டார்கள்......” என்றான் அங்ககம் துயரத்தோடு.



"அவர்கள் ஏன் உன்னைப் பார்க்கிறார்கள்? அவர்களை நீ ஏன் பார்க்க வேண்டும்?" என்று சொல்லிச் சரளா சிறிது நேரம் யோசித்தாள். "சரி! நான் உனக்கு ஒரு யோசனை சொல்கிறேன். அதன்படி நடந்துகொள்" என்று சொல்லி அஞ்சுகத்தைத் தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டாள். மேலும் தொடர்ந்து, "மேகராஜபுரம் என்ற கிராமத்தில் பார்வதியம்மாள் என்ற சிநேகிதி ஒருத்தி இருக்கிறாள். அவள் மிகவும் பணக்காரி. அவளுக்கு அறுபது வயதுக்கு மேல் ஆகிவிட்டது. மிகவும் நல்ல குணம்; அதுவும் உன்னைப் போலப் பெண்களிடம் மிகவும் அனுதாபமாகவும் அன்பாகவும் நடந்து கொள்வாள். அவளுக்கு நான் ஒரு கடிதம் எழுதி உன்னிடம் கொடுக்கிறேன். அவள் உன்னைத் தன் வீட்டோடு வைத்துக் கொண்டு ஏதேனும் ஒரு வேலை கொடுப்பாள். கொஞ்ச நாட்கள் நீ அவளோடு பழகினால்



உன்னுடைய குணம் அவனுக்குப் பிடித்து விடும். அவனே பார்த்து உனக்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணமும் செய்து வைத்து விடுவான். உண்மையாகப் பெண்களுக்குக் குடும்ப வாழ்க்கையில்தான் இன்பம் இருக்கிறது. கணவனுக்கு அடங்கி நடந்து, குழந்தைகளைப் பெற்று அடக்கமாகக் குடித்தனம் நடத்தும் பெண்தான் உலகத்தில் பாக்கியசாலி. சிறந்தவள். நீ அழகான பெண். விவாகப் பருவத்தில் உள்ளவள். அடக்கமான குணமும் உலக அனுபவமும் இல்லாதவள். நீ தனித்து உலகத்தில் உலாவ முடியாது. அழகும் பருவமும் அபாயகரமானது. உலகத்தில் எல்லாக் கண்களும் சரியான கண்களல்ல. உன்னைப் போன்ற பெண் குடும்பப் பாதுகாப்பில் இருப்பது தான் சிறந்தது. இப்படிப்பட்ட இழிவான நிலைமை ஏற்படாமல் நீ சௌக்கியமாக வாழலாம். இதில் உனக்குச் சம்மதம் தானே?" என்று கேட்டான் சரளா.



கடந்த ஆறு மாத அனுபவத்தில் சரளா தன்னிடம் மிகவும் அன்பாகவும், அனுதாபத்தோடும் நடந்து கொண்டிருந்தாள் என்பதை அஞ்சுகம் அறிந்திருந்தான். ஆனால் தன் வாழ்வைப் பற்றிய சிரத்தையும் கவலையும் அவளுக்கு ஏற்பட்டு இத்தகைய பேருபகாரம் செய்வாள் என்று அவன் நினைக்கவேயில்லை. அவன் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தான். சோகம் படர்ந்திருந்த அவன் முகத்தில் நம்பிக்கையின் ஒளி தவழ்ந்தது. நகர வாழ்க்கை முறையும் குரூர புத்தியும் நிறைந்த ஜனங்களிடையே தான் மறுபடியும் சென்று வாழாமல், அழகும் நிம்மதியும் பொருந்திய ஒரு சிறு கிராமத்தில் ஆதரவும் அன்பும் கொண்ட ஒருவருக்கு அடிமையாகி அடக்கமாக வாழ்க்கை நடத்துவதே அவளுக்கு எவ்வளவோ சிறந்ததாகப் பட்டது. அவன் நன்றியறிதலோடு சரளாவைப் பார்த்துக் கொண்டே, "அம்மா! நீங்கள் சொல்லுவது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த உபகாரம் செய்ததற்கு உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?" என்று கூறினான்.

சரளாதேவி ஒரு கடிதத்தை எழுதி உறையில் வைத்து, அஞ்சுகத்திடம் கொடுத்தான். "மேகராஜபுரம் என்பது எங்கே இருக்கிறது, தெரியுமா? தேவிப்பட்டினம் ஸ்டேஷனில் இறங்கி வடக்கே நான்கு மைல் போக வேண்டும். இங்கு ரயில் ஏறித் தேவிப்பட்டினம் ஸ்டேஷனில் இறங்கி அங்கு விசாரித்துக் கொண்டு ஜாக்கிரதையாகப் போய்ச் சேர வேண்டும். நீ ஒழுங்காக வாழ வேண்டுமானால் நான் சொல்லிய இடத்துக்கு நேராகப் போய்ச் சேர்ந்து விடு. அசட்டுத்தனமாக வேறெங்கேனும் போய்ச் சிக்கிக் கொள்ளாதே. மறுபடியும் அந்த அபாயச் சிக்கலிலிருந்து நீ மீள முடியாது. நீ அங்கு போய்ச் சேர்ந்து ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடந்து கொண்டிருய் என்று எனக்குத் தகவல் கிடைக்கும் வரையில் எனக்கு உன் ஞாபகமும் கவலையுமாகத்தான் இருக்கும்" என்று சொன்னான் சரளா. அவன் வார்த்தைகளிலிருந்தே அஞ்சுகத்தினிடம் அவளுக்கிருந்த அன்பும் ஈடுபாடும் தெரிந்தன.

அஞ்சுகம் அவன் கொடுத்த கடிதத்தையும் பணத்தையும் பெற்றுக் கொண்டான். அவன் முகத்தில் எழுந்த சந்தோஷக் குறி மாறித் திடீரென்று ஏதோ திகில் ஏற்பட்டது. 'தேவிப்பட்டினம்' என்ற வார்த்தையைக் கேட்கவே அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அவன் தன் மனத்தில் ஏற்பட்ட குழப்பத்தையும் திகிலையும் சிறிது மறைத்துக் கொண்டு, "தேவி பட்டினமா......? தெரியும். நான் அங்கு விசாரித்துக் கொண்டு எப்படியாவது மேகராஜபு[illegible]க்குப் போய் விடுகிறேன். நான் எங்கும் ஒரு [illegible]ஷம்கூட நிற்க மாட்டேன். நீங்கள் சொல்லியபடி அங்கு போய் ஒழுங்காக இருக்கிறேன். உங்கள் வார்த்தையை நான் மறக்க மாட்டேன். எனக்கு இந்த உபகாரம் செய்த உங்களுக்கு நான் என்ன செய்ய முடியும்?..." என்று சொல்லி வணக்கத்தோடு விடைபெற்றுக் கொண்டான்.

அவன் சிறைச்சாலையைவிட்டு வெளியே வந்ததும் இருள் சூழ்ந்த ஒரு பயங்கரமான இடத்திலிருந்து ஒளி நிறைந்த ஒரு இன்ப லோகத்துக்கே வந்து விட்டது போலத்தான் தோன்றிற்று. உண்மையிலேயே இருள் அடைந்து போய் இருந்த அவன் மனத்தில் நம்பிக்கையின் ஒளிக்கதிர் அப்பொழுதுதானே பாய்ந்திருக்கிறது?

(தொடரும்)

'அனஸின்'

வில்லைகளில் கலந்துள்ள நான்கு
மருந்துகளால் உங்கள் வலியை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்



'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசைநார்களில் நோவு இவற்றை நீக்கும்.

அனஸினில் அடங்கிய மருந்துகள் :—

1. கொயினா: ஜுரத்தடுப்புகுணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் பிரதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப் பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில்ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் நிறுத்துவதற்கு உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' ஜீரணத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல் வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம்பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

தவம்

சங்கர்

வெளியிலே 'சோ' என்று மழை பெய்து கொண்டிருந்தது. ஒரு இடி, மின்னல் இல்லை. வாடை மட்டும் 'சில்' லென்று வீசியது. 'நந்துவை எங்கே காணோம்?' என்று அறையை விட்டு வெளியே வந்தேன். என்ன ஆச்சர்யம்! வராந்தாவின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு முற்றத்தில் கொட்டும் மழையை, ஏதோ சதிர்க்கச்சேரியை ஆழ்ந்து ரஸிப் பவனைப் போல் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இன்னும் ஐந்து வயது நிறையவில்லை அல்லவா? அதற்கேற்ப ரஸனையும் கொஞ்சம் உயர்வாகத்தானே இருக்கும்!" என்று எண்ணுவதற்குள் வீட்டுக் குள்ளிருந்து இடிமுழக்கம் வந்து விட்டது!

"மழை கொட்டுகிறது. குழந்தையை விட்டுவிட்டு வேடிக்கையா பார்க்கிறீர்கள்?"

அவ்வளவுதான்; நந்துவை அலக்காகத் தூக்கிக்கொண்டு மீண்டும் என் அறைக்குள் நுழைந்தேன்.

அச் சமயம் பார்த்து அவன் என்னை ஒரு கேள்வி கேட்டான்! அப்படியே நான் அசைவற்று நின்று விட்டேன்.

"மழை எதனாலேப்பா பெய்கிறது?"

என் மெய் சிலிர்த்து விட்டது. பட்டாம் பூச்சியின் வண்ண இறகுகளிலே மயங்கி அதனைப் பிடிக்க ஓடும் சிறு குழந்தையைப் போல், பழைய சம்பவங்களைப் பின் தொடர்ந்து, என் நினைவுக் கரங்களை நீட்டிய வண்ணம் ஓடினேன்.

நந்துவின் குரல் மீண்டும் என் செவிகளில் விழுந்ததும், "போடா! போய் அம்மாவிடம் கேள்!" என்று அவனை அடுக்களைப் பக்கம் தள்ளி விட்டேன். ஒரே பாய்ச்சலில் ஓடினான் அவன்.

நந்துவின் கேள்வி மிகவும் சாதாரணமானதுதான். அதிலே நான் ஒரேயடியாக வியப்படைய என்ன காரணம் என்று நீங்கள் கேட்கலாம். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் வரை, மழையைப் பார்த்ததுமே என் உள்ளத்தில் கருக்கொண்டு விட்ட ஒரு நினைவு முழு உருவம் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயம் பார்த்து நந்து கேட்கவும் என்னுடைய பழைய நினைவின் பசுமை தலை தூக்கி நிற்கவும் சரியாக இருந்தது. அவனவேதான்.



அவன் கேட்டானே, அந்தச் சின்னக் கேள்வியைப் பத்து வருஷங்களுக்கு முன்னுல் ஒரு விசித்திர மனிதர் என்னிடம் கேட்டார். இதோ அவருடைய முகம் என் மனக் கண்முன் வருகிறது. அவரைப்பற்றி உங்களிடம் சொல்லித்தான் ஆக வேண்டும்.

"பிரபல சினிமா டைரக்டர் வித்யா சங்கரை உங்களுக்குத் தெரியுமா?"

"இதென்ன கேள்வி? 'தியாக சிகரம்' என்ற அற்புதமான திரைப்படத்தின் மூலம் அகில உலகப் புகழ் பெற்று விளங்குபவராச்சே அவர்!"

"இனி உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரேதான்! பாரத நாட்டின் பெருமையை மேலை நாடுகளிலெல்லாம் பரப்பிய அந்தத் 'தியாக சிகர'த்தில் கதாநாயகியாக நடித்தாளே ஒரு பெண்—சீதா, அவளையும் மறந்திருக்க மாட்டீர்கள். ஆனுல் அவளுடைய கணவனைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்காது."

அந்தப் புண்ணிய புருஷருடைய முகமும் வித்யா சங்கருடைய முகமும் நந்து கேட்ட அந்தக் கேள்வியின் ஊடே என் மனத் திரையில் பளிச்சென்று தோன்றின.

அந்தக் காட்சியில் என் மனம் பம்பரமாகச் சுழல ஆரம்பித்தது.

★

அப்போது......

வித்யாசங்கர் ஊர் ஊராகத் தேடிக் கொண்டிருந்தார்.

"யாரை?"

"நிருபாவை!"

"நிருபாவையா? யார் அந்த நிருபா?"

அவருடைய கற்பனையிலே பிறந்து வளர்ந்து இப்போது 'திரைக்கதை' என்னும் அங்க அமைப்புக்குள் வியாபித்து நிற்கும் பெண் திலகம் தான் நிருபா. கற்பனையில் உதித்த பெண்ணை வெளியுலகத்திலே தேடுவதா? அதிசயமாயிருக்கிறதே! தமது கற்பனைப் பெண் இந்த உலகத்தில் எங்கேயாவது ஒரு மூலையில் உயிர் வாழ்வாள் என்று அவர் பரிபூரணமாக நம்பினுர். அந்த நம்பிக்கையின் பலன் விபரீதமாக வளரும் என்று யார் கண்டார்கள்? மனிதர் பாவம்! ஊண் உறக்கத்தை மறந்து தேடினுர்.

எத்தனையோ நடிகைகள் தினம் தினம் வந்தார்கள். ஒருத்தியாவது பொருந்த வேண்டுமே! 'ம்ஹூம். நிருபா எங்கே? இவர்கள் எங்கே?' என்று கூறி விட்டார் வித்யா சங்கர்.

அவரது நிலையைக் கண்டு உண்மையிலேயே பரிதாபமடைந்த நண்பர்கள் பிரபல நக்ஷத்திரம் ஒருவரைப் பிடித்துப் போட்டு விடலாமா என்று சிபாரிசு செய்தனர். வித்யா சங்கரோ லட்சியவாதி; லக்ஷவாதியல்ல! 'குல்லாய்க்குத் தகுந்தபடி தலையை நறுக்கிக் கொள்ளும் அளவுக்குத் தம் பைத்தியம் இன்னும் முற்றவில்லை!' என்று சொல்லி விட்டுச் சிரித்தார்.


காலம் ஓடிக் கொண்டேயிருந்தது. நடிகை கிடைக்காமல் திண்டாடும் அந்தப் பட முதலாளியைக் கண்டு சினிமா உலகம் கெக்கலி கொட்டி நகைத்தது!

★

உதகமண்டலத்திலே ஒரு சாலை...

வித்யாசங்கர் ஒரு கணம் திகைத்து நின்ருர். வியப்பு, மகிழ்ச்சி, பிரமை எல்லாம் ஒன்று சேர்ந்து அவரைத் திணற அடித்தன. தூரத்தில் சென்று கொண்டிருந்த அந்தப் பெண்மணியின் தலைமறையும் வரை வைத்த கண் வாங்காமல் அப்படியே அந்தத் திருப்பத்தில் செயலிழந்து போய் நின்று விட்டார்.

'எவ்வளவு தத்ரூபமான தோற்றம்! நிருபா இங்கல்லவா உயிர்வாழ்கிருள்! இத்தனை நாளும் எங்கெல்லாமோ போய் அலைந்து விட்டோமே!" என்று வியந்த வண்ணம் சாலையிலே ஏறி



நடந்தார். அன்று அவள் வீட்டை அறிந்து கொண்ட திருப்தியுடன் தம்முடைய பங்களாவுக்குத் திரும்பினார். இரவு அவருக்குத் தூக்கம் வரவில்லை. கதையைக் கையிலே எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்து விட்டார். படப்பிடிப்பு சம்பந்தமான அரிய கலை நுணுக்கங்கள், உத்திகள் எல்லாம் ஒவ்வொன்றாக அவர் மனத்திரையிலே பதிவாகிக் கொண்டிருந்தன. படமே எடுத்து முடிந்து விட்டதைப் போல் சந்தோஷப்பட்டார். ஆனால் அந்த சந்தோஷம் பொழுது விடிய விடியக் கரையலாயிற்று. மனம் ஏனோ குழம்பிற்று.

“என்ன பைத்தியக்காரத்தனம்! ஒரு குடும்பப் பெண். ‘சினிமா’ என்கிற போர்வைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் என் பரிசுத்த லட்சியத்தை—கலையார்வத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? ஒரு வேளை மறுத்து விட்டால்?...”

விடியற்காலம் எழுந்திருக்கும்போது வித்யாசங்கரின் மனத்தில் பழைய குழப்பமெல்லாம் அடங்கி ஒரு தெளிவு பிறந்திருந்தது. எப்படியாவது அவளை நடிக்க வைத்து விடுவது என்ற சங்கல்பத்துடன் கிளம்பினார். சிந்தை, செயல், மூச்சு எல்லாம் அந்த ஒரே குறிக்கோளை மையப்புள்ளியாகக் கொண்டு குவிந்து நின்றன. அந்த நினைப்பிலே ‘விறுவிறு’ என்று மேலே நடக்க ஆரம்பித்தார்.

இதோ நெடுஞ்சாலையிலிருந்து பிரிகிறது ஒரு சந்து! வித்யாசங்கர் மகுடி ஒலி கேட்ட நாகம்போல் சற்றே இறங்கி நின்றார். எங்கிருந்தோ ஒரு இனிய கீதம் சோகம் தாளாமல் காற்றிலே தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தது. தம்மையும் மறந்தவராய் அந்தப் பாடல் வந்த திசையிலே இப்போது நடந்தார் அவர். என்ன விந்தை! அந்தப் பாடல் ‘கிருபா’வின் வீட்டுக்குமுன்னால் அல்லவா கொண்டு வந்து விட்டு விட்டது!

“நமஸ்காரம், வாருங்கள்! யாரைப் பார்க்க வேண்டும்?” — தேனினும் இனிய பெண் குரல் அவரை வரவேற்றது.

நிமிர்ந்து பார்த்தார் வித்யா சங்கர். மாசு படாத ஓடைக் குளிர் மலர்! படிக்கட்டிலே நின்று கொண்டு பரந்த வானத்தை நோக்கிப் பேசுவது போலப் பட்டது அவருக்கு. ஏதோ பேச முயன்றார்; முடியவில்லை. பதிலுக்குக் கூப்பிய கரத்தைக் கூட எடுக்க ஓர்மையில்லாமல் அப்படியே நின்றார், அந்த நிலவு முகத்தாளைப் பார்த்து வியந்தபடியே!

கொஞ்ச நேரத்துக் கெல்லாம் ஒரு பிரம்பு நாற்காலியைக் கொண்டு வந்து வெளி முற்றத்திலே போட்டாள் அந்தப் பெண். வித்யா சங்கர் அமர்ந்தார். உடலெங்கும் சிதறிக் கிடந்த தைரியத் துகள்கள் நாக்கு நுனியிலே ஒன்று சேர்ந்தன. தெளிவான குரலில் கேட்டார்:

“அம்மா! உனக்கு இந்த வீட்டில் துணை யார் இருக்கிறார்கள்? அவர்களிடம் கொஞ்சம் நான் பேசலாமா? ரொம்பவும் முக்கியமான விஷயம்......”


“ஓ! அப்படியா?” என்னும் பாவத்தில் அவள் கண்கள் அகன்றன.

“மன்னிக்க வேண்டும். எனக்குத் துணை யார் என்று கேட்கிறீர்கள்? ரொம்பவும் சரி. என் கணவர்தான் எனக்குத் துணை, தெய்வம் எல்லாம்! அவர் உடம்பு குணமில்லாமல் படுத்த படுக்கையாய் இருக்கிறார். இப்போதுதான் அவருக்கு ஆகாரம் கொடுத்துத் தூங்கப் பண்ணியிருக்கிறேன்....”—பேசும் பொழுதே அவள் கண்களில் நீர் கசிய ஆரம்பித்தது.

“பரவாயில்லை. அவருக்கு எப்பொழுது சௌகரியப் படுமோ, அப்பொழுது நான் வருகிறேன்.”

“சாயங்காலம் ஐந்து மணிக்கு வந்தால் பார்க்கலாம்......”

வித்யாசங்கர் எழுந்தார். உடம்பு குணமில்லாமல் தூங்கும் அவள் கணவனைப் பார்த்து விட்டாவது போகலாம் என்ற நினைப்பில் வீட்டுக்குள்



நுழைந்தார். அவருடைய தலை சுழன்றது. மனசு ரொம்பவும் சங்கடப்பட்டது. அமுதமும் விஷமும் ஒரு வீட்டில் குடியிருப்பதென்றால்? கட்டிலின் மேலே ஒரு மனிதன் — எலும்புக்கூடு என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் — ஒருக்களித்த வண்ணம் படுத்திருந்தான். அருகே மருந்துப் புட்டிகள், ஆரஞ்சுப் பழங்கள்! இவனா இவளுடைய கணவன்?

வித்யாசங்கரின் மனத்துள் சுழல்காற்று வட்டம் இட ஆரம்பித்தது. அந்தப் பெண்மணியோ கட்டிலின் அருகே நின்ற வண்ணம் கணவனின் முன் நெற்றியில் துளித்த வியர்வை அரும்புகளைத் தன் முன்தானையால் ஒற்றித் துடைத்துக் கொண்டிருந்தாள்! 'அவளாவது, சம்மதிக்கவாவது?' என்ற நிராசை அவர் முகத்தில் பிரதிபலித்தது.

அன்று மாலையில் வெளியே போயிருந்தவன் அப்போதுதான் திரும்பிக் கொண்டிருந்தேன். பொழுது மயங்கும் நேரம். யாரோ ஒரு பெண்மணி பங்களாவிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தாள். சற்றுக் கூர்ந்து பார்த்தபொழுது எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது!

சீதா! ஆம்! அதுதான் அந்தப் பெண்ணின் பெயர். எதற்காக வந்து விட்டுப் போகிறாள்? என் உள்ளம் அடைந்த பரபரப்பைச் சொல்லி முடியாது! ஓட்டமாக உள்ளே ஓடினேன். வித்யாசங்கர் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் உற்சாகம் நிலை கொள்ளாமல் கத்தினார்.

"ரவி! சீதா சம்மதித்து விட்டாள்! உடனே புறப்படுவதற்கு ஏற்பாடு செய். நாளையே படப்பிடிப்பை ஆரம்பித்து விடவேண்டும்!" என்றார்.

"என்ன, சீதா சம்மதித்து விட்டாளா?" என்று கேட்டவன், "சீதா மட்டுந்தான் வருகிறாளா? இல்லை, அந்தக் காச நோய்க்காரனும் கூட வருகிறானா?" என்று அவரிடம் கேட்டேன்.

"ஏ, முட்டாள்!" — வித்யாசங்கரின் குரல் கடுமையாக ஒலித்தது.

நான் திடுக்கிட்டு விட்டேன். வித்யாசங்கரோ கணப் பொழுதுக்குள் ருத்ரமூர்த்தியாகித் தணிந்தார். ஆனாலும் ஆவேசம் அடங்கவில்லை. சொன்னார்:

"இன்னொரு முறை அப்படிச் சொல்லி விடாதே! நீ சொன்ன வார்த்தைகள் காற்றுவாக்கிலே விழுந்தால்கூட என் காரியம் கெட்டுப் போய்விடும். சீதாவின் உள்ளத்தை நீ அறிய மாட்டாய். அந்தத் தூய உள்ளத்திலே எந்தச் சிறு சலனமும் ஏற்பட்டுவிடக் கூடாது. அப்புறம் அவளிடம் நான் கலையின் பேரால் எதிர்பார்க்கும் லட்சியத் தோற்றத்தில் மங்கல் விழுந்து விடும். பிறகு இத்தனை நாள் நாம் பாடுபட்டதெல்லாம் மண்தான்!"

நான் என் குற்றத்தை உணர்ந்தேன். கண்கலங்க மன்னிப்புக் கேட்ட பொழுது அவரும் கண்ணீர் சிந்திவிட்டார். பிறகு அவர் சொன்னார்:

"ரவி! நான்; என் வாழ்க்கையில் தெரிந்து செய்யக் கூடிய பாவங்களில் எல்லாம் பெரிய காரியம் இந்தப் பெண்ணைச் சினிமா உலகத்தில் இழுத்து விடுவது தான்!" என்று கூறினார்.

"நானோ இத்தனை நாள் பழகியும் அவரைப் புரிந்து கொள்ளாத நிலையில் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டேன்.

★

"தியாக சிகரம் பாரத நாட்டின் பண்பை உலகத்துக்கு எடுத்துக் காட்டும்



ஒரு கலங்கரை விளக்கம்! குடும்பப் பெண்கள் அனைவரும் காண வேண்டிய அற்புத சித்திரம். நிருபாவாக நடிக்கும் புது முகம் பார்ப்போர் உள்ளங்களை விட்டு என்றுமே மறைய மாட்டார்."—ஒரு முகமாகப் பத்திரிகைகள் புகழ்ந்து பாராட்டின.

அன்று வித்யாசங்கர் சீதாவைப் பார்க்க வந்திருந்தார். "சீதா! இன்று இரவு அமெரிக்காவுக்குப் புறப்படுகிறேன். எதற்குத் தெரியுமா? நம் படத்தின் வெற்றி விழாக்களில் கலந்து கொள்வதற்காகத் தான். இந்தனை பாராட்டுக்கும் காரணம் நீ. பண்பே உருவான ஒரு நடிகையைச் சினிமா உலகத்துக்கு அளித்திருக்கிறேன் என்ற பெருமைதான் எனக்கு. மீண்டும் நான் வந்து பார்ப்பதற்குள் ஒரு மகோன்நத நிலையை நீ அடைந்திருப்பாய்!" என்றார் வித்யாசங்கர்.

சீதா தலையைக் குனிந்து கொண்டாள்.

இரண்டு வருஷங்களுக்குப் பின்...தாய் நாட்டில் காலடி எடுத்து வைத்த வித்யாசங்கர் சென்னையை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். செய்தித்தாள் ஒன்று அவர் கையில் விரித்திருந்தது. படித்துக் கொண்டே வந்தவர் சட்டென்று "ரவி, இந்தச் செய்தியைப் பார்!" என்றார்.

நான் ஆவலோடு வாங்கிப் பார்த்தேன். என் கண்கள் மலர்ந்தன. 'யாரோ ஒரு பெண்மணி கணவனிடம் விவாகரத்து கோரி இருந்தாளாம். அப்பேர்ப்பட்டவள் 'தியாக சிகரத்தை'ப் பார்த்துவிட்டு நேரே கணவனிடம் ஓடிச் சென்று அவன் கால்களில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டு மனம் திருந்தினளாம்.'

"ரவி! ஒரு முக்கியமான விஷயம் சொல்கிறேன். வெறும் நடிப்பு என்றால் அதற்கு இவ்வளவு ஆத்ம பலம் எப்படி வர முடியும்? சீதாவின் உண்மையான பதிபக்தியே இத்தகைய அதிசயங்களுக்கெல்லாம் காரணம். அன்று உன்னிடம் சொல்லவில்லை. இப்போது சொல்கிறேன். சீதா ஏன் முதலில் சினிமாவில் சேர இசைந்தாள், தெரியுமா? காச நோய் கொண்ட கணவனுக்குப் பட்டணத்தில் தகுந்த சிகிச்சை அளிக்கலாம் என்ற காரணத்தால்தான். வேண்டுமானல் கலையின் அதிர்ஷ்டம் ஒரு துளி இருந்திருக்கலாம்."

வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்த பாராட்டுப் பத்திரங்கள், பரிசுப் பொருட்கள் எல்லாவற்றையும் ஒரு பெட்டியில் எடுத்துக் கொண்டு சீதாவின் பங்களாவுக்குள் போனோம், சென்னையில் கால் வைத்ததும். பங்களா பூட்டி இருந்தது! நேரே உதக மண்டலத்தை நோக்கிப் பறந்தது எங்கள் கார். சீதாவின் பழைய வீட்டுக் கதவு திறக்கப்பட்டதும் புகை மண்டலம் எங்களை வரவேற்றது! கொஞ்ச நேரத்துக் கெல்லாம் யாரோ ஒரு மனிதர் கையில் அடுப்பு ஊதும் குழலுடன் வந்தார். சீதாவின் கணவர்தான்! எங்களுக்கு ஒரே வியப்பாக இருந்தது. பழைய காச நோயெல்லாம் தீர்ந்து ஆள் சற்றுச் சதைப் பிடிப்பாக இருந்தார். எங்களை இனங் கண்டு கொண்ட மறுவினாடியே அவர் கண்கள் கலங்கின.

"சீதா எங்கே? இல்லையா?"

"என்னையா கேட்கிறீர்கள்!" என்று சொல்லி நிறுத்தினார். இமயம் எங்கள் தலையில் இடிந்து விழுவதைப் போல இருந்தது!

பிறகு அவர் சொன்னார்: "மனத்தைப் பொறுத்தவரையிலே அவள் என்னை 'விவாஹரத்து' செய்து விட்டாள். நான் பார்த்தே வருஷம் ஒன்றுக்கு மேலாகிறது. ஏதோ மாதா மாதம் பணம் மட்டும் கொடுத்து விடுகிறாள். மற்றப்படி எந்த வித பாந்தவ்யமும் இல்லை. எனக்கும் ஒரு முறை அவளைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. என் துரதிருஷ்டம் நேற்றுத்தான் அவள் 'ஹாலிவுட்' போனதாகச் செய்தி வந்தது......"

வித்யாசங்கர் கதறினார். அப்படியே சீதாவின் கணவருடைய கரத்தைப் பற்றிய வாறே, "என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்குப் பெரிய துரோகத்தைச் செய்துவிட்டேன்" என்று புலம்பினார்.

அவரைப் பலவாறு சமாதானப் படுத்தி விட்டுச் சீதாவின் கணவர் சொன்னார்:

"ஐயா! நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் வருந்துவதில் அர்த்தமில்லை. மாறாகச் சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். நான் நேற்றுத்தான் தங்கள் 'தியாக சிகர'த்தைப் பார்த்தேன். சீதா ஒன்றும் பிரமாதமாக நடித்து விட வில்லையே! முன்பு வீட்டிலே என் மேல் கொட்டிய அன்பையெல்லாம் திரையிலும் அப்படியே பிரதிபலித்திருக்கிறாள், அவ்வளவுதான்!

"இப்பொழுது இந்த வீட்டில் அந்த அன்புக்கும் தியாகத்துக்கும் இடமில்லை. அவை மறைந்து போய் விட்டன. உண்மை இருந்த இடத்திலே போலி நடிப்பு மட்டும் இனி இருக்கும். அதற்குள்ள வலிமை ரொம்பவும் பெரியதல்லவா?

"தியாகம் உண்மையானதாக மட்டும் இருந்தால் அதன் ஆதிக்கம் இந்த வீட்டுக்கு மட்டும்தான் நிலவ வேண்டி வரும். அதனால் நன்மைப் படுபவன் நான் ஒருவன் மட்டுமே. போலி நடிப்பாக இருந்தாலோ அது இந்த உலகம் முழுதும் தெரியவரும். லட்சக்கணக்கான மக்கள் பார்ப்பார்கள். மனம் உருகிக் கண்ணீர் வடிப்பார்கள். அதன் பயனாகத் திருந்தவும் செய்வார்கள்.

"அதை நினைத்துத்தான் நான் மனம் தேறி விட்டேன். உடலும் தேறிவிட்டது, பார்த்தீர்களா! இனி மேல் நான் செய்ய வேண்டியதெல்லாம் — தவம் என்று

வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்—கொஞ்சம் கொஞ்சமாக அவனை மறக்க வேண்டியதுதான்!......"

கற்சிலையாகி, வாய் மூடி மௌனியாகி நின்றோம் நாங்கள். எங்களுக்குத் துணையாகப் பாராட்டுரைகள் அடங்கிய பெட்டியும் வாய்மூடி நின்றது. இனிமேல் புறப்பட வேண்டியதுதான். என்ன நினைத்துக் கொண்டாரோ வித்தியாசங்கர், சட்டென்று 'செக் புத்தகத்தை உருவினார். ஒரு லக்ஷம் ரூபாய்க்கு எழுதி, இதழைக் கிழித்துச் சீதாவின் கணவரிடம் நீட்டினார்.

"நானே கேட்க வேண்டுமென்றிருந்தேன். தங்கள் விசாலமான இதயம் அதைப் புரிந்து கொண்டு விட்டது. ரொம்ப சந்தோஷம். ஆனால் இந்தப் பணம் எனக்கு என்னத்துக்கு? நான் சென்னையில் தங்கிச் சிகிச்சை பெற்ற க்ஷயரோக ஆஸ்பத்திரியில் ஏழைகளுக்கென்று ஒரு வார்டு இருக்கிறது. அதற்கு இந்தத் தொகையை "நிருபா"வின் பெயரால்—சீதாவின் பெயரால் அல்ல—காணிக்கையாகக் கொடுத்து விடுங்கள்!' என்றார் சீதாவின் கணவர்.

ஒரு நமஸ்காரத்தோடு மறைந்தார் அவர். கனத்துப் போன இதயத்தோடு மௌனமாக வெளியில் இறங்கி நடந்தோம்.

எங்கிருந்தோ 'பளிச்' என்று ஒரு மின்னல்! 'பட பட' வென்று இரண்டு மூன்று மழைத் தூறல்கள் விழுந்தன.

"மழை பலமாகப் பிடிக்கிறதற்குள் பங்களாவுக்குப்போய் விடுவோம்" என்றேன்.

"ஏன், கொஞ்சம் மழையில்தான் நனைவோமே! அப்படியாவது கொஞ்சம் பாவம் கரையாதா!......ரவி! இந்த உலகத்தில் ஏன் இன்னும் மழை பெய்கிறது, தெரியுமா?"—கேட்டு விட்டுப் பதிலையும் அவரே சொன்னார்:

"என்னைப்போல் நடமாடும் இவ்வுலகில், சீதாவின் கணவரைப் போன்றவர்களும் இருக்கிறார்களல்லவா? அதனால்தான்!"

நந்துவுக்கு இந்தப் பதிலைச் சொன்னால் புரியுமா, என்ன?

சீர்திருத்தக் குன்று மறைந்தது!

செட்டிநாட்டின் சீர்திருத்தச் செம்மல் காரைக்குடியின் ஜோதி திரு சொ. முருகப்பா 20-6-56ல் அமரர் ஆகிவிட்டார். நோயைப் பரிசீலிக்கச் சென்னை வந்த சமயம் அந் நோய்க்கே திடீரென இரையாகியதை எண்ணவும் மனம் நடுங்குகிறது.

நாற்பது வருஷங்களுக்கு முன், ஒரு சமூகத்தில் சீர்திருத்தப் புரட்சியை உண்டாக்குவது என்பது சாமான்யமல்ல. தேசியப் போரைவிடச் சமூகப் போர் மிகச் சிக்கலானது. "பெண்கள் மழைக்கும் வெய்யிலுக்கும் குடை பிடித்துக் கொள்ள வேண்டும்" என்று ஒரு பிரசாரம். இதற்கும் பலத்த எதிர்ப்பு. இத்தகைய சமூகத்தில் இன்று எத்தனை மாறுதல்! எத்தனை சீர்திருத்தம்!



தமிழ், சமூகம், அரசியல், கல்வி ஆகிய துறைகளில் இன்று முன்னணியில் இருக்கும் பெண்களுக்கும், வாலிபர்களுக்கும் வழிகாட்டியாக மட்டுமல்லாமல் போர்த் தளபதியாய் இருந்து பணியாற்றினார் திரு முருகப்பா. "தனவைசிய ஊழியன்", "குமரன்" ஆகிய பத்திரிகைகள் மூலமும் பிரசாரத்தினாலும் அஞ்சா நெஞ்சை உருவாக்கியவர் திரு முருகப்பா!

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு 'தனவைசியர் ஊழியர்' சங்கம் ஆரம்பித்துப் பொதுப் பணியில் இறங்கினார். ஆலயங்களில் ஆடு, கோழி பலியிடல் ஆகாது என்ற இயக்கத்துக்காகக் காரைச் சிவனடியார் திருக் கூட்டம் என்ற சங்கத்தைத் தோற்றுவித்தார். ஹிந்து மதாபிமான சங்கம், விதவா விவாகம்—கலப்புமணச் சங்கங்கள், ஹரிஜனச் சிறுவர் பள்ளி, மகளிர் இல்லம் முதலியனவும் அவர் தோற்றுவித்த சங்கங்களே.

அவருடைய சிறந்த பணியை ஹிந்து மதாபிமானச் சங்கக் கட்டடத்தின் ஒவ்வொரு செங்கல்லும் சொல்லும்.

"நாமார்க்கும் குடி அல்லோம்" என்ற வீர உணர்வே அவர் வாழ்வில் நிறைந்திருந்தது. இன்றைய நம் சமூகம் எண்ணிப் பார்க்கவும் முடியாத எத்தனையோ மாறுதல்களுக்கு இடம் கொடுக்கிறது. ஏச்சில்லை; பேச்சில்லை. எதிர்ப்பில்லை. அன்றைய நிலை அப்படியா?

சமூகத்தில் எதிர் நீச்சல் நீந்தி வெற்றி கண்டவர் வீரர் திரு முருகப்பா. அன்று மக்கள் இருந்த நிலையிலும் அவர் நா அசைந்தால் நாடு அசைந்தது. சீர்திருத்தத் தேரின் அச்சாணி அவரே. இலக்கியத் தீபத்தின் ஒளியை எல்லோரும் அனுபவிக்க, 'இராம காதை' இரு காண்டங்கள் பூர்த்தி அடைந்திருக்கின்றன.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் பொதுத் தொண்டில் இறங்கிக் கடைசி வரையில் பணியாற்றிய கர்ம வீரர். அவர் ஆத்மா சாந்தி அடைக!

காஸ்கேட் குளோரோபில்*
ஈறுகளை பலப்படுத்துகிறது
வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப் பலப்படுத்துகிறது.

வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

வேறு சாதாரண பற்பசையை விட மிகமிகத் தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொருமுறையும், சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனாமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரிய குளோரோபில்

குழந்தைகள் விரும்பும் மதுரமான சுவை. மதுரமான இனிய சுவையுள்ள கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை குழந்தைகள் கூட விரும்புவார்கள்.



குளோரோபில் டூத்பேஸ்டின் பூரண நன்மைகளைத்தரும் விசேஷ கால்கேட் சூத்திரம்!

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

CTPA/6/3

பஞ்சகோட் சிற்றரசர் வழக்கம் போல் ஸ்நானம் செய்வதற்காகத் தமது பரிவாரங்களுடன் கோவிலில் உள்ள புனித தீர்த்தத்துக்குச் சென்றார்.

அச்சமயம் அடுத்த துறையில் ஒருவர் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார். அவரைக் கண் கொட்டாமல் வெறிக்கப் பார்த்தார் சிற்றரசர். அவரும் சிற்றரசரை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

உடனே சிற்றரசர் அந்த மனிதரைத் தம் அருகில் அழைத்து வரும்படி தமது காவலாளருக்குக் கட்டளை யிட்டார்.

அந்த நபரைப் பிடித்த பொல்லாத காலம் தான் அன்று அவர் சிற்றரசரிடம் அகப்பட்டுக் கொண்டார் என்று பக்கத்திலிருந்தவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், அவர்கள் எண்ணியபடி எவ்வித விபரீதமும் ஏற்படவில்லை. அதற்கு முற்றிலும் மாறாகச் சிற்றரசர் அவருடன் அளவளாவத் தொடங்கினார்.

அவரிடம் சிற்றரசர் விசாரித்த போது, அவர் திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த அந்தணர் என்றும், அவர் வட இந்தியாவில் தீர்த்த யாத்திரை செய்து வருவதாகவும் தெரிந்தன. அவர் ஒரு வைஷ்ணவ பக்தர் என்பதைத் தெரிந்து கொண்ட சிற்றரசர் அவரைத் தமது ராஜ்யத்திலேயே தங்கும்படி வேண்டிக் கொண்டதுடன், ஸ்ரீ ராமானுஜரின் விசிஷ்டாத்வைத தத்துவத்தைத் தமக்கு உபதேசிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

அவர், தாம் அங்கு தங்குவதற்கில்லை யென்றும், ஊருக்குச் சென்று தம்முடைய இளைய சகோதரர் ரங்கராஜனை அனுப்புவதாயும் கூறி விட்டு, சிற்றரசர் கொடுத்த பரிசுகளுடன் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டார்.

அந்தணரின் வாக்குறுதிக்கு இணங்க, சில காட்களில் ரங்கராஜன் பஞ்சகோட்டுக்கு வந்து சேர்ந்தார். அவரது மூத்த சகோதரரைப் போல் அவரும் வடமொழியில் மகா நிபுணர்.

சிற்றரசரின் விருப்பப்படி ரங்கராஜன் பெரோ என்ற கிராமத்தில் வசிக்கலானார். அவரது பூஜைக்காகவும் மற்ற தர்ம காரியங்களுக்காகவும் சிற்றரசர், ரங்கராஜனுக்கு அறுபது கிராமங்களைத் தானமாக வழங்கினார்.

இச் சம்பவம் மூந்நூறு ஆண்டுகளுக்கு முன் பீகார் ராஜ்யத்தில் நிகழ்ந்ததாகும்.

அதன்பின் திருநெல்வேலி, செங்கல்பட்டு, சென்னை ஜில்லாக்களிலிருந்து ஏராளமான தமிழர்கள் பெரோ கிராமத்தில் வந்து நிரந்தரமாக வசிக்கத் தொடங்கினார்கள். அதன் பலனாக இன்று பெரோ கிராமம் பீஹார் ராஜ்யத்தில் தமிழர்கள் வாழும் தனிக் கிராமமாக விளங்கி வருகிறது!

ராஜகுரு ரங்கராஜன் வழியில் வந்த ராஜகுரு திருமலை ஜகந்நாத ஆச்சாரிய கோஸ்வாமிக்கு ஏராளமான வங்காளிகள் இன்றும் சீடர்களாக இருக்கிறார்கள். ராஜகுரு ரங்கராஜன் குடும்பத்துடன் ஆரம்பமான பெரோ கிராமத்தில் இன்று தென்னிந்திய வைஷ்ணவர்கள் அடங்கிய ஐம்பது குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களில் பலர் அந்த ராஜ்ய சர்க்காரில் முக்கியமாகக் கல்வி இலாக்காவில் உயர்ந்த உத்தியோகங்களும் வகிக்கிறார்கள்.

அவர்கள் அன்றும் இன்றும் தமிழர்களாகவே இருப்பினும், அவர்கள் அறியாமலேயே அவர்களிடையே வங்காளிகளின் சில பழக்க வழக்கங்களும் வேரூன்றி யிருக்கின்றன.

அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகள் இன்றும் பதினெட்டு முழச் சேலைகளே உடுத்திக் கொள்கிறார்கள்.

அவர்கள் ஆவணி அவிட்டம், தமிழ் வருஷப் பிறப்பு முதலிய பண்டிகைகளுடன், துர்க்கா பூஜை, காளிபூஜை முதலிய வங்காளிப் பண்டிகைகளையும் கொண்டாடுகிறார்கள்.

விந்திய மலைத் தொடரில் உள்ள பாஞ்செட் மலைப் பிரதேசத்தில் இருக்கும் மேற்படி







விந்தைக் கிராமத்தைப் பற்றி டி. வி. ஸி. பிரிவைச் சேர்ந்த மெய்தான் அணைக்கட்டு நிர்வாக இஞ்ஜினீர் ஸ்ரீ பார்த்தசாரதி எங்களுக்கு மிகுந்த உற்சாகத்துடன் விவரித்துக் கூறினர்.

* * *

இப்போது பீஹார் ராஜ்ய எல்லையைத் தாண்டி ஒரிஸ்ஸாவுக்குச் செல்லுவோம்.

ஒரிஸ்ஸாவில் பல நூற்றாண்டுகளாக இரண்டு மாபெரும் பூதங்கள் அட்டகாசம் செய்து வந்துள்ளன. அந்தப் பூதங்களிடமிருந்து தப்புவதற்கு அந்த ராஜ்ய மக்களுக்கு இதுவரையில் வழியில்லாமல் இருந்தது. எனவே, அவர்கள் விதி விட்ட வழி விடட்டும் என்று வாளா விருப்பதைத் தவிர வேறு வழியிராமற் போயிற்று.

அந்தப் பூதங்களில் ஒன்றின் பெயர் வெள்ளம்; மற்றொன்றின் பெயர் பஞ்சம்.


பல ஆண்டுகளுக்கு முன் ஒரிஸ்ஸாவுக்கு விஜயம் செய்த உலகப் பிரசித்தி பெற்ற இஞ்ஜினீர் ஒருவர், இந்தியாவில் உள்ள மற்ற இடங்களுக்கும் ஒரிஸ்ஸாவுக்கும் ஒரு பெரிய வேற்றுமை இருக்கிறது என்றாராம். அதாவது மற்ற இடங்களில் வெள்ளத்தைத் தடுப்பதற்கும், தண்ணீர்ப் பஞ்சத்தை ஒழிப்பதற்கும் வழி வகை செய்ய இடமிருக்கிறது. ஆனால், ஒரிஸ்ஸாவில் அத்தகைய பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்வதற்கு வசதியில்லை என்று கையை விரித்து விட்டார். ஒரிஸ்ஸாவில் உள்ள மகா நதியை அவர் மகா பயங்கர நதி என்று வர்ணித்துப் போய் விட்டார்.

மகாநதியின் வெள்ளத்துக்கு இதுவரை பலியானவர்களின் தொகை லட்சக்கணக்கில் இருக்கும். ஆடு மாடுகளுக்கும், பயிர் பச்சைகளுக்கும், வீடு வாசல்களுக்கும் ஏற்பட்ட சேதம் கணக்கில் அடங்காது.


கற்பனைக்கு உட்படாத அவ்வளவு மகத்தான கஷ்ட நஷ்டங்களை உண்டாக்கி வந்த பூதங்களைக் கட்டுப்படுத்த சுதந்திர பாரதத்தின் அதிகாரிகள் இப்போது வழி கண்டுபிடித்து விட்டார்கள்.

அந்தப் பூதங்களின் அட்டகாசத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவே மாபெரும் ஹிராகுட் அணைக்கட்டு எழும்பி வருகிறது.

எங்கள் யாத்திரையில் இடம் பெற்ற ஹிராகுட் நகரை நாங்கள் மறக்கவே முடியாது. மலையுச்சி, மணல் மேடு, கிடுகிடு பள்ளம், பேரிரைச்சல், பெரும் புழுதி மண்டலம், சிமெண்டு மலை, இரும்புக்குன்று இவற்றை ஏககாலத்தில் கற்பனை செய்து கொள்ளுங்கள். இவையெல்லாம் சேர்ந்துதான் 'ஹிராகுட்' ஆக உருவாகி யிருக்கிறது!







சித்தரஞ்சனில் உற்பத்தியான புதிய இஞ்ஜினில் பிரயாணம் செய்த பத்திரிகைப் பிரதிநிதிகளைப் படத்தில் காணலாம்.

அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தியுமே ஹீராகுட் அணைக்கட்டுகளை நிர்மாணித்திருக்கிறார்கள்.

ஹீராகுட் ஆராய்ச்சி நிலையத்தைப் பற்றி இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டியது அவசியம். மேற்படி ஆராய்ச்சி நிலையம் தான் ஹீராகுட் அணைக்கட்டு நிர்மாணத்தின் உயிர்நாடியாகும். அந்த ஆராய்ச்சி நிலையத்தில்தான் சிமென்ட், மணல் இவற்றின் தரத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள். ஹீராகுட் அணைக்கட்டில் பெரும் பகுதி மண் அணைக்கட்டுஆகும். அதற்குத் தகுந்த மண் எங்கே இருக்கிறது! அதற்கான சிமென்ட் எங்கிருந்து கிடைக்கும்! இரண்டையும் எந்த அளவில் கலக்க வேண்டும்!. இவைபோன்ற பல விஷயங்களை ஆராய்ச்சி செய்கிறார்கள். பல மைல்களுக்கு அப்பாலிருந்து அத்தகைய மண்ணை லாரி லாரியாகக் கொண்டு வருகிறார்கள். சில மருந்துகளைக் கலந்தும் மண்ணின் ரகத்தைத் தங்களுடைய தேவைக்கு உற்றவாறு மாற்றிக் கொள்கிறார்கள். இரண்டு சொட்டு மருந்து ஒரு கூடை மணலின் தன்மையையே அடியோடு மாற்றி விடுகிறதென்றால், அந்த மருந்தின் சக்தியைக் கற்பனை செய்து பாருங்கள்!

ஹீராகுட் அணைக்கட்டு நெடுக இப்போது மணல் ரஸ்தாதான் இருக்கிறது. அதன் வழியாக நாங்கள் ஜீப் மோட்டார்களில் சென்றோம். வழி முழுதும் புழுதி மண்டலத்தினால் நாங்கள் திக்கு முக்காடும்படி நேர்ந்துவிட்டது. நாங்கள் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்றபோது, எங்களில் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. புழுதி ஸ்நானத்தினால் எல்லோரும் மலை ஜாதியாரைப் போல் காட்சி யளித்தனர்!

ஜீப்களை ஓட்டிக் கொண்டு, அணைக்கட்டு நிர்மாண சம்பந்தமான விவரங்களை எங்களுக்குக் கூறிவந்த இஞ்சினீர்கள், அந்தப் புழுதி மண்டலத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் வந்ததைப் பார்க்க எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை தினசரி புழுதி ஸ்நானம் செய்து வழக்கமாகி விட்டதால், அவர்கள் அதை இலட்சியம் செய்யவில்லை போலும். அந்தப் புழுதி மண்டலத்தை இப்போது நினைத்தாலும் திகில் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட புழுதியில் மாதக் கணக்கிலும் வருஷக் கணக்கிலும் வேலை செய்யும் பொறி இயல் நிபுணர்கள், பதினாயிரக்கணக்கான தொழிலாளர்கள் முதலியோரின் தியாகத்தை, உழைப்பின் உயர்வை என்னவென்று கூறுவது!

* * *

அங்கு வேலை செய்யும் 30,000 தொழிலாளர்களில் பதினாயிரம் பேருக்குமேல் தமிழர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அந்த அணைக்கட்டு வேலைகள் அநேகமாகப் பூர்த்தி

ஹீராகுட் என்ற மிகச் சிறிய கிராமம் இன்று இவ்வளவு பிரசித்தி பெற்று விளங்குவதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்கலாம்.

ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் மகாநதி, ப்ரம்மனி, வைதரணி என மூன்று பெரிய நதிகள் இருக்கின்றன. இவற்றில் 533 மைல் நீளமுள்ள மகாநதிதான் பெரியது. அது மத்தியப் பிரதேசத்தில் உற்பத்தியாகி, ஒரிஸ்ஸாவில் உள்ள சாம்பல்பூர் ஜில்லாவில் பிரவேசிக்கிறது. ஒரிஸ்ஸா வழியாக இறுதியில் வங்காளக் குடாக்கடலைப் போய் அடைகிறது.

அந்த நதியில் மழை காலத்தில் வெள்ளம் கரை புரண்டோடிச் சேதம் உண்டாக்குவதும், கோடை காலத்தில் வறண்டு விடுவதும் வழக்கமாக இருந்து வந்தது. எனவே, ஒருபுறம் வெள்ளத்தினாலும் மற்றொரு புறம் தண்ணீர்ப் பஞ்சத்தினாலும் மக்கள் மடிந்து வந்தனர். 1865 ல் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். அதற்கு அடுத்த வருஷத்திலேயே, அதாவது 1866–ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பயிர்களும் சொத்துக்களும் நாசமாகி மக்கள் சொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாயினர். 1937ம் வருஷத்திலும் அங்கு பெரும் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் பரிதவித்தனர். சென்ற வருஷம் உண்டான வெள்ளத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

எனவே, அடிக்கடி ஏற்படும் மேற்படி வெள்ள விபத்தைத் தடுக்கவும், கோடை காலத்தில் தண்ணீர்ப் பஞ்சத்தை ஒழிக்கவும், நீர்ப்பாசனம், மின்சார சக்தி உற்பத்திக்கு உதவியாகவும் மகாநதிக்கு அணைகள் கட்டும் திட்டத்தைக் கைக்கொண்டனர். எழுபது கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் அந்த அணைக்கட்டுகள் அநேகமாக முடிவடைந்து விட்டன. இவ்வருஷத்துக்குள் அவை முற்றிலும் பூர்த்தி அடைந்து விடும்.

அந்த அணைக்கட்டுகளின் நீளம் சுமார் 25 மைல் எனில், அவை எவ்வளவு பிரம்மாண்டமானவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். பதினாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீர்ணம் உள்ள காடுகளை அழித்தும், நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குக் கோடிக் கணக்கில் ஈடுத்தொகை கொடுத்து

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற **ப்ரில்க்ரீம்** உபயோகியுங்கள்



வெற்றிபெற்ற மற்றவர்களைப்போல் விஜு மான்காடும் ப்ரில்க்ரீம் உபயோகிக்கிறார்



* ப்ரில்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணெய்கள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சோபிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரில்க்ரீமை உங்கள் தலையில் தினந்தோறும் அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத்துடனும் வைக்கிறது.

* எந்தளவு ப்ரில்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரில்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரில்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறார்கள்

BRL. 2968 (a) Tam

யாகி விட்டதால், இப்போது மேற்படி தொழிலாளர்களின் தொகை குறைந்திருக்கலாம்.

ஹீராகுட் அணைக்கட்டு நிபுணர்களைப்பற்றித் தமிழ் நாட்டினர் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். மேற்படி அணைக்கட்டுப் பிரதம இஞ்சினீர், ஸ்ரீ எம். எஸ். திருமலை ஐயங்கார் என்ற தமிழ்ப் பிரமுகர்தான். இதரப் பொறியியல் நிபுணர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்தான். ஹீராகுட் ஆராய்ச்சி நிலையத்தின் அதிபரான ஸ்ரீ பாலசுப்பிரமணியத்தை ஆராய்ச்சித் துறையில் ஒரு மேதை என்றே சொல்ல வேண்டும். இவர்களுடைய மேதையும், மேற்படி அணைக்கட்டில் வேலைசெய்யும் பதினாயிரம் தமிழர்களுடைய உழைப்பும் ஒரு காலத்தில் தமிழ் நாட்டுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் என்ன சந்தேகம்!

சுதந்திர பாரத சர்க்கார் ஈடுபட்டுள்ள நூற்றைம்பது பெரிய அணைக்கட்டுகளில் ஆறு மிக முக்கியமானவை. அந்த ஆறு அதி முக்கிய அணைக்கட்டுகளில் ஹீராகுட் அணைக்கட்டும் ஒன்று.

ஹீராகுட் அணைக்கட்டிலிருந்து 500 மைல் தூரத்துக்குக் கால்வாய்களும் வெட்டி வருகிறார்கள். அதன் பலனாக 25 லட்சம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அபிலாஷை பூர்த்தியாக இறைவன் அருள்புரிவாராக என்று பிரார்த்தித்துக் கொண்டே சாம்பல்பூரிலிருந்து கல்கத்தாவுக்குப் புறப்பட்டோம்.

* * *

கல்கத்தாவுக்குச் சென்ற பின் நாங்கள் மின்னல் வேகத்தில் பல ஸ்தாபனங்களைப் பார்வையிட வேண்டியிருந்தது.

முதலில் டெக்ஸ்மாகோ என்ற நெசவு யந்திர உற்பத்தித் தொழிற்சாலைக்குச் சென்றோம். நெசவுத் தொழிற்சாலைக்கு வேண்டிய பல யந்திரங்கள் மேற்படி தொழிற்சாலையில் உற்பத்தியாகிப் பாரத நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. 1941-லிருந்து இன்று வரையில் 5000 நூற்கும் யந்திரங்கள் அத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. அதில் நெசவுத் தொழில் யந்திர நிபுணர்களைத் தவிர 2500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

நாங்கள் பார்வையிட்ட மற்றத் தொழிற்சாலைகளுள் கணிதக் கருவிகள் தொழிற்சாலையும் நாணய உற்பத்திசாலையும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை.

கணிதக் கருவித் தொழிற்சாலையில் தூர திருஷ்டிக் கண்ணாடிகள், பூதக் கண்ணாடிகள், திசை காட்டிகள், தர்மா மீட்டர்கள், டிராப்ட் யந்திரங்கள், ஸ்கேல்கள், முதலிய கணித, விஞ்ஞான சம்பந்தமான பலவித நுட்பமான கருவி வகைகளை உற்பத்தி செய்து வருகிறார்கள்.

1949-50-ல் பன்னிரண்டு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அத்தகைய கருவிகளை உற்பத்தி செய்தார்கள். ஆனால் 1954-55-ல் இருபத்திரண்டு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நுட்ப யந்திர சாதனங்களை உற்பத்தி செய்துள்ளனர். அதில் தற்போது ஆயிரம் சிப்பந்திகள் வேலை செய்கிறார்கள்.



சென்னை இந்தியன் பாங்கி காரியதரிசி ஸ்ரீ என். கோபாலய்யர் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி ஜி. பாலகிருஷ்ணனுக்கும் தஞ்சாவூர் ஜில்லா காமாக்ஷிபுரம் மிராசுதார் ஸ்ரீ என். சுப்பிரமணிய ஐயர் அவர்களின் குமாரி சௌ. மங்களத்துக்கும் சென்ற ஜூன் மீ 17-ந் தேதி காமாக்ஷிபுரத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

வாழ்க, மங்களம்—பாலகிருஷ்ணன்

மேற்படி தொழிற்சாலை வருஷத்துக்கு வருஷம் அவ்விதம் அபிவிருத்தியாவதை முன்னிட்டு, கல்கத்தாவுக்கு ஆறு மைல் தூரத்தில் உள்ள யாதவபுரி என்ற இடத்தில் எட்டு ஏக்கர்கள் நிலம் வாங்கிக் கட்டடம் கட்டி வருகிறார்கள். அத் தொழிற்சாலை 1956-57-ல் புதிய கட்டடத்துக்கு மாற்றப்படலாம்.

* * *

அலிபூரில் அமைக்கப்பட்டுள்ள நாணய உற்பத்திசாலையைப் பார்த்தபோது, எங்களுக்கு ஏற்பட்ட பிரமிப்பை விவரிக்க முடியாது. ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், அரைக்கால் ரூபாய், ஒரு அணா, அரை அணா, காலணா முதலிய, கரன்ஸி நோட்டுகளைத் தவிர மற்ற எல்லா நாணயங்களும் அந்தத் தொழிற்சாலையில்தான் உற்பத்தியாகின்றன.

அந்த நாணயங்களை உற்பத்தி செய்வதற்காக நூற்றுக்கணக்கான யந்திரங்களும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களும் ஏராளமான நிபுணர்களும் தினசரி வேலை செய்ய வேண்டியிருக்கிறது! தினந்தோறும் எவ்வளவு உலோகம் உருகித் தண்ணீர்போல் ஓடவேண்டியிருக்கிறது, தெரியுமா!

நிக்கல் பாளங்கள் பலவிதமாக உருமாறிக் கடைசியில் ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், இரண்டணா, ஒரு அணா, அரை அணா, காலணாவாக அந்தந்த யந்திரங்களிலிருந்து 'டக் டக்' என்று விழும் விந்தைக் காட்சியைப் பார்த்துக்கொண்டே யிருக்கலாம். அந்த நாணயங்கள் விழும் சப்தத்தை உற்றுக் கேட்டபோது, "உங்கள் வாழ்வு எங்கள் கையில்!" என்று அவை சொல்லுவது போலிருந்தன.

சர்க்கார் பரிசாகக் கொடுக்கும் சகல தங்க வெள்ளிப் பதக்கங்களும்கூட அத் தொழிற்சாலையில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. பாரதரத்னம், பத்ம விபூஷணம் போன்ற பதக்கங்களும் அங்குதான் உற்பத்தி செய்கிறார்கள்.



எங்கப்பா எவ்வளவு நல்லவர்!
எவ்வளவு பாக்யசாலி குழந்தை! அவள் தகப்பனார் எப்பொழுதும் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் வாங்கி வருகிறார். என்ன மென்மை! என்ன குளுமை! அந்தக் குழந்தையின் சருமத்திற்கு எவ்வளவு இனிமையானது!
Johnson's
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
இலவசம்: குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு வேண்டிய அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. சுலபமாகப்படித்து புரிந்து கொள்ளுமபடியான இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ளது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
பி.ஓ. பாக்ஸ் 1976, 20R
பம்பாய்
Johnson's
BABY
POWDER

செல்லாத நோட்டு

"நல்லமுத்து! இன்று வெள்ளிக்கிழமை யல்லவா?" என்று திடீரென்று வினவினர், பத்திரிகையில் கண்களை ஓட்டிக் கொண்டிருந்த பக்கிரிசாமிப் பிள்ளை.

"ஆமாம், எசமான்! மாரியாத்தாவுக்கு இன்னிக்கு அர்ச்சனை செய்யப் போகணும் இல்லே?" என்று பதிலுக்குக் கேட்டவாறு தன் முதலாளி அமர்ந்திருந்த சோபாவுக்கு எதிரில் பணிவுடன் வந்துநின்றான் நல்லமுத்து.

இருபத்தைந்து வயது நிரம்பிய அந்த இளம் காளையை நிமிர்ந்து நோக்கிய பக்கிரிசாமிப் பிள்ளை, "இன்று என் சிநேகிதர் மகனுக்குக் கல்யாணம். நாங்கள் எல்லோரும் அங்கே போகிறோம். ஆகையால் நீ மட்டும் போய் அம்பிகைக்கு அர்ச்சனை செய்து விட்டு வந்து விடு" என்று சொல்லிக் கொண்டே பத்திரிகையை எதிரிலிருந்த மேஜை மீது வைத்து விட்டு, தம் சட்டைப் பையிலிருந்து மணி பர்ஸை வெளியே எடுத்தார்.

"உனக்குப் பஸ் செலவு, அர்ச்சனைச் செலவு எல்லாம் சேர்த்து எவ்வளவு வேண்டும்?" என்று நல்லமுத்துவிடம் வினவினர்.

ஒரு நிமிஷம் தலையைச் சொறிந்தவாறு கணக்குப் போட்டுப் பார்த்தான் நல்லமுத்து. "தேங்காய், பழம், பூ வகையறாவுக்கு ஒரு ரூபாய்; அர்ச்சனைச் சீட்டு, பூசாரிக்கு இனும் எல்லாம் சேர்த்தால் ஒரு ரூபாய்; எனக்குப் பஸ் செலவு எட்டணா ஆகும்; ஆக ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு, ரெண்டும் ஒரு அரையும் ரெண்டரை! ஆமாம், ரெண்டரை ரூபாய் ஆகும், எசமான்!"

"சரி, இந்தா, ஏழு ரூபாய் வைத்துக் கொள். வரும் போது ஒரு டஜன் ஆப்பிள் வாங்கிக் கொண்டு வந்து விடு" என்று கூறிய வண்ணம் மணிபர்ஸிலிருந்து ஒரு அழுக்கடைந்த ஐந்து ரூபாய் நோட்டையும் இரு புது ஒரு ரூபாய் நோட்டுகளையும் எடுத்து அவனிடம் கொடுத்தார் பக்கிரிசாமிப் பிள்ளை.

அந்த நோட்டுகளை மடித்துப் பையில் வைத்துக் கொண்ட நல்லமுத்து, "அப்போ, நான் போயிட்டு வர்றேன், எசமான்!" என்று சொல்லி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

* * *

மாலை ஐந்து மணி இருக்கும். அன்று வெள்ளிக்கிழமை யானதால் மாரியம்மன் கோயிலில் ஏராளமான கூட்டம். ஆண்களை விட, குழந்தை குட்டிகளுடன் பிரார்த்தனை செய்ய வந்திருந்த பெண்டிர் கூட்டமே அதிகமாக இருந்தது. கோயிலுக்கு அருகே பஸ்ஸிலிருந்து இறங்கிய நல்லமுத்து, எதிரே இருந்த தெப்பக் குளத்தில் கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டான். தேங்காய், பழம், பூ முதலிய பூஜைப்பொருள்களை வாங்கிக் கொண்டு அம்பிகையின் சன்னதி அடைந்தான்.

சாம்பிராணிப் புகையும் கற்பூர தூபமும் கலந்து அங்கே ஒரு திவ்யமான மணம் வீசியது. மாரியம்மனை மனமுருக வணங்கி நின்றான் நல்லமுத்து. அர்ச்சனை முடிந்தது.

தேங்காய், பழம் முதலியவை அடங்கிய பையைக் கையில் எடுத்துக் கொண்டு பஸ் நிற்கும் இடத்தை நோக்கி நடந்தான். அங்கு போய்ப் புறப்படத் தயாராக இருந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

அவன் ஆசனத்தில் அமர்வதற்குள், "டிக்கெட்!" என்று குரல் கொடுத்துக் கையை நீட்டினன் கண்டக்டர். நல்லமுத்து தன் கையிலிருந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் கொடுத்தான். அதை ஒரு விநாடி உற்றுப் பார்த்த கண்டக்டர், முகத்தைச் சுளித்துக் கொண்டு, "இந்தாப்பா! இந்த நோட்டு செல்லாது!" என்று திருப்பிக் கொடுத்தான்.

"என்ன! செல்லாதா! ஏன்?" என்று திடுக்கிட்டு வினவினன் நல்லமுத்து.

"நல்லா கண்ணைத் திறந்து பாரப்பா! அந்த நோட்டிலே எவ்வளவு அழுக்கு பட்டிருக்கு? அந்த ஓரத்திலே பார்த்தியா என்னைக் கறை? இதை எவனும் வாங்கிக் கொள்ள மாட்டான்! வேறே நோட்டிருந்தால் கொடு!" என்றான் கண்டக்டர்.

"வேறே காசு இல்லீங்களே!" என்றான் நல்லமுத்து பரிதாபகரமாக.

"ஹோல்டான்!"

உடனே பஸ் நின்றது. "உம்! கீழே இறங்கு, அப்பா!" என்று நல்லமுத்துவுக்கு உத்தர விட்டான் அந்தக் கண்டக்டர் எரிச்சலுடன். மனவருத்தமும் அவமானமும் முகத்தில் பிரதிபலிக்கப் பஸ்ஸிலிருந்து இறங்கினன் நல்லமுத்து. மறுகணம் அந்தப் பஸ் வேகமாகப் புறப்பட்டுச் சென்றது. மேல் திசையில் அது மறையும் வரை திகைப்புடன் அதையே பார்த்துக் கொண்டிருந்த நல்லமுத்து, மேற்கொண்டு செய்வதென்ன என்று யோசித்தான். எப்படியாவது அந்த ஐந்து ரூபாய் நோட்டை மாற்றிவிடுவது என்று தீர்மானித்தான். உடனே மீண்டும் மாரியம்மன் கோயிலை நோக்கி நடந்தான்.

கோவிலுக்கு அருகே ஒரு கிழவி மாம்பழம் விற்றுக் கொண்டிருந்தாள். கூடையில் நான்கு மாம்பழங்களே எஞ்சியிருந்தன. அன்று அந்தக் கிழவிக்கு நல்ல வியாபாரம். முகத்தில் மகிழ்ச்சி பொங்க அவள்





பழம் விற்ற பணத்தை எண்ணிக் கொண்டிருந்தாள்.

அவளைச் சமீபித்த நல்லமுத்து, "ஏன் பாட்டி, பழம் என்ன விலை?" என்று கேட்டுக் கொண்டே ஒரு பழத்தை எடுத்து முகர்ந்து பார்த்தான்.

"கடைசி வியாபாரம், ஒரே விலை சொல்றேன். இந்த நாலு பழத்துக்கும் அஞ்சணா கொடுத்திடுங்க!" என்றாள் அந்தக் கிழவி.

"என்ன! அஞ்சணாவா?" என்று சற்றுத் தயங்குபவன் போலப் பாசாங்கு செய்தான் நல்லமுத்து.

"டஜன் ரெண்டரை ரூபாய்க்கு வித்த பழமுங்க!" என்றாள் கிழவி.

"சரி! இந்தா, அஞ்சணா போகப் பாக்கி சில்லறை கொடு!" என்று கூறிக்கொண்டே பையிலிருந்த அந்த அழுக்கு நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.

கிழவி அதை இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்துவிட்டு, "ஏன் சாமி! இந்த நோட்டு செல்லுங்களா? ஒரே அழுக்கா யிருக்கே!" என்று கேட்டாள்.



"நல்ல கேள்வி கேட்டே பாட்டி! இந்த நோட்டா செல்லாது? இதைவிடப் படு அழுக்கான நோட்டெல்லாம் செலாவணி ஆகுது. நீ என்னடான்னா, இது செல்லுமா என்று கேக்கறியே!" என்று சற்று விறைப்பாகப் பதிலளித்தான் நல்லமுத்து.

"சரி! உங்களை நம்பி வாங்கிக்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே அதைத் தன் இடுப்பிலிருந்த ஒரு துணிப் பையில் வைத்துக் கொண்டாள். பழத்துக்கான ஐந்தணா போகப் பாக்கியை நல்லமுத்துவிடம் கொடுத்தாள்.

கை நிறையக் கிழவி கொடுத்த சில்லறை நாணயங்களைச் சரியாகக் கூட எண்ணிப் பார்க்காமல் பையில் போட்டுக் கொண்டு பஸ் ஸ்டாப்புக்கு விரைந்தான் நல்லமுத்து. எப்போது பஸ் வரும் என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தான். தூரத்தில் அந்தப் பழக்காரக் கிழவி கையில் வெறுங் கூடையுடன் வருவது தெரிந்ததும் அவன் இதயம் 'திக், திக்' என்று பலமாக அடித்துக் கொண்டது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தானே செய்யும்?

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே அக் கிழவி பஸ் ஸ்டாப்பை அடைவதற்கும் ஒரு பஸ் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

நல்லமுத்து அவசரம் அவசரமாக அதில் ஏறிக் கொண்டான். பழக்காரியும் இன்னொரு நடுத்தர வயது மாதும் அவனுக்கு எதிரே யிருந்த ஆசனத்தில் வந்து அமர்ந்தனர். நல்லமுத்து முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். பஸ் புறப்பட்டது.

பழக்காரக் கிழவியும் அவளது அருகில் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணும் பரஸ்பரம் க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டிருந்தனர்.

"ஏன், பாட்டி! உன் மகன் இப்போ என்ன செய்துக்கிட்டிருக்கான்?"

"அவனுக்கு ஒரு வாரமா உடம்பு சுகமில்லே, செல்லம்! படுத்த படுக்கையாயிருக்கான். டாக்டர் ஏதோ ஒரு காய்ச்சல்னு சொன்னார். இப்போகூட அவனுக்கு மருந்து வாங்கிக்கிட்டுப் போகணும்! ஒரு ஊசி மருந்தும் பில்லையும்னு டாக்டர் சொன்னார். ஆறு ரூபாய் ஆகுமாம்!"

"அடி, அம்மாடி! ஆறு ரூபாயா?"

"ஆமா! இன்னிக்கு மாரியாத்தா தயவிலே பழம் எல்லாம் வித்துப் போச்சு. ஆறு ரூபாய் எட்டணா கிடைச்சிருக்கு. மருந்து வாங்கிட்டுச் சீக்கிரமா வீடுபோய்ச் சேரணும்! என் மனசெல்லாம் அந்தப் பிள்ளை மேலே தான் இருக்கு! அவன் உடம்பு இப்போ எப்படியிருக்கோ?" என்றாள் கிழவி வருத்தம் கலந்த குரலில்.

அவர்கள் சம்பாஷணையை ஒரு வார்த்தை விடாமல் கேட்டுக் கொண்டிருந்த நல்லமுத்துவின் மனம் குழம்பியது. 'உடல்நலமில்லாத மகனுக்கு மருந்து வாங்க அவள் பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தில் செல்லாத நோட்டைக் கொடுத்து ஐந்து ரூபாயைப் பறித்துக் கொண்டு விட்டேனே! மருந்துக் கடையில் அது செல்லாத நோட்டு என்ற உண்மையை அறிந்தால் அவள் மனம் எப்படித் துடிக்கும்? எப்படிப் பதறுவாள்?' என்று எண்ணமிட்டு அவன் வருந்தினான்.

கிழவியிடம் உண்மையைச் சொல்லி, இருக்கும் பணத்தை அவளிடம் திருப்பிக்கொடுத்து விடலாமா என்று நினைத்தான். ஆனால் அவள் தான் செய்த குற்றத்தை மன்னிக்காமல் ரகளை செய்து மானத்தை வாங்கிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் அவனைக் கவ்விக் கொண்டது. இருதலைக் கொள்ளி எறும்பு போலச் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தான் நல்லமுத்து.

பஸ் கீழ வாசலில் நின்றது. "நான் வரட்டுமா, செல்லம்!" என்று கேட்டுக் கொண்டே ஆசனத்தை விட்டு எழுந்திருந்தாள் கிழவி.

"ஆமா, இதைக் கேக்க மறந்துவிட்டேனே? இப்போ நீங்க எங்கே குடியிருக்கீங்க?" என்று கேட்டாள் செல்லம்.

"பழைய குசவபாளையம் ரோட்டிலேயே ஒரு மளிகைக் கடை இருக்குதுல்லே? அதுக்கடுத்த தெருவிலே ஒரு புளியமரம் இருக்கு. அதுக்கடுத்த குடிசைதான். நாளைக்கு வீட்டுப் பக்கம் வாயேன்...." என்று கிழவி

முடிப்பதற்குள், ''ஏ கிழவி, இறங்கறதுன்னு சீக்கிரம் இறங்கு! வழவழன்னு பேசிக்கிட்டு நிக்கிறியே. உம்!'' என்று அவளை அதட்டினான் பஸ் கண்டக்டர்.

பஸ் புறப்பட்டது. தள்ளாடிய வண்ணம் நடந்து சென்றுகொண்டிருந்த அந்தப் பழக்காரியின் உருவம் மறையும் வரை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான் நல்லமுத்து. அவன் மனச்சாட்சி அவனை வதைத்தது. பெருங்குற்றம் செய்தவனைப் போல அவன் உள்ளம் கலங்கியது.

*　　　*　　　*

முகத்தில் தெம்பு இல்லாமல் தளர்ந்த நடையுடன் பங்களாவில் பிரவேசித்த நல்லமுத்துவைக் கண்டு பக்கிரிசாமிப்பிள்ளை வியப்படைந்தார்.

தனக்கு எதிரே இருந்த பெரிய மேஜை மீது தேங்காய், பழம் முதலிய பூஜைப் பொருள்களையும், ஆப்பிள் பழங்களையும், மாம்பழங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்து வைத்த நல்லமுத்துவைக் கூர்ந்து கவனித்த அவர், ''நல்லமுத்து! ஏன் ஒரு மாதிரியா இருக்கே? பணம் ஏதாவது தவறி விட்டதா?'' என்று வினவினார்.

''ஒன்றுமில்லே, எசமான்!'' என்று கஷ்டப்பட்டுச் சிரிக்க முயன்றான் நல்லமுத்து.

''ஆமாம், நான் ஆப்பிள் பழத்தைத் தானே வாங்கச் சொன்னேன்? மாம்பழங்களையும் ஏன் வாங்கினாய்?''

''அஞ்சு ரூபா நோட்டுக்குச் சில்லறை கிடைக்கல்லே. அதனாலே அஞ்சணாவுக்கு அதை வாங்கினேன்!'' என்றான் நல்லமுத்து மென்று விழுங்கிக் கொண்டே.

''சரி, பரவாயில்லே. மிச்சம் உங்கிட்டே எவ்வளவு இருக்கு?''

''மூன்றணா இருக்குதுங்க!'' என்று கூறிய நல்லமுத்து, அதை எடுத்துக் கொடுக்கப் பையில் கையைச் செலுத்தினான்.

''அதை நீயே வைத்துக் கொள். இப்போ உனக்கு வேலை எதுவுமில்லே. நீ வீட்டுக்குப் போய்க் காலையில் வா'' என்று சொல்லி விட்டு எழுந்தார் பக்கிரிசாமிப் பிள்ளை.

*　　　*　　　*

''பசி இல்லையா! ஏண்டா? மாரியாத்தா கோயிலிலே ஏதாவது பலமா பிரசாதம் கொடுத்தாங்களா?''


''இல்லேம்மா. எனக்குப் பசிக்க வில்லே. தொந்தரவு செய்யாதே'' என்று கெஞ்சும் குரலில் கூறிய நல்லமுத்து, அந்தச் சிறு வீட்டின் ஒரு மூலையில் கிடந்த பாயையும் தலையணையையும் எடுத்துக் கொண்டு வாசல் திண்ணைக்குப் போனான்.

தூக்கம் கொள்ளாமல் இப்படியும் அப்படியும் புரண்டு கொண்டிருந்தான் நல்லமுத்து. திடீரென்று ஒரு குரல் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக, தலைவிரி கோலமாக அவன் அருகில் நின்று கொண்டிருந்தாள் அந்தப் பழக்காரக் கிழவி.

''அட, பாவி! செல்லாத நோட்டைக் கொடுத்து ஏமாற்றி விட்டாயே! நான் நாள் பூராவும் வெய்யிலில் திரிந்து பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தைப் பிடுங்கிக் கொண்டாயே! என் அருமை மகனுக்கு மருந்து வாங்க வைத்திருந்த பணத்தைப் பறித்துக் கொண்டாயே! அதற்கு நான்தானடா அகப்பட்டேன்? நீ கொடுத்த செல்லாத நோட்டை மருந்துக் கடைக்காரர் திருப்பிக் கொடுத்து விட்டார். என்னிடம் வேறு பணமும் இல்லே. மனசு துடிக்க வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் என் மகன் உயிருக்கு யமனோடு போராடிக் கொண்டிருந்தான். டாக்டரிடம் போய்க் கதறியதில் அந்த மருந்து இல்லாவிட்டால் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லி விட்டார். கடைசியில் நடந்ததென்ன? என் மகன்...... என் குலக் கொழுந்து இறந்து விட்டான்! அவன் மரணத்துக்குக் காரணம் நீதான். நீயேதான் என் மகனைப் பலிகொண்ட பாவி. நீ நன்றாயிருப்பாயா?'' என்று அந்தக் கிழவி ஆவேசத்துடன் கதறிச் சாபமிட்டாள்.

''ஐயோ! பாட்டி! என்னை மன்னித்து விடுங்க. தெரியாத்தனமாக இந்தத் தவறைச் செய்து விட்டேன்'' என்று கதறிய வண்ணம் அந்தக் கிழவியின் கால்களைப் பற்றிக் கொண்டான் நல்லமுத்து.

''முத்து! முத்து! இதென்னடா உளறல்? ஏதாவது சொப்பனம் கண்டாயா?'' என்று தன்னை யாரோ பிடித்து உலுப்புவதை உணர்ந்த அவன் திடுக்கிட்டுப் போய்க் கண் விழித்துப் பார்த்தான்.



அப்போதுதான் நல்ல முத்துவுக்குச் சுயஉணர்வு வந்தது. தான் பிடித்துக் கொண்டிருந்தது கிழவியின் கால்களை அல்ல, அருகிலிருந்த ஒரு தூணைத்தான் என்பதை அவன் உணர்ந்தான்.

''அப்பாடா! எல்லாம் கனவுதானா!'' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்; அம்மாவிடம் விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னான்.

''இந்தா! இப்பவே போய் அந்தப் பாட்டியிடம் பணத்தைக் கொடுத்து மன்னிப்பு கேட்டுக்கிட்டுவா, ஓடு!'' என்று கூறி ஐந்து ரூபாய்களை மகனிடம் கொடுத்தாள்.

பஸ்ஸில் வரும்போது அவள் தன் இருப்பிடத்தைச் செல்லம் என்ற மாதிடம் கூறினாள் அல்லவா? அதைக் கேட்டிருந்த நல்லமுத்துவுக்குக் கிழவியின் குடிசையைக் கண்டு பிடிக்க அதிக சிரமம் ஏற்படவில்லை. நல்லமுத்துவைக் கண்டதும் ''யாரது!'' என்று கேட்டுக் கொண்டே அந்தக் கிழவி வெளியே வந்தாள்.

''உங்க மகனுக்கு இப்போ உடம்பு எப்படி இருக்கு, பாட்டி?'' என்று பதற்றத்துடன் கிழவியிடம் வினவினான் நல்லமுத்து.

''இப்போ கொஞ்சம் தேவலே! அது சரி, நீங்க யாரு?'' என்று வியப்புடன் அவனை

உற்றுப் பார்த்தாள் கிழவி. அந்த இரவு நேரத்தில் அவனை அடையாளம் தெரியவில்லை.

"நான், நான்தான்! நல்லமுத்து! இன்னிக்குச் சாயந்திரம் மாரியம்மன் கோயில் கிட்டே உங்களிடம் பழம் வாங்கல்லே!"

"எத்தனையோ ஆளுங்க வாங்கிறாங்க?"

"கடைசியிலே, அஞ்சு ரூபாய் நோட்டு கொடுத்து நாலு பழம் வாங்கின ஆள், பாட்டி!"


மறுகணம் 'அட பாவி! நீ நாசமாகப் போக! செல்லாத நோட்டைக் கொடுத்து என்னை இப்படி ஏமாற்றலாமா?' என்ற வசை மொழிகளை எதிர் பார்த்த நல்லமுத்து, கிழவி சொன்ன வார்த்தைகளைக் கேட்டுப் பெரிதும் திகைப்படைந்தான்.

"யாரு! அந்தச் சாமியா? ஏதுங்க, இந் நேரத்திலே இந்த ஏழை வீடு தேடி வந்தீங்க! வாங்க, உள்ளே!" என்று அன்புடன் அவனை அழைத்துச் சென்றாள் அந்தக் கிழவி.

குடிசையின் ஓரத்தில் பாயின்மீது நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான் ஒரு வாலிபன். அவனைப் பார்த்து நிம்மதியாக ஒரு பெருமூச்செறிந்த நல்லமுத்து, "பாட்டி! நான் கொடுத்த அஞ்சு ரூபாய் நோட்டை மருந்துக் கடையிலே வாங்கிக்கிட்டாங்களா?" என்று வியப்புடன் கிழவியை நோக்கி வினவினான்.

"வாங்கிக்கிட்டாங்களே! ஏன் கேக்கிறே!"

"ஒன்றுமில்லே பாட்டி! சும்மாத்தான் கேட்டேன். இந்தாங்க! இந்த அஞ்சு ரூபாயை எடுத்துக் கொள்ளுங்க. உங்க மக



னுக்கு இன்னும் நல்ல மருந்து வாங்கிக் கொடுத்துச் சீக்கிரம் குணப்படுத்துங்க !'' என்று பையிலிருந்த பணத்தை எடுத்துக் கிழவியிடம் நீட்டினான் நல்லமுத்து.


கருக்கம் விழுந்த கண்கள் அகல விரிந்தன. ஆச்சரியத்துடன், ''ஏன், தம்பி? எங்கள் மேல் உனக்கு ஏன் இவ்வளவு அன்பு? நீ யார்? என் மகனுக்கு உடம்பு சுகமில்லேன்னு உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேள்விகளை அடுக்கினாள் கிழவி.

''பாட்டி! நான் கொடுத்த அஞ்சு ரூபாய் நோட்டு செல்லாத நோட்டு. அதை மாற்றவே உங்களிடம் பழம் வாங்கினேன். உங்களை ஏமாற்றிய என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்றான் நல்லமுத்து தழுதழுத்த குரலில்.

''என்ன! செல்லாத நோட்டா! கடைக்காரன் எப்படி வாங்கிக் கொண்டான்?'' என்று கேட்டாள் கிழவி ஒன்றும் புரியாமல்.

''அஜாக்கிரதையாக வாங்கிப் போட்டிருப்பான்! அந்தச் செல்லாத நோட்டுக்குப் பதிலாக இந்த அஞ்சு ரூபாயை நீங்க எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்!'' என்று கண்டிப்பாகக் கூறிய நல்லமுத்து, அந்தக் கிழவியின் கையில் ஐந்து ரூபாய்களைத் திணித்து விட்டு, வேகமாக வெளியேறினான்.

செய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தம் செய்து விட்ட மன நிம்மதியுடனும் திருப்தியுடனும் அவன் வீடு நோக்கி நடந்தான்.



படித்துப் பாருங்கள்

சூழ்வினை
அல்லது சினிமாக்கலை எனக்களித்த நிலை

திரு வி. மரிய இதயம் நன்னெறியாளர்; அன்னை பிலோமினாள் சரித்திரத்தைத் திரைப் படத்தில் தீட்டப் பேரவாக் கொண்டு பெரு முயற்சி எடுத்து அதில் தோல்வியடைந்து உடைந்து போன நிலையில் இந்நூலை எழுதப் புகுந்துள்ளார். சொல்லொணாத் துன்பங்களில் தோய்ந்த, நைந்துபோன இதயத்திலின்றும் சொட்டும் வார்த்தைகளைக் கொண்டு அவர் தம் சுய சரிதையைச் சொல்கிறார்; கசப்பான உண்மைகளை அவர் தம் சுய சரிதத்தில் வெளியிட்டிருக்கிறார்; புனித பிலோமினாளின் சரித்திரத்தைத் திரைப் படமாக்கும் நோக்கத்துடன் அனேக கிறிஸ்தவப் பாதிரிமார்களை உதவி கோரி அணுகி, ஊர் ஊராக அலைந்து, அல்லல் அடைந்த அவருடைய சரித்திரம் உருக்கமாயிருக்கிறது.

சிந்தையில் அன்பும், வாக்கில் சத்தியமும், நெறியில் நேர்மையும் கொண்டு, சகலருக்கும் சன்மார்க்கத்தைக் காட்ட வேண்டிய மதிப்புக்குரிய பாதிரிமார்களில் பலர் எவ்வளவு இழிந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந் நூல் எடுத்துக் கூறுகிறது.

கிடைக்குமிடம்:— வி. மரிய இதயம், 12, பௌண்ட் ரோடு, சென்னை - 14; விலை: ரூ. 1-4-0.

மிருதங்க ஸ்வபோதினி

தாள வாத்தியங்களுக்குள் தலை சிறந்ததும் மிகத் தொன்மையானதுமான மிருதங்கம் பயில விரும்பும் சங்கீத மாணவர்களுக்கு இந் நூல் சிறந்த வழிகாட்டி. பாடங்களை முறைப்படி விளக்குவதற்குப் படங்கள் உதவியாயிருக்கின்றன. தனது ஒரு சொல்லிலேயே எல்லாரையும் நாத லயத்தில் லயிக்க வைக்கும் மிருதங்கத்தைப்பற்றி இன்னும் பல சொல்ல என்ன இருக்கிறது!

இந்நூல் ஆசிரியர்: எதிராஜன், மிருதங்க வித்தியாலயம், 6, பாலவாயல் ரோடு, அகரம், பெரம்பூர், சென்னை-11. விலை: அணா 12.

குடும்ப நிர்வாக நூல் - தையல் கலை


தையல்களுக்குத் தையல் வேலை தெரிந்திருப்பது இன்றியமையாதது. பொழுது போக்காக முதலில் கற்றுக் கொண்டால், குடும்ப நிர்வாகத்துக்கே அது உறுதுணையாக இருக்கும். குழந்தைகளுக்குத் தைக்கும் விதம் விதமான உடுப்புக்களை ஒவ்வொரு பெண்மணியும் தானே வீட்டில் தைத்துக் கொள்ளலாம். இப்புத்தகத்தில் துணிகளை வெட்டுவதிலிருந்து சித்திர விளக்கத்துடன் துவங்கி, கோட்டு, ஷர்ட் எல்லாவற்றையும் பற்றி விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. பூநூல் வேலைகளைப் பற்றிய விவரங்களும் இந்நூலில் காணப்படுகின்றன. தையல், உடுப்புத் தயாரித்தல், பூநூல் வேலை முதலியவற்றில் தேர்ச்சி பெற்றுச் சர்க்கார் பரீட்சைகளில் தேறுவதற்கு வசதியாக இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

தயாரித்தவர்: எம். வி. தேவராஜ முதலியார்: ராஜன் பில்டிங்ஸ், 16 எ, கரியப்ப முதலித் தெரு, சென்னை - 7. விலை: ரூ. 5.

கீர்த்தன ரத்னாகரம்

நாதப் பிரம்மமாகிய தியாகப் பிரம்மம் இயற்றியிருக்கும் அருமையான கீர்த்தனங்களுடன் பஞ்சரத்னக் கீர்த்தனங்கள் சிகரம் எனக்கூறும் அளவுக்கு மகிமை வாய்ந்தவை. மேற்படி கீர்த்தனைகள், ஸ்வாமிகளின் அபார கல்பனா சக்திக்கும், சங்கீதத்தின் மேன்மைக்கும், சாகித்தியத்தின் சிறப்புக்கும் இணையற்ற சான்றாகும். அத்தகைய புகழ்வாய்ந்த பஞ்சரத்னக் கீர்த்தனைகளின் பொருள் தெரிந்து பாடுவதற்கு இதுகாறும் வாய்ப்பில்லாமல் இருந்தது. இந் நூலினால் அக்குறை நீங்கிவிட்டது. ஸ்வரங்களையும் சாகித்தியத்தையும் விஸ்தாரமாகப் பிரித்தமைத்து, தமிழில் பதவுரையும், ஆங்கிலத்தில் விளக்கமும் எழுதிச் சேர்த்திருக்கிறார்.

ஸ்வரமும் விளக்கமும் இயற்றியவர்: என். ராஜகோபாலன் பி. ஏ; கிடைக்குமிடம்: ஸ்ரீ மீரா சங்கீத வித்யாலயா, 37, பிராடீஸ் ரோடு, சென்னை - 28; விலை: ரூ. 1—8—0


முறையான
உடைகள்
அல்லது
சாதாரண
உடைகள்
எதுவாயிருப்பினும்
டாடா 501 ஸ்பெஷல்
அவைகளை
சிறப்பாக
சலவை செய்கிறது
501
SPECIAL SOAP
TATA PRODUCT
சுதேசிப் பொருள்களை
வாங்கி இந்தியத் தொழில்களை
ஆதரியுங்கள்.
டாடா ஆயில் மில்ஸ்



கரூரண்டை குச்சப்பாளையத்தில் ஒரு பள்ளிக்கூடம். பள்ளிக் கூடத்துக்குப் பின்னால் திறந்த வெளி.

"உன் அப்பாவுக்கு என்ன வேலையடா, சின்னு?" என்றான் அப்புகுட்டி.

"உன்னுடைய அப்பாவுக்கு என்ன வேலை முதலிலே சொல்லு. நான் அப்புறம் சொல்லுகிறேன்" என்றான் சின்னு.

"என் அப்பா வீடு கட்டுகிற வேலை செய்கிறார். செங்கல், சுண்ணாம்பு, கரண்டி, இதைப்பற்றியெல்லாம் உனக்கு என்ன தெரியும்? உனக்கு ஒன்றும் தெரியாது" என்றான் அப்புகுட்டி.

"எனக்கு அது ஏன் தெரிய வேண்டும்? நான் புஸ்தகம் படித்துக் கச்சேரி வேலைக்குப் போறேன்" என்றான் சின்னு.

"கச்சேரியிலே என்ன வேலை? பெருக்கிக் கூட்டுவாயா?" என்றான் அப்புகுட்டி.

இருவருக்கும் சண்டை உண்டாயிற்று.

"பயல்களே! சண்டை ஏன்டா போடுகிறீர்கள்?" என்று சொல்லிக் கொண்டு புகுந்தான் வள்ளியப்பன்.

"உன் அப்பா என்ன வேலை செய்கிறார், வள்ளி?" என்றான் அப்புகுட்டி.

"என்னப்பா கரூரில் பாங்கிக் கடை வைத்திருக்கிறார்" என்றான் வள்ளியப்பன்.

"அது என்ன கடையடா? கடையில் என்ன விற்கிறார்?" என்று சின்னு கேட்டான்.

"அங்கே ஒன்றும் விற்கிறதில்லை. பணத்தைப் பெட்டியில் போட்டு வைப்பார்கள். அது குட்டிகள் போடும். குட்டிகளை எடுத்து இன்னொரு பெட்டியில் போட்டு மூடுவார்கள். இன்னும் குட்டிகள் உண்டாகும். இப்படியே பெட்டி பெட்டியாக நிறையும்" என்றான் வள்ளியப்பன்.

"அடே, கோழி வளர்க்கிறார் இவன் அப்பா! கோழிதானே முட்டை இடும், பணம் எங்கேயாவது குட்டி போடுமா?" என்றான் சுப்பு.

"உனக்குத் தெரியாது. எங்கள் கடையில் நிஜமாகப் பணம் குட்டி போடுகிறது. வாத்தியாரைக் கேட்டுப் பார், வேண்டுமானால்" என்றான் வள்ளியப்பன்.


"வாத்தியாரைக் கேட்டால் அடித்துப் போடுவார்" என்றான் அப்புகுட்டி.

* * *

"சின்னு பிணங்கு போய் விட்டான். உனக்குத் தெரியுமா?" என்றான் அப்புகுட்டி.

குழந்தைகள்

ராஜாஜி



"ஏன் போனான்?" என்றான் சுப்பு.

"அவன் அப்பா வீட்டை வள்ளியப்பனுடைய தகப்பனார் ஏலம் போட்டு, அவனை வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்" என்றான் அப்புகுட்டி.

"ஐயோ, பாவம்!" என்றான் சுப்பு



"வள்ளியப்பனின் அப்பா கடன் கொடுத்திருந்தார். கண்ணனுடைய அப்பா கள்ளு குடித்து விட்டு எல்லாம் போக்கடித்து விட்டானாம்" என்றான் அப்புகுட்டி.

"கள்ளு குடித்தால் எல்லாப் பணமும் போய்விடுமா?" என்று கேட்டான் சுப்பு.

"போய்விடும்" என்றான் அப்புகுட்டி.

"ஆனால் ஏன் வாங்கிக் குடிக்கிறார்கள்?" என்று கேட்டான் சுப்பு.

"நீ கள்ளு மோந்து பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான் அப்புகுட்டி.

"இல்லை, எப்படி யிருக்கும்?"

"கெட்ட நாற்றம். கிட்டப் போகவே முடியாது!" என்றான் அப்புகுட்டி.

"பினாங்கு வெகு தூரமா?" என்றான் சுப்பு.

"எனக்குத் தெரியாது" என்றான் அப்புகுட்டி.

"வாத்தியாரைக் கேட்கலாம்" என்றான் சுப்பு.

"ஐயோ! அடிச்சப் போடுவார்" என்றான் அப்புகுட்டி.

இந்தக் குழந்தைகளுக் கெல்லாம் வாத்தியாரைக் கண்டால் வெகு பயம். அவர் எப்போதும் கோபத்திலேயே இருப்பார். இன்ஸ்பெக்டருக்கு அவர் ரொம்ப இஷ்டம். குச்சப் பாளையம் குழந்தைகளின் துரதிர்ஷ்டம்.

வாத்தியார்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. எல்லா வாத்தியார்களும் இப்படி யில்லை.



ஓநாயின் உதவி!

ஒரு குடியானவன் 'சர்க்கோ' என்ற நாயை வளர்த்து வந்தான். அந்த நாய்க்கு வயதாகி விட்டதால் அவன் அதை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். சர்க்கோ மனமுடைந்து துக்கத்துடன் வயல் வெளியில் போய்ச் சுற்றிக் கொண்டிருந்தது. எதிரே வந்த ஓர் ஓநாயிடம் "பல வருஷ காலம் என் எஜமானரிடம் அன்பாகவும் விசுவாசத்தோடும் உழைத்து வந்தேன். அவர் வீட்டைக் காவல் காத்தேன். இப்போது எனக்கு வயதாகி விட்டதென்று என்னை வெளியே துரத்தி விட்டார்" என்று புலம்பியது.

ஓநாய் கூறியது:

"வேண்டுமானால் நான் உனக்கு ஒரு உதவி செய்கிறேன். அப்படிச் செய்தால் நீ மீண்டும் உன் எஜமானருடைய ஆதரவைப் பெறலாம்."

சர்க்கோ சந்தோஷத்துடன் "என்ன அது?" என்று கேட்டது.

"உன் எஜமானரும் அவர் மனைவியும் இங்கே வயலுக்கு வருவார்கள். அப்போது உன் எஜமானி அம்மாள் தன் கைக் குழந்தையை அதோ அந்தக் கோதுமை வைக்கோல் மீது படுக்க வைப்பாள். அப்போது உடனே நீ குழந்தையின் அருகில் போய் இரு. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நான் அங்கே வந்து அக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறேன். நீ உடனே கோபமாகக் குரைத்துக் கொண்டே என்னைத் துரத்த வேண்டும். நான் உனக்குப் பயந்த மாதிரி நடித்துக் குழந்தையைப் போட்டு விட்டுப் போய் விடுகிறேன்" என்றது ஓநாய்.

ஓநாய் சொன்னபடியே நாயும் வயல் வெளியில் காத்துக் கொண்டிருந்தது. குடியானவனும் அவன் மனைவியும் வந்து, குழந்தையை வைக்கோலில் படுக்க வைத்து விட்டு வயலில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று வந்த ஓநாய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேகமாக ஓட்டம் பிடித்தது. சர்க்கோ குரைத்துக் கொண்டே ஓநாயைத் துரத்திற்று. நாய் குரைப்பதைக் கேட்டு விட்டுக் குடியானவனும் அவன் மனைவியும் வேகமாக ஓடி வந்து பார்த்தார்கள். தங்கள் அருமைக் குழந்தையைக் காணவில்லை.

சற்றுத் தூரத்தில் ஓநாய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடுவதைப் பார்த்து விட்டு இருவரும் அலறினார்கள்.

"சர்க்கோ, ஓடு, பிடி, ஓநாயை விடாதே!" என்று பலமாகக் கூக்குரலிட்டான் குடியானவன்.

சர்க்கோ பாய்ந்து ஓடி ஓநாயைத் தடுத்து நிறுத்தியது. ஓநாய் 'சர்க்கோ'வுக்குப் பயந்தது போல் பாசாங்கு செய்து விட்டுக் குழந்தையை அந்த இடத்திலேயே போட்டுவிட்டு மறைந்து போய் விட்டது.

குடியானவன் ஓடிவந்து குழந்தையை மகிழ்ச்சியுடன் எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். சர்க்கோ சாமர்த்தியமாகக் குழந்தையைக் காப்பாற்றியதையும், அதன் எஜமான விசுவாசத்தையும் எண்ணி வியந்தான்.

அதற்கு நிறைய ஆகாரம் கொடுத்து வயிறு நிறையச் சாப்பிடச் சொன்னான். "உன்னுடைய உதவியை மறக்கவே முடியாது. நீ பழையபடி என் வீட்டுக்கே வந்து விடு. இனி என்றென்றும் என்னுடனேயே இருந்து விடு" என்று கூறிச் சர்க்கோவைக் கையோடு அழைத்துச் சென்றான்.

அன்று மாலையில், குடியானவன் தன் மனைவியிடம் பாயசம் தயார் செய்யச் சொல்லி அதை 'சர்க்கோ'வுக்கு வைத்தான். பாயசம் ரொம்பச் சூடாக இருந்தது. சர்க்கோவின் நாக்கு சுட்டு விடப் போகிறதே என்பதற்காக விசிறியால் பாயசத்தை ஆற வைத்தான்.

பாயசத்தைச் சாப்பிட்டு விட்டுச் சர்க்கோ தன் பழைய இடத்தில் போய்ப் படுத்துக் கொண்டது.

ஓநாய் செய்த உபகாரத்தை நினைத்து ஆச்சரியப்பட்டது. இந்தப் பழைய

நிலைமை தனக்கு ஏற்பட்டதற்கு ஓநாயல்லவா காரணம்? ஆகவே, ஓநாய்க்கு ஏதாவது பிரதி உபகாரம் செய்ய நினைத்தது.

* * *

குடியானவனுடைய மகளுக்குக் கலியாணம் நிச்சயமாயிற்று. சர்க்கோ இதுதான் சமயமென்று ஓடிப்போய் ஓநாயைக் கண்டு "என் எஜமானர் பெண்ணுக்குக் கலியாணம் நடக்கிறது. நீ அவசியம் வரவேண்டும். ஞாயிற்றுக்கிழமை இரவு தோட்டத்துப் பக்கமாக வா. நான் உன்னை உள்ளே அழைத்துச் செல்கிறேன்" என்றது.



சர்க்கோ சொன்னபடியே ஓநாய் குறித்த நேரத்துக்கு வந்து சேர்ந்தது. சர்க்கோ ஓநாயை உள்ளே அழைத்துப் போய் ஒரு கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொள்ளும்படி கூறியது. கலியாணம் ஏகதடபுடலாக நடந்து கொண்டிருந்தது. சர்க்கோ உள்ளே சென்று ஓநாய்க்கு இரண்டு மைசூர்ப்பாகும் பாயசமும் எடுத்து வந்து கொடுத்தது. அவற்றைச் சாப்பிட்ட ஓநாய்க்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"நான் பாடப் போகிறேன்" என்றது ஓநாய்.

சர்க்கோ பயந்து போய் "ஐயையோ, உன் குரலைக் காட்டிவிடாதே. வேண்டாம்" என்று கெஞ்சியது.

"ஊஹூம்; நான் நிச்சயம் பாடத்தான் போகிறேன்" என்று பிடிவாதம் பிடித்தது ஓநாய்.

"நீ பாடாமலிருந்தால் உனக்கு இன்னும் இரண்டு மைசூர்ப்பாகு தருகிறேன்" என்றது சர்க்கோ.

"சரி கொண்டா!" என்றது ஓநாய். சர்க்கோ கொண்டு வந்து கொடுத்த மைசூர்ப்பாகுகளைச் சாப்பிட்டு விட்டு ஓநாய் ஆனந்தம் தாங்காமல் பாட ஆரம்பித்து விட்டது.

கலியாண வீட்டுக்குள் ஓநாய் கத்துவதைக் கேட்ட விருந்தாளிகள் தடியை எடுத்துக் கொண்டு அதை அடிக்க ஓடி வந்தார்கள்.

சர்க்கோ இந்த ஆபத்திலிருந்து ஓநாயைக் காப்பாற்றுவதற்காக ஓநாயின் மீது போய்ப் படுத்துக் கொண்டு அடிக்க வருபவர்களைத் தடுத்தது.

இதைக் கண்ட குடியானவன், "அடிக்காதீர்கள்; ஓநாயை அடித்தால் சர்க்கோ மீது அடிபடும். ஆகையால் இரண்டையுமே அடிக்காதீர்கள். சர்க்கோ ஓநாயைத் துரத்தி விடும்; கவலை வேண்டாம்" என்றான்.

பிறகு சர்க்கோ ஓநாயை வெளியே அழைத்துக் கொண்டு போய் விட்டு விட்டுக் கூறியது:

"நீ என்னிடம் அன்பு காட்டி எனக்குப் பெரிய உபகாரம் செய்தாய்; இப்போது பதிலுக்கு நானும் உனக்கு உதவி செய்து விட்டேன்."

இரண்டும் பிரிந்து சென்றன. பிறகு, சர்க்கோ தன் வாழ்நாள் முழுதும் குடியானவனுடன் சந்தோஷமாக வாழ்ந்தது.

—உக்ரேனியக் கதை.



"என்ன ஐயா, இது? பெண் கல்யாணம் நிச்சயம் செய்வதைப் பற்றி மிளகாய் மில்லிலேயா பேசுவது? எல்லாரும் அபசகுனமாகத் தும்முகிற இடமாயிற்றே?"



விநோத முகங்கள்

"விகவும்"

மொட்டையும் முத்துவும் ஏதாவது வியாபாரம் செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். "என்ன வியாபாரம் செய்வது?" என்ற யோசனை அவர்களுக்கு உண்டாயிற்று.

"குழந்தைகள் தங்கள் முகத்தில் வேடிக்கையாகப் போட்டுக் கொள்ளும் அட்டையில் செய்த விநோத முகங்களை வாங்கி விற்ருல் நிறைய லாபம் கிடைக்கும்" என்ருன் மொட்டை.

"பேஷான யோசனை!" என்று அதை ஆமோதித்தான் மொட்டையின் நண்பன் முத்து.



பிறகு இருவரும் தங்களிடமிருந்த காசுகளைச் சேர்த்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போய் விதம் விதமான விநோத முகங்களைத் தேர்ந்தெடுத்து வாங்கினர்கள்.

இருவரும் தனித் தனியாக வியாபாரத்துக்குக் கிளம்பினர்கள். மொட்டை தனக்குத் தெரிந்த ஒரு பையனுடைய வீட்டுக்குப் போனான். அந்தப் பையனுடைய தகப்பனர் வாசலில் நின்று கொண்டிருந்தார். மொட்டை அவரைப் பார்த்து, "ஸார்! இந்த முகம் வேணுமா? உங்க பையனுக்கு இதை வாங்கிக் கொடுங்களேன்" என்ருன். அவருக்குக் கோபம் வந்து விட்டது. காரணம் அவருடைய முகமும் அவன் காட்டிய அந்த விநோத முகமும் ஒரே மாதிரி இருந்தது.



உடனே அவர், "பயலே! உனக்கு என்ன திமிர்! இந்த விகாரமான விநோத முகத்தைக் காட்டி என்னைப் பரிகாசமா செய்கிருய்? உன்னை விட்டேனு, பார்!" என்று கூறி மொட்டையின் தலையில் சரியான குட்டு ஒன்று வைத்து அனுப்பினர். முத்து தன் நண்பன் வீட்டுக்குப் போய் வியாபாரம் செய்தான். இதே மாதிரி அவன் கொண்டு போன விநோத முகமும் அந்த வீட்டுக்காரரின் முகத்தைப் போல் இருந்ததால் முத்துவுக்கும் உதை கிடைத்தது. இருவருக்கும் ஒரு முகம் கூட விற்கவில்லை.

மொட்டையும் முத்துவும் அடிபட்டது தான் மிச்சமாயிற்று. இருவரும் தங்கள் சொந்த முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் சந்தித்துக் கொண்டார்கள். "நீ எத்தனை முகம் விற்ருய்? உனக்கு என்ன கிடைத்தது?" என்று ஒருவனைப் பார்த்து ஒருவன் கேட்டுக் கொண்டான்.

"எனக்குக் குட்டு கிடைத்தது!" என்ருன் மொட்டை.

"எனக்கு உதை கிடைத்தது!" என்ருன் முத்து.

"சரிடா; போதும் இந்த வியாபாரம்! வீட்டுக்குப் போகலாம்!" என்ருன் மொட்டை அலுத்துக் கொண்டே.

"சீசீ! இப்படியே வீட்டுக்குப் போனல் நன்ருயிருக்காது. நம் முகத்தில் அசடு வழியும். ஆகையால் நாம் நம்முடைய வருத்தத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் போகவேண்டும்" என்ருன் முத்து.


"அதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டான் மொட்டை.

முத்துவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தன் அசடு வழியும் முகத்தை மறைக்க வழி கண்டு பிடிப்பதில் அவன் மனம் தீவிரமாக ஈடுபட்டு வேலை செய்யத் தொடங்கியது.

இச் சமயத்தில் மொட்டை துள்ளிக் குதித்து, "இதோ இந்த இரண்டு சிரிக்கும் அட்டை விநோத முகங்களையும்மாட்டிக் கொண்டு போகலாம்" என்று யோசனை கூறினுன்.

"பேஷ்! சரியான யோசனை! நீ ரொம்பக் கெட்டிக்காரன் தான்! நம்முடைய முகத்திலுள்ள வருத்தத்தையும் அசட்டுக் களையையும் மறைப்பதற்கு அது தான் சரியான வழி!" என்ருன் முத்து.

இருவரும் 'போலி' சந்தோஷத்துடன் வீடு போய்ச் சேர்ந்தார்கள்!




வேடிக்கை விளையாட்டு

" நம்ம பயல் கணக்குப் பரீட்சையில் நூற்றுக்கு 98 மார்க்கு வாங்கி விட்டான். இன்னும் இரண்டு மார்க்குதான் வாங்காமல் போயிட்டான்."

" அதெப்படி வாங்குவான்? அந்த இரண்டு மார்க்கைத்தான் நம்ம பயல் வாங்கி யிருக்கானே!"






கோஹினூர் வைரம்

மிகப் பிரகாசம் பொருந்தியதும் அபூர்வமானதுமான கோஹினூர் வைரம் முதல் முதல் 1304-ம் ஆண்டில் டில்லி சக்கரவர்த்தியிடம் இருந்தது. பிறகு இந்தியாவுக்கு வந்த கிழக்கிந்திய கம்பெனியார் 1849-ல் அதைக் கைப்பற்றி விக்டோரியா மகாராணிக்குப் பரிசாக அளித்தனர். இந்த வைரம் 106-கேரட் எடை உள்ளது. இப்போது எலிசபெத் மகாராணி மகுடத்தில் பிரகாசிக்கிறது.





படத்திலுள்ள மூன்று சுழிகளையும் அவற்றைச் சுற்றியுள்ள வட்டத்தையும் கையை எடுக்காமல் ஒரேயடியாகப் பென்ஸிலால் வரைய வேண்டும். முடியுமா? முடியும். அடுத்த படத்திலிருப்பதைப் போல் காகிதத்தை மடித்துக் கொண்டு மூன்று சுழிகளையும் வட்டத்தையும் உஷாராக வரையவும் பிறகு காகிதத்தை விலக்கி விட்டுக் கையை எடுக்காமல் வட்டத்தைப் பூர்த்தி செய்யவும்.




இந்தக் கட்டத்திலுள்ள அத்தனை முத்துக்களையும் ஆறு நேர்க் கோடுகளால் இணைக்க வேண்டும். பென்ஸிலைக் கடைசி வரை எடுக்கக் கூடாது.

(விடை அடுத்த இதழில்)

பற்களைப் பரிசுத்தமாக்கும்

மக்ளீன்ஸ்!

இம் மூன்று கோப்பைகளை பற்கள் என பாவனை செய்வீர்களானால் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம். பற்களைப் பாதுகாக்க விரும்புவோர், 'லைப்பாயிட்ஸ்'ஸினால் ஏற்படும் அபாயத்தை அறிய வேண்டியது அவசியம்.



மக்ளீன்ஸ் எளிதில் துலக்க முடியாத பற்களின் இடுக்குகளில் முண்டிப் புகுந்து துலக்குகிறது. எனவே

பற்சிதைவைத் தவிர்க்க சிறந்த சாதனமாக இருப்பது மக்ளீன்ஸ் ஒன்றே

பற்களின் மேல் படர்ந்திருக்கும் 'லைப்பாயிட்ஸ்' கலந்த பாசி பார்ப்பதற்கு அசிங்கமாயிருப்பதோடன்றி அபாயகரமான தீங்கூட என்று பல் டாக்டர்கள் நிரூபிக்கின்றனர். 'லைப்பாயிட்ஸை' எளிதில் சுத்தம் செய்ய முடியாது. இவை தவறாமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச் சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய 'லைப்பாயிட்ஸை' அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்ய வேண்டும். 'லைப்பாயிட்ஸை' கரைக்கக் கூடிய விசேஷமான திரவம் மக்ளீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்ளீன்ஸ் 'லைப்பாயிட்ஸை' லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச் செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினந்தோறும் இருமுறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.

க்ளோரோபில் சேர்ந்த வகையும் கிடைக்கும்




MTY-41 TAM

வஸந்தத்தின் புத்துணர்ச்சி

உங்களுக்கு
இன்றும்.... என்றும்!

காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தகாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது- உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையமையும் பன்மடங் காக்குகிறது.





காஷ்மீர் பொக்கே

டால்கம் பௌடர்

ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு

கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது



இல்லாள் அகத்திருந்தால்...

எதிர்பார்த்தது நடந்து விட்டது. பயந்து பயந்து, தன்னுடைய சாகஸங்களை யெல்லாம் உபயோகித்தும், மனைவி குணத்தைக் காட்டி விட்டாள்.

''உங்களுக்கு உங்கள் தங்கை உயர்த்தி. நான் அலட்சியம்!''

இந்த வார்த்தையை வரவொட்டாமல் பாடுபடுவதற்கு ராமதுரை செய்த காரியங்கள் அத்தனையும் வீணாயின. சிரித்துச் சமாளித்துக் கொண்டு, ''நீ சொன்னாலும் அவள் உயரம்தான்'' என்று சிலேடை பேசினான். அன்பு பெருகும்போது சிலேடைக்கு உள்ள ருசி பாதாம்பருப்பு மாதிரி; கோபம் வரும்போது சிலேடை சொன்னால் மக்கிப் போன பாதாம் பருப்புப் போல அத்தனையும் கொடிய கசப்புத்தான்!

''நான் குட்டை என்பதைத் தண்டோரா போட்டுக் கொண்டு தெருத் தெருவாகத் தட்டுங்கள். என் அப்பா கோடைக்கானலுக்கு வா வா என்று அருமையாக எழுதியதை அவமதித்ததற்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.''

''இப்போது என்ன கெட்டுப் போய் விட்டது? நீ போகும்வரையில் கோடைக்கானல் இருக்கத்தான் செய்யும். போய் வா.''

இதுவும் வேடிக்கையாகச் சொன்ன பேச்சு. தப்பர்த்தம் செய்து கொள்ள வேண்டுமென்றால், மனசுக்குள் ஆங்காரம் இருந்தால் எதையும் இடக்காக அர்த்தம் செய்து கொள்ளலாம். ராமதுரை சொன்னதைத் தலைமேற் கொண்டவள் போன்று கோடைக்கானலுக்குப் புறப்பட்டாள் சரசா.

''வீட்டுக்கு விருந்தாளி, அதுவும் என் தங்கை வந்திருக்கிறாள் என்பதால்தானே போகிறாய்? பேஷாகப் போ.''

''நான் போய் விட்டால், நீங்கள் இஷ்டப்படி செலவு செய்து கடனை என் தலையில் வைக்கலாம். அப்படித்தானே?''

''சரி.'' ராமதுரை பேச்சைச் சுருக்கிக் கொள்ள முயன்றான். தனக்கும் மனைவிக்கும் நடக்கும்சச்சரவு தங்கையின் காதிலே விழுந்து விடக்கூடாது என்ற பயம். முன்னெச்சரிக்கையாக, ''சரசா கோடைக்கானலுக்குப் போவதாக இருந்தது. நீ வருகிறேன் என்று எழுதியதால், நீ வந்த பின்னர்தான் போகலாம் என்று இருக்கிறாள்'' என்று தங்கை வந்ததும் வராததுமாக ஞாபகமாகச் சொல்லியிருந்தான். மனைவி போகும் நிலை யேற்பட்டால், தங்கை பாரு தன்னை வித்தியாசமாக எண்ணாதிருக்க முன்யோசனையுடன் அவ்வாறு ஒரு அணை போட்டிருந்தான்.

சரசா போவதற்கு ஆயத்தம் செய்தாள். சண்டைக்குக் காரணம் அற்பம். சினிமாவுக்கு டிக்கெட் வாங்கும் போது தங்கை முதல் வகுப்பு வாங்கும்படி சொன்னாள். உடனே ராமதுரை வாங்கி விட்டான். சரசா சொன்னால், சற்று ஆட்சேபணை செய்து விட்டு முதல் வகுப்பு டிக்கெட் வாங்கி யிருப்பான். பாரு பேச்சுக்கு ஆட்சேபணை சொல்லாமல் நடந்ததால் சரசாவுக்குக் கோபம். அதிலிருந்து பலவாறாகப் பேச்சு ஆரம்பித்தது. தாழ்வு மனப்பான்மை வந்து விட்டால், அது என்னென்னவோ சொல்லும்; சொல்லவும் தூண்டும். சரசா அத்தனையும் எண்ணினாள், சொன்னாள். ராமதுரை தங்கையின் மனம் கோணாதிருக்கவும், அன்போடு நடத்தும் எண்ணத்தோடும் கொஞ்சம் தாராளமாக நடந்து கொண்டான். தன்னுடைய சம்பள உயர்வையும், தன்னுடைய பாசத்தையும் காட்டுவதற்கு வேறு யார் இருக்கிறார்கள்?

சிநேகிதி வீட்டுக்குப் போய்த் திரும்பி வந்த சமயம், சரசா மூட்டை கட்டிக் கொண்டிருந்தாள். தமையன் நாற்காலியில் 'உர்' என்று இருந்தான். பாரு இந்தக் காட்சியை இணைத்து முடித்துப் போட்டுச் சற்று யோசனை செய்தாள். தன் வருகை காரணமாகத் தான் சரசா கோபித்துக் கொண்டு போகிறாள் என்பதை அறிய அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அவளும் ஒரு பெண்தானே!

"ஏன் சரசா, எந்த ஊருக்குப் போகிறாய்?"

"என் அப்பா கோடைக்கானலுக்கு வரும்படி சொன்னார். நான், நீங்கள் வந்த பிறகு வருவதாகச் சொன்னேன். நேற்றுக்கூடக் கடிதம் வந்தது. போய் ஒரு வாரம் இருந்து விட்டு வந்து விடுகிறேன்."

கைதேர்ந்த நடிகையைப் போல் மனத்துக்குள் இருப்பதை முகத்திலே தெரியாமல் மாற்றும் திறமை சில பெண்களுக்கு இயல்பாக அமைந்திருப்பதைப் பாரு கவனித்திருக்கிறாள். சரசாவிடமும் அந்தத் திறமையிருப்பதை அவள் கவனித்தாள்.



"சந்தோஷம். எனக்காகக் காத்திருந்து இப்போது போகிறாய். கோடைக்கானலுக்குப் போய் விட்டு ஒரு வாரத்தில் வந்து விடுவாயா?" என்று கேட்டான் பாரு.

"அநேகமாக வந்து விடுவேன்."

"நான் இங்கிருந்தபடியே பம்பாய் போய் விடுவேன். நீ வரவில்லையென்றால் இப்போதே சொல்லிக் கொள்ளுகிறேன்."

சரசா புறப்பட்டுப் போய் விட்டாள். எதுவுமே நடக்காதது போல் ராமதுரை வண்டி கொண்டு வந்தான். அவள் போவதற்கு உதவிகள் செய்தான். சிரித்துக் கொண்டு இரண்டாம் வகுப்பு டிக்கட்டு வாங்கிக் கொடுத்தான். மாமனாருக்குத் தந்தி அடித்து விட்டதாகச் சொன்னான். தனக்கும் தன் மனைவிக்கும் பாரு காரணமாகச் சண்டையென்று மாமனாருக்குத் தெரியாமல் இருக்கச் செய்தான். ஆனால் சரசாவின் உள்ளம் 'என்னைத் துரத்துவதில் இத்தனை சந்தோஷமா? நான் பார்க்கும் போதே பணம் தண்ணீர் பட்டபாடாகச் செலவாகிறது. நான் இல்லா விட்டால் பாரு பட்டணத்தையே விலைக்குக் கொண்டு போய் விடுவாள். எனக்குத் தெரியாமல் கடன்கூட வாங்கித் தவிப்பாள். அருமைத் தங்கைக்கு இத்தனை பவிசு?' என்று மனசுக்குள் நினைத்ததை ரயில் பிளாட்பாரத்தில் வைத்துச் சொல்லியும் விட்டாள்.

அப்போதும் சிரித்துக் கொண்டு வழி அனுப்பினான் ராமதுரை.

ஒரு வாரம் ஓடி விட்டது.

தந்தி வந்தது.

"என்ன அண்ணா, சிரித்துக் கொண்டு வருகிறாய்? தந்தியா? என்ன விஷயம்?" என்று கேட்டாள் பாரு. அவள் மனம் சஞ்சலத்தால் துடித்தது. கண்களிலே கேள்விக் குறிகள் துள்ளின. அவள் ஆதங்கத்தை அறியாமல் ராமதுரை சிரிக்கிறான்.

"என்ன அண்ணா, தந்தியைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்?"

"திருமதி சரசம்மா அவர்கள் இரு உடம்புக்குத் திருக் காய்ச்சல் வந்துள்ளதாம். உடனே வரும்படி திருவாளர் மாமனார் அவர்கள் தந்தி கொடுத்துள்ளார்கள்."

ராமதுரையின் அலட்சியம், கேலிக் குரல் பாருவுக்குப் பிடிக்க வில்லை. சரசாவுக்கு உடம்பு ஏதாவது செய்திருக்க வேண்டும். இல்லாது போனால் தந்தி கொடுப்பாரா?

"அண்ணா, அலட்சியம் செய்யாதே! சரசாவின் உடம்பு எப்படி இருக்கிறதோ? உடனே புறப்பட்டுப் போய்ப் பார்த்து விடு. நான் இங்கே இருப்பதால் நீ உடனே போக வேண்டும்" என்று அவசரப்படுத்தினாள்.

ராமதுரைக்குச் சரசாவின் உடம்புக்கு ஒன்றும் இருக்காது என்பது தெரியும். பாருவை ஊருக்கு அனுப்புவதற்காகத் தந்தி வந்திருக்கிறது. தான் போவதா வேண்டாமா என்ற சிந்தனையில் ஈடுபட்டான்.


வழக்கமாகச் சரசா எழுதுகின்ற இனிமையான கடிதம் ஒன்றும் வரக் காணோம். கோடைக்கானல் போனதற்கு ஒரு கார்டு வந்தது. அதை மாமனார் எழுதியிருந்தார். "நீங்களும் உங்கள் தங்கை பாருவும் இங்கே வரலாம். சீசன் வெகு சுகமாக இருக்கிறது" என்ற வரிகள் அவன் கவனத்துக்கு வந்தன. அதை எழுதும் போது சரசாவின் வருகைக்குக் காரணம் அறியாத அப்பாவி மாமனார் எழுதியிருக்கிறார் என்று நினைத்தான். இப்போது தந்தி வந்ததும், 'எல்லாம் அறிந்தவர். மகள் செய்கைக்குக் கையாள்' என்ற எண்ணமே மிஞ்சியது.

"அண்ணா, நீங்கள் போகா விட்டால் சரசாவின் மனம் நொந்து விடும். புறப்படுங்கள்" என்றாள் பாரு.

"ஆமாம்! கோடைக்கானல் மலையிலே அவள் இருதயம் விழுந்து சுக்குநூறாக ஆயிற்றாம். நான் போய் அதைச் சரிப்படுத்த வேண்டும். நீ ஊருக்குப் போன பிறகு பார்த்துக் கொள்ளுகிறேன்."

"இல்லை, அண்ணா!" என்ற போது பாருவின் கண்களிலே நீர் முட்டி நின்றது.

"குடும்பம் என்றாலே கஷ்டம் உண்டு. சரசாவின் மனப் போக்கு உன் மனத்தை வேதனை


இப்படித்
தோற்ற
மளிக்க
(இப்படிக்குப் பதிலாக)
இந்த அடை
யாளம் இருக்
கிறதா என்று எப்
பொழுதும் கவனி
யுங்கள்
'SANFORIZED'
நீங்கள் பருத்தித் துணி அல்லது ரெடிமேட் உடைகள் வாங்கும்பொழுது, 'ஸான்பொரைஸ்ட்' அடையாளமிருக்கிறதா என்று எப்பொழுதும் கவனியுங்கள். உடைகள் சுருங்குவதினால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து இதுவே தகுந்த பாதுகாப்பு!
·SANFORIZED·
SHRUNK FABRIC
ஸான்பொரைஸ்ட் ஸர்வீஸ், 'பாரத்', நேதாஜி ஸுபாஷ் ரோடு,
மெரின் ட்ரைவ், பம்பாய் 2



உங்கள்
தாகத்தை தணிக்க
கூல் ரெக்ஸ்
அருந்துங்கள்!
அது உற்சாகமளிக்கக்கூடிய புதியதோர் பானம்
இப்பொழுது பாக்கெட்டில் கிடைக்கிறது
தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு வித பானங்கள்
ஆரஞ்சு, ராஸ்ப்பெரி, ஸ்ட்ராபெரி, பைன் ஆப்பிள்
கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிட்.
பம்பாய்—1
கல்கத்தா—1
COOL-REX

செய்தால் மறந்து விடு. என்னசெய்வது? மனைவி என்றாலே சமயத்தில் புருஷனைத் தவிக்க விடுபவள்தான் போல் இருக்கிறது! எனக்கு வெளியே சொன்னால் துக்கம். உன்னிடம் சொல்லாமல் நான் வேறு யாரிடம் சொல்கிறது?''

ராமதுரை சொல்லச் சொல்லப் பாருவின் அழுகை அதிகமாகி விட்டது. ஊற்றுப் போல் கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

''அண்ணா! நான் நல்லவன் என்று எண்ணிக் கொண்டு நீ இப்படிச் சொல்லுகிறாய். என்னுடைய சரசாவாவது நான் வந்தவுடன் போவதாக இருந்தாள். அவள் செய்ய நினைத்த மரியாதையைக் கூட நான் செய்யவில்லை. என்னுடைய நாத்தனார் வரப் போவதாகக் கடிதம் எழுதியதும் பம்பாயிலிருந்து நான் அவரிடம் கோபித்துக் கொண்டு பட்டணம் புறப்பட்டு வந்து விட்டேன். அவருக்கு வாய்த்த தங்கையின் குழந்தைகள் அத்தனையும் வானரங்கள். அத்தனையும் எனக்கு எதிரி! அதற்குப் பயந்து நான் இங்கே வந்தேன். சரசாவின் குணம் எவ்வளவோ தேவலை'' என்ற போது ராமதுரையின் உள்ளத்திலே வீசிக் கொண்டிருந்த புயல் தணிந்தது.

உலகம் எங்கேயும் ஒரே மாதிரி பாஷை தான் பேசப்படுகிறது. ஒரே வித மனசுதான் வியாபித்திருக்கிறது. ராமதுரைக்குச் சரசாவின் பெருமை நன்றாகத் தெரிய வந்தது.

''பாரு, நீ கோபித்துக் கொண்டு வந்தவள் என்று அத்தான் ஒரு வரிகூட எனக்கு எழுதவில்லையே!''

''மனைவியின் துர்க் குணத்தை வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ள எந்தப் புருஷனுக்காவது மனசு வருமா? என்னை நல்லவளாகத் தான் அவர் நடத்துவார். நீ என்னைக் கௌரவமாக நடத்த வேண்டுமென்றால் அவர் அனுமதி பெற்று வந்தவள் என்று தானே என்னைப்பற்றி எழுதியாகவேண்டும்?''

''அப்படியா ரகசியம்? உன் புருஷனுக்கு இருக்கும் பெருந்தன்மை எனக்கு இல்லாமற் போய் விட்டது. அது சரி! உன்னுடைய நாத்தனார் செங்கல்பட்டிலிருந்து எப்பொழுது பம்பாய் வந்தாள்?''

''வருவதாக எழுதினாள். அன்றைக்கே நான் இங்கே புறப்பட்டு வந்து விட்டேன்.''

''பாரு, நான் கோடைக்கானல் போய் வருகிறேன். நீ வீட்டில் இரு. என் மாமனார் என்னைப் பற்றிக் கேவலமாக எண்ணுகிறாக்க வேண்டும். சரசாவை நானாக அனுப்பியது போலப் பாசாங்கு செய்து விட்டு வந்து விடுகிறேன்.''

தங்கை பாருவிடம் சொல்லிக் கொண்டு ராமதுரை கோடைக்கானலுக்கு வந்தான்.

பங்களாவுக்குள் நுழைந்ததும் அங்கே கண்ட காட்சி அவனைத் திகைப்பில் ஆழ்த்தியது. அவன் மாமனார் பெரியசாமி ருத்ரமூர்த்தியாக விளங்கினார். அவர் தம் மகளிடம் இரைந்து கூறிக் கொண்டிருந்தது அவன் காதில் தெளிவாக விழுந்தது.

''இந்தாம்மா சரசா! நீ உடனே புறப்பட்டுப் போய்விடு. உனக்காக நான் ஒரு கடிதமும் எழுத மாட்டேன். பெண்சாதிக்கு என்று கடமைகள் உள்ளது போல, தாய் தந்தையர், அக்கா, தங்கை யென்பவர்களுக்கும் ஒரு சில கடமைகள் உண்டு. நீ கோபப்பட்டு வந்தது தவறு. ஓடு. இப்பொழுதே போய்ச் சேர். நாளைக்குள் முடிவு செய்யா விட்டால் நானே இங்கிருந்து கோயமுத்தூருக்குப் போய் விடுவேன்'' என்று கோபமாகச் சொன்னார் சரசாவின் தந்தை.

இதைக் கேட்காதவன் போல, ''சரசாவுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?'' என்று



மனைவி:— உங்களோடு துன்பப் படாமல் அப்பொழுதே எங்கள் அம்மா வீட்டுக்குப் போய் அங்கேயே சுகமா இருந்திருப்பேன்; அம்மா மட்டும் நம் வீட்டிலே வந்து இருந்திருக்க விட்டால்!

* * *

''ஏன் அம்மா உன் மாப்பிள்ளை நன்றாக இருந்தானே. ஏன் இப்படி எலும்பாக இளைத்துப் போயிருக்கிறான்!''

''இல்லையே! நீங்க எப்பொழுது பார்த்தீங்க!''

''அவன் போட்டோவைப் பார்த்தேன்.''

''அவர் எக்ஸ்ரே போட்டோவைப் பார்த்திருப்பீர்கள்!''



* * *

''இந்த வெய்யிலில் தாகம் தாங்காமல் மீன்கள் தண்ணீரெல்லாம் குடித்து விடுகின்றன. அடிக்கடி தண்ணீர் விடவேண்டி இருக்கு!''

''குடித்து விடுகிறதா! வாழ்ந்தது போங்க! அந்தக் கண்ணாடி ஓழுகி ஜலமெல்லாம் வெளியே போய் விடுகிறது.''





தன் மாமனாரிடம் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் ராமதுரை.

"உடம்புக்கு என்ன? சரியாகத்தான் இருக்கிறது. இந்தக் காலத்துப் பெண்களுக்குப் புருஷன் என்றால் தனக்காகச் சம்பாதிக்க ஏற்பட்ட இயந்திரம் என்றுதான் நினைத்துக் கொள்கிறார்கள்!" என்று அலுத்துக் கொண்டார் பெரியசாமி.

"இருக்கட்டும். அப்படி அவர்கள் எண்ணினால்தானே புருஷனும் சீர்திருத்தித் தன்னுடைய பிள்ளைகுட்டிகளை நன்றாக வளர்க்க முடியும்?"

"நமக்கும் நம்முடைய பிள்ளைகுட்டிகளுக்கும் என்பதால் மட்டும் உலகம் உருப்படாது. ஓரளவு பிறருக்கும் நம்முடைய பணம் பயன்பட வேண்டும். அப்போதுதான் உண்மையான அன்பைக் காணமுடியும். கடமைக்கு அப்பால் பயன் இருந்தால் அதுதான் அன்பின் வழியாக வருகின்ற மகிழ்ச்சி."

"சரசா! உடம்புக்கு எப்படி இருக்கிறது?"

சரஸா எழுந்து ஓடிப் போய் விட்டாள். அவள் உடம்பிலே புதிய ஜிலுஜிலுப்பு இருந்தது. முகத்தில் மட்டும் தகப்பனார் புத்தி சொன்னதின் சாயையால் துக்கம் தெரிந்தது.

"அவள் உடம்புக்கு என்ன மாப்பிள்ளை? நீங்கள் ஒரு அப்பாவி. உங்கள் தங்கையையும் அழைத்து வரக்கூடாதா? இந்த ஒரு வாரமாகத் தினம் தினம் சரசா செய்தது, ஓடி வந்தது தப்பு தப்பு என்று திட்டுகிறேன்" என்றார் மாமனார்.

"நான்தான் அவளை இங்கு அனுப்பி வைத்தேன், மாமா!" என்றான் ராமதுரை.

"உங்கள் மனைவியின் பெருமையை வேறு யாரிடமாவது சொல்லுங்கள். அவளைப் பெற்ற என்னிடமே சொல்ல வேண்டாம். தந்தி வந்தால் இவள் ஓடிவரவேண்டுமா? அசடு. இருந்து ஒத்தாசை செய்தால், நாளை ஒரு கஷ்டம் என்றால் உதவி செய்வது பெண்ணுக்குப் பெண்தானே? சரி, விட்டுத் தள்ளுங்கள்."

"இவ்வளவு உலக ஞானம் சொல்லும் தாங்கள் தந்தி அடிக்கலாமா? நான்தான் சரசாவின் குணத்தை மூடி மெழுகி விட்டேன். நீங்கள்..?"

தன்னை முட்டாள் என்றால் எதிராளி மாமனாராக இருந்தாலும் முட்டாள் பட்டம் கட்டாமல் விட மனசு வருமா? ராமதுரை அதைக் கட்டி விட்டான்.

"அது வேறு கூத்தா? இங்கே வா, சரசா! நான் தந்தி கொடுத்தேனாம். உன்னைவிட உன் மாப்பிள்ளை பெரிய ஆள்" என்று கூறிப் பலமாகச் சிரித்தார்.

"இதோ பாருங்கள் தந்தியை!" என்று கூறிக் கொண்டே ராமதுரை தந்தியை எடுத்துக் கொடுத்தான்.

சரசாவின் தந்தை தந்தியை வாங்கிப் பார்த்தார். 'சரசாவுக்குக் காய்ச்சல்-உடனே வரவும்-பெரியசாமி' என்ற வாசகம் அதில் காணப்பட்டது.

"என்னுடைய பெயர் கொடுத்து, யார் தந்தி அடித்தது?"

அந்தப் பங்களாவே இடிந்து விழும்படியாக வீறிட்டார். தகப்பனாரின் கோபத்தை அறிந்த சரசா ஓடோடி வந்தவள், "அப்பா! என்னை மன்னித்து விடுங்கள். நான்தான் செய்தேன். நீங்கள் என்னைத் திட்டுவீர்கள் என்று எதிர்பார்க்காமல் செய்து விட்டேன். நானாகத் திரும்பிப் போகவும் அவமானமாக இருந்தது. அதனால், இவரை வரவழைக்க உங்கள் பெயரில் தந்தி கொடுத்தேன். இனி இம்மாதிரி நடக்க மாட்டேன்" என்று கண்ணீர் மல்க, துக்கக் குரலில் சொன்னாள்.

பெரியசாமியின் கோபம் பஞ்சாய்ப் பறந்து போய் விட்டது. "நான் கோபப்படுவது நீ என்றைக்கும் நல்வாழ்வு வாழ்வதற்காக. வருந்தாதே" என்று கூறினார் பெற்ற பாசம் துடிக்கும் குரலில்.

இக் காட்சியைக் கண்டான் ராமதுரை. தன்னுடைய தங்கையும் மேற்படி குணவதி தான் என்று சொல்ல நாத் துடித்தது. ஆனாலும் கௌரவமாக அடக்கிக் கொண்டான்; அந்த அடக்கம் சரசாவைத் தனிமையில் கண்டபோது பறந்து விட்டது. அவன் தங்கையின் இருக்குணத்தைச் சொன்னபோது இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். கோடைக்கானல் பக்கத்து மலைகள் அத்தனையும் சரிந்து விழும்படியாக எதை எண்ணிச் சிரிக்கிறார்கள் என்று பெரியசாமிக்கு இன்னும் விவரம் தெரியாது!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk; Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited Managing Editor: T. Sadasivam


உங்கள் வீட்டுக்கு வேண்டியது விம்
அப்பழுக்கின்றி விரைவில் சுத்தம் செய்யும்
VIM
HOW TO USE VIM
விம் உபயோகித்து எப்போதாவது தரையை சுத்தம் செய்ததுண்டா? எவ்வளவு எளிதாக, துரிதமாக சுத்தம் செய்கிறது என்று பிரமித்துப்போவீர்கள். விஞ்ஞான முறையில் துலக்கும் பவுடர் விம். அழுக்கும் பசையும் அதை எதிர்த்து நிற்க முடியாது. ஒரு சாக்குணியில் விம் தூவி, தேய்த்து அலம்பி, உலர விட்டுப்பாருங்கள்—பளிச்சென்று எல்லாம் பரிசுத்த மயம்! மேலும் சமையலறை சாமான்கள், எவர்ஸில்வர், சாதாரண பீங்கான், கண்ணாடி சாமான்கள், வாஷ்பேஸின்கள், ஓடுகள் முதலியவைகளுக்கும் விம் உபயோகியுங்கள். அது சிக்கனமானதுகூட! கொஞ்சம் விம் உபயோகித்தாலும் பரிசுத்தம் அதிகமாகச் செய்யும்.
சமையலறை சாமான்கள்
ஸ்டவ்கள்
வாஷ் பேஸின்கள்
விஞ்ஞான முறையில் துலக்கும் பவுடர் விம்

V. 89A-50 TM

No. M 4392
Registered as a Newspaper in Ceylon

ரெக்ஸோனாவில் இப்போது ஓர் புதுமை உள்ளது!

நறுமணம்...

முன்னைவிட...

மிக
அதிகம்!



இப்போது அபரிமிதமான
நறுமணம் கமழும் ரெக்ஸோனு
சோப் நீடித்த புத்துணர்ச்சியளிக்கும்!

R.P. 143-50 TM